# பத்துப்பாட்டுக் காட்சிகள்

# பத்துப்பாட்டுக் காட்சிகள்

ஆசிரியர் :

**டாக்டர் மா. இராசமாணிக்கம்,**

**M. A., L. T., M. O. L., Ph. D.**

தமிழ்ப் பேராசிரியர் :

தியாகராசர் கல்லூரி, மதுரை.

## பழனியப்பா பிரதர்ஸ்

தெப்பக்குளம் : : சேப்பாக்கம்
திருச்சிராப்பள்ளி சென்னை-5

முதற் பதிப்பு—1955.

விலை ரூ. 1—4—0

ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை-5.

# முகவுரை

பத்துப் பாட்டு என்பது சங்கத்துச் சான்றோர் செய்த பத்துப் பாடல்களைக் கொண்டதேயாகும். ஒவ்வொரு பாட்டும் வேறு வேறு பொருள் பற்றியதாகும். இப் பாடல்களால் தமிழகத்தின் இயற்கை அமைப்பு, மதுரை, காவிரிப்பூம்பட்டினம் போன்ற பெரிய நகரங்களின் அக்காலச் சிறப்பு, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் முதலிய ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த அக் கால மக்களின் பழக்க வழக்கங் கள், இன்ன பிறவும் நன்கு அறியலாம். ஆதலின், மாணவர் எளிதில் அறியும்படி இச் செய்திகள் பல காட்சிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன; எளிய தமிழ் நடையில் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. உயர் நிலைப் பள்ளி மாணவர்க்கென இத்தகைய நூல் இதுகாறும் வெளிவந்திலது. இம் முயற்சியைப் புலவருலகம் பாராட்டுமென்று நம்புகிறேன்.

மா. இராசமாணிக்கம்

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | திருமுருகாற்றுப்படை | |
| | (1) குன்றுதோறாடல் | 1 |
| | (2) பழமுதிர் சோலையின் இயற்கைக் காட்சி | 3 |
| | (3) குறமகள் முருகபூசை செய்யும் காட்சி | 4 |
| 2. | பொருநர் ஆற்றுப்படை | |
| | (1) பொருநர் குடும்பம் | 5 |
| | (2) பாணன் பொருநனை ஆற்றுப்படுத்தல் | 7 |
| 3. | சிறுபாண் ஆற்றுப்படை | |
| | (1) பாணன் யாத்திரை | 15 |
| | (2) பாணனை ஆற்றுப்படுத்தல் | 17 |
| | (3) நல்லியக்கோடனது நாட்டு வளம் | 22 |
| 4. | பெரும்பாண் ஆற்றுப்படை | |
| | (1) வள்ளலை நோக்கிப் பாணன் அலைதல் | 27 |
| | (2) பெரும்பாணனை ஆற்றுப்படுத்தல் | 28 |
| | (3) முல்லை நிலக் காட்சி | 33 |
| 5. | முல்லைப் பாட்டு | |
| | (1) முதியவள் அரசமாதேவியைத் தேற்றல் | 44 |
| | (2) பாசறையில் பாண்டியன் | 46 |
| | (3) பாண்டியன் மீட்சி | 49 |
| 6. | மதுரைக் காஞ்சி | |
| | (1) பாண்டியன் போர்ச் சிறப்பு | 50 |
| | (2) பாண்டிய நாட்டுச் சிறப்பு | 55 |
| | (3) மதுரை மாநகரச் சிறப்பு | 58 |
| 7. | நெடுநல் வாடை | |
| | (1) குளிர் கால நிலைமை | 68 |
| | (2) அரண்மனைக் காட்சி | 70 |
| | (3) கட்டில் மீது அரசமாதேவி | 72 |
| 8. | குறிஞ்சிப் பாட்டு | |
| | (1) செவிலிக்குத் தோழி கூறுதல் | 75 |
| | (2) கூட்டுறவு ஏற்பட்ட முறைமை | 77 |
| 9. | பட்டினப் பாலை | 85 |
| 10. | மலைபடு கடாம் | |
| | (1) கூத்தரின் யாத்திரை | 93 |
| | (2) பரிசில் பெற்ற கூத்தன் ஆற்றுப்படுத்தல் | 94 |

# பத்துப்பாட்டுக் காட்சிகள்

## 1. திருமுருகாற்றுப்படை

### (1) குன்றுதோருடல்

**முன்னுரை**

திருமுருகாற்றுப்படை என்னும் பாட்டு, முருகப் பெருமானின் அருள் பெற்ற அடியான் ஒருவன் அவ்வாறு அருள் பெறுவதற்கு ஏற்ற பக்குவமுடைய வேறொரு அடியவனுக்கு அப்பெருமான் எழுந்தருளி யுள்ள இடங்களையும், அவனுடைய சிறப்பியல்புகளை யும் விளக்கிக் கூறி, அவனை அப்பெருமானிடம் ஆற்றுப்படுத்துவதாக (வழிப்படுத்துவது) அமைந்த தாகும். இது 317 வரிகள் கொண்ட நீண்ட அகவற்பா. இதனைப் பாடியவர் **நக்கீரர்** என்னும் புலவர் பெருமான். முருகப்பெருமான் கோயில் கொண்டுள்ள படை வீடுகள் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவினன்குடி, திருஏரகம் (சுவாமி மலை), குன்றுதோருடல், பழமுதிர்சோலை (அழகர் மலை) என்பன. ஒவ்வொரு தலத்தின் சிறப்பும் திருமுருகாற்றுப்படையுள் விளக்கப்பெற்றுள்ளது. இங்கு இறுதி இரண்டு தலங்களைப் பற்றிய காட்சிகள் தரப்படும்.

**முருகன் - குறத்தியர் குரவையாடல்**

எல்லாக் குன்றுகளிலும் குறிஞ்சிநிலக் கடவு ளாகிய முருகன் எழுந்தருளியிருப்பதாகப் பழந்தமிழர்

நம்பினர்; எனவே, அவன் குன்றுதோறும் இருந்து அடியவர் அகங்களிக்க விளையாடியும், அருள் புரிந்தும் ஆவன செய்து வருவதாக நம் முன்னோர் நம்பினர்.

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம் எனப்படும். அங்கு வாழ்பவர் குறவர் எனப்படுவர். அவர்கள் வில்லாற் கொலைத் தொழில் புரியும் இயல்பினர்; தேனைப் புளிக்கவிட்டுச் செய்த கள்ளை மூங்கிற் குழையில் இட்டு முற்றும்படி செய்வர்; முற்றிய மதுவை மலைப்பகுதிகளில் உள்ள தம் உற்றார் உறவினருடன் உண்டு களிப்பர். களிப்பு மிகுதலால் தொண்டகப் பறை கொட்டிக் குரவைக் கூத்து ஆடுவர். குரவைக் கூத்து என்பது எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபிணைந்தாடும் ஒருவகைக் கூத்து. ஆடவர் அக் கூத்தினை ஆடுதலைக் கண்ட பெண்மான் போன்ற சாயலையுடைய குறமகளிர் தாமும் குரவையாடுவர். கச்சு, தண்டை, வாத்தியங்கள், மயில், கோழிக் கொடி, தோள்வளை — இவற்றையுடைய முருகக்கடவுள், ஆடவர்-பெண்டிர் குரவை யாடுதலைக் கண்டு தாமும் ஆடலை விரும்புவர். மார்பில் சந்தனம் பூசப்பெற்ற வேலன் என்னும் வெறியாட்டயர்பவன் பச்சிலைக் கொடியையும் சாதிக்காயையும் இடையிட்டுத் தக்கோலக்காய், காட்டு மல்லிகை, வெண்டாளி முதலியவற்றைக் கலந்து கட்டிய மாலையை முருகப் பெருமான் அணிவர்; சிவந்த ஆடையை உடுப்பர்; அசோகந் தளிரைக் காதிற் செருகிக் கொள்வர்; யாழோசை போலும் இனிய குரலுடைய பாடு

மகளிருடனே குன்றுகள் தோறும் சென்று, குரவை ஆடும் குறத்தியர் கைகளைத் தழுவியும், ஏந்தியும், முன்கை கொடுத்தும் விளையாடுவர். இங்ஙனம் குற மகளிருடன் கைகோத்தாடுதல் குன்றுதோறாடும் குமரக் கடவுளது இயல்பாகும்.

## (2) பழமுதிர்சோலையின் இயற்கைக் காட்சி

பழமுதிர்சோலை என்னும் மலையிலிருந்து அருவிகள் ஆரவாரத்துடன் கொடிச் சீலைகளைப் போல அசைந்து வரும்; அகிற் கட்டைகளையும், சந்தன மரங்களையும் உருட்டித் தள்ளிக்கொண்டு வரும். சிறு மூங்கில் மரங்களின் பூக்கள் நிறைந்த கிளைகள் ஒலிக்குமாறு அவற்றை வேரோடு பெயர்த்துத் தள்ளும். வானளாவிய உயர்ந்த மலையில் ஞாயிற்றின் மண்டலத்தைப் போல வட்டமாகச் சமைந்து குளிர்ந்து மணக்கும் விரிந்த தேன்கூடுகளைக் கெடுக்கும்; முற்றிய பலாச் சுளைகளை வாரிச் செல்லும்; மலை உச்சியில் உண்டான சுரபுன்னை மலர்களை உதிரச் செய்யும்; கரிய ஆண் – பெண் குரங்குகளை நடுங்கச் செய்யும்; பெண் யானைகள் குளிரால் வருந்தும்படி நீரை வீசும்; அழுக்கடைந்த பொன்னும் மணியும் அழுக்கு நீங்கி ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்படி அவற்றின்மேற் குதிக்கும்; பொன் துகளைக் கரையில் வீசும்; வாழை முறியும்படியும், தெங்கின் இளநீர்க் குலைகள் உதிரும்படியும் அவ்விரண்டையும் மோதும்; மிளகுக் கொடியின் கரிய மலர்க் கொத்துகளைச் சாய்க்கும்; மயில்களும் பெட்டைக் கோழிகளும் அஞ்சி ஓடச் செய்யும்; ஆண் பன்றிகளும் கரடிகளும் அஞ்சிக்

குகைகளிற் பதுங்கும்படி இரைச்சலிடும். அவ்வோசை கேட்டுக் கொம்புடைய காட்டு மாடு முழக்கமிட்டு ஆரவாரிக்கும். இத்தகைய அருவிகளைக் கொண்ட பழமுதிர்சோலை மலையில் முருகப்பெருமான் கோயில் கொண்டுள்ளான்.

## (3) குறமகள் முருகபூசை செய்யும் காட்சி

முருக பூசை செய்ய விழையும் குறமகள் முதலிற் கோழிக் கொடியை நிறுத்துவாள்; அக் கொடிக்கு நெய்யும், வெண் கடுகும் அப்புவாள்; தான் வழிபடுதற் குரிய மந்திரத்தை வாய்க்குள் உச்சரிப்பாள்; அழகிய மலர்களைத் தூவுவாள்; மாறுபட்ட நிறத்தையுடைய இரண்டு ஆடைகளை உள் ஒன்றும் புறம் ஒன்றுமாக உடுப்பாள்; சிவந்த நூலைத் தன் கையிற் காப்பாகக் கட்டிக்கொள்வாள். பின்னர் வெண்மையான நெற் பொரியைத் தூவுவாள்; குருதியுடன் பிசைந்த வெள்ளரிசியைச் சிறு பலியாக இடுவாள்; சிறிய பசு மஞ்சளோடு நல்ல மணமுடைய சந்தனம் முதலிய வற்றையும் தெளிப்பாள்; குளிர்ந்த பெரிய செவ்வலரி மாலையையும் பிற மாலைகளையும் ஒரே அளவாக அறுத்துப் பூசைசெய்யும் இடத்திற்கு மேல் நின்று தொங்கவிடுவாள். "மலைப் பக்கத்து ஊர்களைப் பசியும் பிணியும் பகையும் வருத்தா தொழிக" என்று வாழ்த்துவாள். பிறகு நறிய தூபம் கொடுப்பாள்; பிறகு தனது நிலத்துக்குரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடி, மலை அருவியோடு பல வாத்தியங்கள் ஒலிக்கச் சிவந்த மலர்களைத் தூவுவாள்; குருதி கலந்த தினை அரிசியைப் பரப்பி முருகப்பெருமான் மகிழும்படி வாத்தியங்களை ஒலிக்கச் செய்து வழிபடுவாள். முருகக் கடவுள் அவளது உள்ளத் தூய்மைக்கு உவந்து அருள் புரிவான்.

# 2. பொருநர் ஆற்றுப்படை

## (1) பொருநர் குடும்பம்

### முன்னுரை

பொருநன் - ஏர்க் களத்தேனும், போர்க் களத் தேனுஞ் சென்று பாடுங் கூத்தன். இத்தகைய பொருநன் ஒருவன், கரிகால் பெருவளத்தானிடம் சென்று பாடிப் பரிசில் பெற்று மீண்டு வரும் வழியில் வேருெரு பொருநனைக் கண்டு அவனை அச்சோழப் பெருவேந்தனிடம் ஆற்றுப்படுத்துவதாக **முடத்தாமக் கண்ணியார்** என்ற புலவர் பாடியது இப்பாடல். இது 248 அடிகளை உடையது. இதன்கண் கரிகால் வளவனுடைய போர்த்திறன், பிற நல்லியல்புகள், சோழநாட்டு வளம் முதலியன தெளிவாக விளக்கப் பட்டுள்ளன.

தடாரி என்னும் இசைக் கருவியை வாசிக்கும் பாணன் பொருநன் எனப்படுவான். அவன் இசைத் தமிழ் வளர்ப்பவன். அவனது மனைவி விறலி எனப் படுவாள். அவள் தன் உள்ளக் கருத்து வெளியில் புலப்படும்படி திறமையோடு ஆடுவதில் வல்லவள். வேறு சில இசைக் கருவிகளை வாசிப்பவரும் பொருநர்கட்கு உதவியாக இருப்பர். இவர் அனைவரும் முத்தமிழ் வளர்க்கும் நற்றமிழ் வள்ளல்களை நாடிச் செல்வது வழக்கம்.

### மராமர நிழலில் தங்குதல்

தமிழகத்துச் சிற்றூர் ஒன்றிலிருந்து பொருநன், தன் மனைவியாகிய விறலியுடனும், உதவியாளர் சில

ருடனும் வள்ளலை நாடிச் சென்முன். சாதிலிங்கத்தை உருக்கிவார்த்தாற் போலச் சிவந்த நிலத்தில் நண் பகல் வெயிலில் அனைவரும் நடந்து செல்கின்றனர். கூரிய பரற் கற்கள் கால்களில் உறுத்துகின்றன; அதனுல் மென்மை வாய்ந்த விறலியின் கால்களில் பன்னைப் பழம் போலக் கொப்புளங்கள் உண்டாகி விட்டன. அவள் துடிதுடிக்கிருள்; மேலும் வழி நடக்க மாட்டாது ஓரிடத்தில் இளைப்பாற எண்ணுகிருள். யானைகள் உலாவுகின்ற காட்டுப் பாதையின் ஓரத் தில் இலைகளை உதிர்த்த மராமரம் நிற்கின்றது. அதன் நிழல் வலை விரித்தாற் போல மென்மையாகக் காணப்படுகிறது. பாடினி அந்நிழலைக் கண்டு கலங் கரை விளக்கம் கண்ட மாலுமி போல மகிழ்ச்சி அடைகிருள்; அந் நிழலிற் சிறிது தங்கி இளைப் பாறுகின்ருள். உடன் வந்தவரும் அவளுடன் தங்கி இளைப்பாறுகின்றனர்.

## விறலியின் தோற்றம்

விறலி சிறந்த அழகி. அவளது கூந்தல் கருமணல் போல இருண்டு நெளிந்தது. அவளது நெற்றி பிறைமதி போன்றது; புருவம் கொலைத் தொழிலை யுடைய வில்லைப் போல வளைந்தது; அகன்று செவ்வரி படர்ந்த அவளுடைய கண்கள் குளிர்ச்சி பொருந்தியவை; இனிய சொற்களைப் பேசும் சிவந்த வாய் இலவம்பூவின் இதழ்போன்றது; அவளுடைய பற்கள் முத்துக்களை வரிசையாகக் கோத் தாற் போன்றவை. அவள் காதுகள் மகரக் குழை களைத் தாங்கி நிற்பவை; கழுத்து, நாணம் வருத்துத

லாற் பிறரை நோக்காது முன்புறம் வளைந்திருப்பது; தோள்கள் பருத்துத் திரண்ட மூங்கிலைப் போல இருப்பவை; விரல்கள் உயர்ந்த மலைகளில் வளரும் காந்தட் பூக்களைப் போன்றவை. அவ் விறலியினுடைய நகங்கள் கிளியின் அலகு போலச் சிவந்து காணப்படுவன; மெல்லிய இடை பல மணிகள் கோத்த மேகலாபரணம் அணியப் பெற்றது. அவளுடைய அடிகள் ஓடிக் களைத்த நாயின் நாவைப் போன்றவை.

### விறலி பாடுதல்

இச் சிறப்புக்களை யுடைய விறலி மராமர நிழலில் சிறிது இளைப்பாறிய பிறகு முகமலர்ச்சி பெறுகிருள்; உடனே தனது பாலையாழைக் கையில் எடுத்து அதன் நரம்புகளை வாரியும் வடித்தும், உந்தியும் உறழ்ந்தும் அங்குள்ள காடுறை தெய்வங்கள் மகிழும் படி பல தோத்திரப் பாடல்களைப் பாடுகின்ருள்.

## (2) பாணன் பொருநனை ஆற்றுப்படுத்தல்

### புதிய பாணன் கூற்று

மேற் சொன்னவாறு மராமர நிழலில் விறலி பாடிக் கொண்டிருக்கையில், அவ்வழியே வேறொரு பாணன் தன் இனத்தவருடன் வருகின்ருன். அவன் சோழன் கரிகாலனைப் பாடிப் பரிசில் பெற்றுத் தன்னூர்க்குத் திரும்பி வருகின்றவன். அவன் முன்சொல்லப்பட்ட பொருநனைப் பார்க்கிருன்; அவன் குடும்பத்தினரைக் கவனிக்கிருன்; பிறகு பொருநனை நோக்கிப் பின்வருமாறு பேசுகின்ருன் :

"யாழையுடைய கூத்தர்க்குத் தலைவ! நின் வறுமை நீக்கும் வழியைக் கூறுவேன், கேட்பாயாக: பழ மரங்களைத் தேடி அலையும் பறவைகளைப் போல நான் பரிசில் தரும் வள்ளல்களைத் தேடி வாட்ட முற்றேன்; இறுதியிற் 'செவிலித்தா யென்ன ஓம்பும் தீம்புனற் கன்னி' நாட்டுத் தலைவனாகிய கரிகால் வளவனைக் காண விழைந்தேன்; அவனது ஆரவாரம் மிக்க அரண்மனை வாயிலை அடைந்தேன்; வாயிற் காவலனிடம் கூறாது உள் சென்றேன். சென்ற மகிழ்ச்சியினால் எனது களைப்பு நீங்கிற்று. எனது உடுக்கையின் கண்கள் கைபடுதலால் பாம்பின் படத்தில் உள்ள பொறிகள் போன்ற தழும்புகள் பெற்றிருந்தன. நான் அவ்வுடுக்கையில் இரட்டைத் தாளத்தைப் பிறப்பித்து, எனது வறுமை தீர்க்கும்படி இனிய ஒரு பாட்டைப் பாடினேன்.

## கரிகாலன் உபசரிப்பு

"யான் பாடிய நேரம் விடிவெள்ளியின் வெளிச்சம் தோன்றிய விடியற்காலம். என் பாட்டைக் கேட்ட சோழர் பெருமான் எழுந்து வந்தான்; தன் உறவினனைக் கண்டு உபசரிப்பது போல முகமன் மொழிகளைக் கூறினான்; தான் எப்பொழுதும் கவனிக்கத்தக்க அண்மையில் என்னைத் தங்கியிருக்குமாறு செய்தான்; எனது எலும்பு உருகும்படி மிகக் குளிர்ந்த பார்வையை என்மீது செலுத்தினான். அவனது பார்வை என் ஆடைமீது சென்றது. எனது ஆடை ஈருக்கும் பேனுக்கும் புகலிடம் அளித்திருந்தது; பல தையல்கள் இடப்பெற்றதாயும்,

வியர்வையால் நனைந்தும் இருந்தது. அருள் பழுத்த கரிகால்வளவன் எனது கந்தலாடையைக் களையும்படி செய்தான்; நூல் சென்ற இடம் இன்னது என்பது அறியமுடியாத நுண்மை உடையதும், பூ வேலைப் பாடு கொண்டதும் ஆகிய உயர்ந்த பட்டாடையை உடுக்குமாறு செய்தான்.

" வேலைப்பாடு மிக்க அணிகளை அணிந்த அழகிய மகளிர் பலர் அரண்மனையில் இருந்தனர். அவர்கள், அரசன் குறிப்பறிந்து, அவனைத் தங்கள் ஆடல் பாடல்களால் மகிழ்வித்தனர். அந்நங்கையர் பொற் கிண்ணத்தில் மதுவை வார்த்துத் தந்தனர். நான் வழி நடந்த களைப்புத் தீரப் பன்முறை அம்மதுவைப் பருகினேன்; பின்னர் நன்கு உறங்கி விழித்தேன். என் உடல் வருத்தம் ஒழிந்தது.

" கரிகாற் பெருவளத்தானைக் காண்பதற்கு முதல் நாள் நான் வறுமைத் திருக்கோலத்துடன் காணப் பட்டேன். அவனைக் கண்டு அரண்மனையில் தங்கிய மறுநாள் என்னைக் கண்டவர்கள், 'நேற்று இங்கு வந்தவன் இவனா!' எனக் கேட்டு ஐயுறுமாறு உடையி லும் உடலிலும் மாறுதல் பெற்றேன். நான் பலவகை நறுமணப் பொருள்களை எனது உடலிற் பூசியிருந் தேன். அதனால் வண்டுகள் இடையறாது என்னை மொய்த்துக்கொண் டிருந்தன. அக்காட்சி கனவோ என்று நான் எண்ணினேன். 'நீ காண்பது கன வன்று; நனவே!' எனச் சொல்லுவது போல அரண் மனையிலிருந்த கல்வியறிவில்லாத வேலையாட்கள், 'நேற்று மெலிந்த தோற்றத்துடன் வறியவனாய் வந்த

பொருநன் இன்று எவ்வாறு காட்சியளிக்கின்ருன். காண்க!' என்று தமக்குள் பேசிக்கொண்டார்கள். இதைக் கேட்ட என் நெஞ்சம் நிகழ்வது மெய்தான் எனத் தெளிந்தது. என்னைத் தொடர்ந்துவந்த என் உறவினர் கரிகாலன் உபசரிப்பால் உளங்குளிர்ந்த னர்; அரசன் குறிப்பறிந்து ஏவலர் அவர்கட்கு வேண்டியன செய்தனர்.

"செம்மறிக்கிடாயின் புழுக்கிய இறைச்சியை நானும் என் உறவினரும் உண்டோம்; இரும்புக் கம்பியில் கோத்துப் பொரித்த கொழுத்த இறைச்சிப் பொரியலை, அதன் சூடு தணிவதற்காக வாயின் இடப் புறத்திலும் வலப்புறத்திலும் தள்ளி ஆற்றி உண் டோம். நாங்கள் இவ்வாறு இறைச்சிப் புழுக்கலையும் பொரியலையும் உண்டு உண்டு அலுத்தோம்; பல வடிவங்களிற் செய்யப்பட்ட பலவகைத் தின்பண்டங் களைத் தின்ருேம்; கள்ளுண்டு பல நாட்களைக் கழித் தோம். வேந்தன், 'நீங்கள் சோற்றையும் உண்ணு தல் வேண்டும்' என்று கூறி, முல்லை அரும்பை ஒத்த சோற்றையும் பொறிக் கறியையும் வயிறு புடைக்க உண்ணுமாறு செய்தான். இறைச்சியைப் பல நாள் தின்ற காரணத்தால் எங்கள் பற்கள் கொல்லை நிலத்தை உழுத கொழுப்போல முனை மழுங்கி விட்டன.

**பிரியா விடை**

"இவ்வாறு பல நாள் பலவகை உணவுப்பொருள் களை உண்டு உண்டு அலுத்த பிறகு, நாங்கள் கரிகால் வளவனை நன்றியறிதலோடு நோக்கி, 'ஐயனே! நாங்

கள் எங்கள் ஊருக்குச் செல்லவேண்டும்; விடைதருக!' என வேண்டினேம். அவ்வளவில் அப்பெருமான் சினங்கொண்டவனைப் போல எங்களைப் பார்த்து, 'எமது கூட்டத்தை விட்டுப் போகின்றீரோ?' எனக் கேட்டானுயினும் எங்களைத் தடுக்க மனமில்லாதவனாய், பல யானைகளைக் கன்றுகளுடன் கொடுத்தான்; வேறு பலவகை ஊர்திகள், அணிகலன்கள், ஆடைகள் முதலியவற்றையும் வழங்கினன். அப்பெருமானது அளப்பரிய கொடைத்திறத்தால் நாங்கள் வறுமை இன்றி வாழ எண்ணியவர்களாய் வழி நடந்து வருகின்றேம்.

## சோழநாட்டுச் சிறப்பு

"பொருநனே! நான் இதுவரை கரிகால்வளவனது உபசரிப்பையும்,கொடைத்திறத்தையும் விளங்கவுரைத்தேன். இனி, அப்பெருமான் ஆட்சி புரியும் சோழ நாட்டு வளத்தைக் கூறுவேன், கேட்பாயாக: சோழ நாடு மிக்க வளமுடையது. அந்நாட்டில் உள்ள திடர்கள் தோறும் நெற்கூடுகள் காணப்படும். மக்கள் தென்னந் தோப்புக்களின் நடுவே இல்லங்கள் அமைத்து வாழ்வர். சோணுட்டுக் காக்கைகள், முட்டைகளிலிருந்து வெளிவந்த ஆமைப் பார்ப்புகளை எடுத்துப் பசியெடுக்கும்போது உண்பதற்காக, வீட்டைச் சூழ்ந்த நெர்ச்சிச் செடியின் நிழலில் மறைத்து வைக்கும். கடற்கரையில் உள்ள மணற் குன்றுகளில் உழத்தியர் வண்டல் இழைத்து விளையாடுவர்; ஆண் மயில்கள் பாகற் பழத்தையும், பலாப் பழத்தையும் தின்னும்; தின்ற பிறகு வளைந்த காஞ்சி மரத்திலும் மருத மரத்திலும் இருந்து, பெடை

அழைத்தவுடன் பறந்து செல்லும்; யாழின் ஓசை போன்ற வண்டின் பாடலைக் கேட்டவுடன், அவ்வோசைக்குப் பொருந்த, நிலவு போன்ற மணலில் நின்று ஆடும்.

"சோழ நாட்டு மருத நிலத்தில் கரும்பும் நெல்லும் வளமுற்று வளரும்; அடும்பு, புன்கு, பகன்றை, ஞாழல் முதலிய மரங்கள் செறிந்து நிற்கும்; மருதநில மக்கள் நாட்டு வாழ்க்கையில் வெறுப்புக் கொள்ளின், அந்நிலத்தை விட்டு, நீல நிறமுடைய முல்லைக்கொடி படர்ந்த காடு சார்ந்த நிலத்திற் சென்று வாழ்வர். முல்லை நிலத்தில் தளவு, தேற்ரு, கொன்றை, முல்லை, காயா முதலிய மரஞ்செடிகள் தழைத்து வளரும். முல்லை நிலத்தில் வாழ்பவர் அந்நிலத்து வாழ்வில் வெறுப்படையின், மருத நிலத்திற் சென்று வாழ்வர். கடலில் இருல்மீனைத் தின்ற நாரை புன்னைக் கொம்பில் சென்று தங்கும்; பிறகு புன்னை மரத்தின்மீது மோதும் கடல் அலையின் ஆரவாரத்திற்கு அஞ்சிச் சென்று பனைமரத்தின் மடலில் தங்கும்.

"கடற்கரை ஊர்களில் வளமான தென்னை மரங்களும், குலைகளைக்கொண்ட வாழைமரங்களும், காந்தள் செடிகளும், பூக்கள் மலர்ந்த சுரபுன்னையும் நற்காட்சி நல்கும். அவற்றின் செறிவிற் பெரிய ஆந்தைகள் வாழும். அங்குவாழும் நெய்தல்நிலமக்கள் அந்நிலத்தை வெறுப்பராயின், குறிஞ்சி நிலத்திற் சென்று தங்குவர். தேனையும் கிழங்கு வகைகளையும் விற்ற குறிஞ்சி நில மக்கள் மீனின் நெய்யுடன் கள்ளையும் பண்டமாற்றுச் செய்து செல்வர். மருத நிலத்துக் கோழிகள்

தினையைத் தின்னும்; குறிஞ்சி நிலத்து மந்திகள் உப் பங்கழியில் மூழ்கி விளையாடும் ; உப்பங்கழியிலிருந்து மேல் எழும்பிய நாரைகள் மலையிடத்துத் தங்கும். இவ்வாறு சோழநாட்டில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலங்களும் மயங்கி இருக்கும்.

" சோழ நாட்டில் கோடைக் காலத்தில் தாமரையும் முல்லையும் தீயும்; மரக் கொம்புகள் கரியும் ; அருவிகள் வறளும்; முகில்கள் கடல் நீரை முகவா. இத்தகைய வறட்சி மிக்க கோடைக் காலத்தும் காவிரிநீர் நுரை யுடன் வருதலில் தவருது. அந்நீர் நறைக் கொடியை யும் நரந்தம் புல்லையும், அகிலையும் சந்தன மரத்தையும் நீராடும் துறைகளில் தள்ளிக் குளங்களிலும் ஊர்களி லும் புகும். மகளிரும் மைந்தரும் மகிழ்ந்து காவிரியில் நீராடுவர். நெல் அறுக்கும் உழவர் அரிவாளால் அரிந்த நெற்கதிர்களை மலைபோல் உயர்ந்த போர்க ளாக அடுக்குவர்; நாளும் கடாவிட்டுப் போரினை உழக்கி நென்மணிகளைத் திரட்டுவர்; அங்ஙனம் திரட்டிய நெல்லைக் குதிர்கள் நிறையைக் கொட்டுவர். சோணுட்டில் ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளையும்.

## கரிகாலன் சிறப்பு

" பொருநனே ! இத்தகைய வளமிக்க நாட்டிற்குக் கரிகாற் பெருவளத்தான் தலைவனுவன். அவன் சீற் றத்தில் முருகப் பெருமானை ஒப்பவன்; தாய் வயிற்றி லிருந்தே அரசுரிமையைப் பெற்றவன்; பிள்ளைப்

பருவ முதலே வலிமை மிக்கவன். அப்பெரியோன் ஆத்திமாலையை அணிபவன். பனம்பூமாலை அணிந்த சேரனோடும், வேப்பிலையால் தொடுத்த மாலையை அணிந்த பாண்டியனோடும் 'வெண்ணி' என்னும் போர்க்களத்திற் போரிட்டு வெற்றி கண்டவன்.

"நீ சோழநாடு செல்லும் வழியை அறிந்து செல்; இவ்வழியைத் தப்பி வேறொரு வழியிற் செல்லேல்; நீ இவ்வழியில் என்னைக் கண்டது நீ செய்த நல் வினைப் பேறாகும். நீ உன்னையும் உன் இனத்தவரை யும் வருத்தும் பசிப்பிணியைப் போக்க விரும்புவை ஆயின், விரைவில் எழுந்திரு; பசிப்பிணி மருத்துவ னாகிய கரிகால் வளவனை நோக்கிக் கடுகி நட. நீ நலம் பெறுவாய்!"

# 3. சிறுபாண் ஆற்றுப்படை

## (1) பாணன் யாத்திரை

### முன்னுரை

யாழ் வகைகளில் சீறியாழ் என்பதனை வாசித்தவர் சிறு பாணர் என்பது பல அறிஞர்களின் கருத்து. அத்தகைய சிறு பாணன் ஒருவன் ஓய்மா நாட்டு நல்லியக் கோடனைப் பாடிப் பரிசில் பெற்று மீண்டு வருகையில் வழியில் எதிர்ப்பட்ட மற்றொரு சிறு பாணனை அவ்வள்ளலிடம் ஆற்றுப்படுத்தியதாக, இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது இப்பாடல். இது 269 அடிகளை உடையது. இப்பாடலால் மூவேந்தர் கொடையினும் மேம்பட்ட நல்லியக் கோடனது கொடைச் சிறப்பும், கடை ஏழு வள்ளல்களின் ஈகைத் தன்மையும், ஓய்மா நாட்டு வளமும், வள்ளலது மூதூர்ச் சிறப்பும்,பிறவும் நன்கு விளங்கும்.

### இளவேனிற் காலம்

மலைகளிற் பெய்யும் மழைநீர் பல கால்களாகப் பிரிந்து தரையில் இழிந்து காடுகளிற் பாய்வதால் 'காட்டாறு' எனப்படும். மலை உச்சியிலிருந்து இறங்கி ஆற்றிடைக் குறைகளில் பிளவுபட்டுப் பின் ஒன்று சேர்ந்து செல்லும் காட்டாற்றை நிலமகளது மார்பில் அணியப்படும் முத்துவடம் என்னலாம். அக்காட்டாறு பாய்தலால் குளிர்ச்சி அடைந்த காட்டு மரங்கள் மலர்களை நிரம்பப் பூக்கும். குயில்கள் தம் அலகினால் அம்மலர்களைக் கோதும்; அதனால் அவை கீழே கரு

மணல் நிறைந்த தரையில் உதிர்ந்து உலர்ந்து கிடக்கும். அக்காட்சி, இளவேனிலாகிய மங்கை தனது கூந்தலை விரித்தாற்போல் இருக்கும்.

## முதுவேனிற் காலம்

இத்தகைய காடு, முதுவேனிற் காலத்தில் பாலை யாகிவிடும். அங்கு நிறைந்திருக்கும் கருமணல் சூடேறி நடப்பவரின் கால்களை வருத்தும். வேல்போற் கூரான பருக்கைக் கற்கள் வெயிலின் காரணமாக வெப்பமடைந்து வழி நடப்பவரின் கால்களைக் கிழிக்கும். அதனால் அவ்வழி நடப்பவர் பைய நடந்து, இளைப்பாறக் கடப்பமர நிழலில் தங்குவர். முது வேனிற் காலத்தில் ஞாயிறு கடுமையாகக் காயும் காலையும் மாலையும் நண்பகலன்ன வெயில் காயும் ; அவ்வெப்பத்தால் நிலம் பாலைத் தன்மையை அடைந் திருக்கும். சோலைகள் நீர்வளமின்றி வாடும்; கிணறு கள் முதலிய நீர்நிலைகள் நீரின்றி வறண்ட காட்சியை அளிக்கும்; கோடை மிகுதியால் நீர்வளமற்ற நிலம் பயன் தராது; பறவைகளும் விலங்குகளும் பருக நீரின் றித் தவிக்கும். இவ்வாறு எல்லா உயிர்களும் கோடை யில் துன்புறுதல் இயற்கை.

## பாணன் யாத்திரை

இத்தகைய முதுவேனிற் காலத்தில் வறுமையை ஒழிக்க வள்ளலை நாடி அலையும் ஒரு பாணன், தன் மனைவியாகிய விறலியுடனும், மற்றும் பல விறலியருட னும், வேறு சிலருடனும் காட்டு வழியே நடந்து செல் கிறன். அவனது இடக்கையில் சீறியாழ் என்ற

யாழ் இருக்கின்றது. அது பொற்கம்பி போன்ற நரம்புகளை உடையது.

பாணனுடன் செல்கின்ற விறலி கட்டமைந்த உடல்வளம் உடையவள்; மான் போன்ற மருண்ட பார்வையைப் பெற்றவள்; கார்மேகம் போன்ற கரிய கூந்தலையுடையவள்; ஓடி இளைத்த நாயின் நாக்குப் போன்ற அடிகளைக் கொண்டவள்; வாழைப் பூவைப் போன்ற கொண்டையை உடையவள்; கற்பு மிக்கவள். பிற விறலியர்களும் இத்தகையவர்களே.

இவ்விறலியருடன் வள்ளலைத் தேடிச் செல்லும் பாணன் கடப்ப மர நிழலில் இளைப்பாறிய பின்னர்த் தனது சீறியாழை இடப்பக்கத்தே தழுவி 'நட்ட பாடை' என்னும் பண்ணை வாசிக்கின்றான். அவ் வமயும் நல்லியக்கோடன் என்ற சிற்றரசனைப் பாடிப் பரிசில் பெற்று மீண்டு வருகின்ற பாணன் ஒருவன் அவர்களைச் சந்திக்கிறான்.அப்புதிய பாணன் நல்லியக் கோடனுடைய கொடைச் சிறப்பு, நாட்டு வளம், வள்ளலின் நல்லியல்புகள் முதலியவற்றைக் கீழ்வரு மாறு நன்கு விளக்கிக் கூறிப் பாணனை அவ்வள்ள லிடத்தே ஆற்றுப்படுத்துகிறான்.

## (2) பாணனை ஆற்றுப்படுத்தல்

### சேரனைவிடச் சிறந்த கொடையாளி

" பாணர் பெருமகனே! தமிழகத்தின் மேற்பால் உள்ளது சேர நாடு. அது மலைவளம் செறிந்த நாடு. வயல்களில் கொழுத்த மீன்கள் துள்ளி விளையாடும். எருமை அம்மீன்கள் நசுங்கும்படி வயல்களில் நடந்து

சென்று செங்கழுநீர்ப் பூவை உண்ணும்; பிறகு, மிளகு படர்ந்த பலா மர நிழலில் மஞ்சள் செடியின் மெல்லிய இலைகள் தன் முதுகைத் தடவ தான் உண்ட செங்கழுநீர்ப் பூவைத் தேன் நாறும்படி மென்று அசையிட்டுக் கொண்டே மெல்ல நடந்து, காட்டு மல்லிகை படர்ந்து பந்தல் போல் இருக்கும் இடத்தில் படுத்து உறக்கம் கொள்ளும். இத்தகைய சிறப்புடைய சேரநாட்டை ஆட்சிபுரியும் சேரவேந்தன் பாணனுக்குத் தரும் பரிசிலைவிட நல்லியக்கோடன் தரும் பரிசில் மதிப்பு மிக்கதாம்.

## சோழனின் மிக்க கொடையாளி

" சோழ நாட்டு மருத நிலத்தில் கடப்ப மரங்கள் மிகுதியாகப் பூத்திருக்கும். அப்பூக்களிலுள்ள தாது தம்பலப் பூச்சிகளைப் போல இருக்கும். அத்தாது நீர்த் துறையில் படிந்து, அத்துறையை ஓவியம் போலக் காட்சி அளிக்கச் செய்யும். அத்துறையில் தாமரை மலர்கள் மலர்ந்து அழகிய காட்சியை நல்கும். அம் மலர்கள்மீது தும்பி தன் பெடையைத் தழுவி மகிழும்; அம்மகிழ்ச்சி மீதூரச் 'சீகா மரம்' என்னும் பண்ணைப் பாடும். இத்தகைய வளம் நிறைந்த நல்ல சோணாட்டை உறந்தைப் பதியிலிருந்து அரசாளும் வளவன் வழங்கும் பரிசில், நல்லியக்கோடன் தரும் பரிசிலினும் சிறந்ததன்று.

## பாண்டியன் பரிசிலும் ஈடன்று

" தமிழகத்துள்ள கிழக்குத் துறைமுகங்களில் கொற்கை ஒன்று. அது முத்துக்குப் பெயர் பெற்ற

துறைமுகம். அதற்குத் தலைவன் பாண்டியன். கொற்கை நகரம் திரை கொழிக்கும் கடலை எல்லையாகப் பெற்றது. அங்கு உப்பளங்கள் மிகுதி. அங்கிருந்து உப்பு வாணிகரின் வண்டிகள் உப்பை ஏற்றிக் கொண்டு பல இடங்கட்கும் செல்லும். அவ் வண்டிகளை இழுத்துச் செல்லும் எருதுகள் வலியவை; அவற்றின் நெற்றியிற் படியுமாறு அணியப்பட்ட பூமாலைகள், காதுகளின்மேற் சென்று கீழே தொங்கும். உப்பு வாணிகர் குரங்குகளைத் தம் பிள்ளைகளைப் போல வளர்ப்பர். அக்குரங்குகள் அவர்களைவிட்டுப் பிரியாது அவர்தம் வண்டிகள் பின்னே சென்று கொண்டிருக்கும். உப்பு வணிகரின் குழந்தைகள் வெள்ளிய முத்தையும், வாள் போன்ற கிளிஞ்சிலையும் அரையிலே கட்டியிருப்பர். குரங்குகள் கிலுகிலுப்பையைக் கிலுக்கி அக்குழந்தைகளுடன் விளையாடும். உப்பு வணிகரின் மனைவிமார் தம் கூந்தலை ஐந்து வகையாகக் கோதி முடிந்திருப்பர். அவர்கள் வாழும் பாண்டிய நாட்டைப் புரக்கும் பாண்டியன் பாணர்க்குத் தரும் பரிசிலைவிட நல்லியக்கோடன் தரும் பரிசு சிறப்புடையது என்பதை நீ அறிந்துகொள்.

### வள்ளல்கள் எழுவர்க்கு ஒப்பானவன்

"பாணர் தலைவனே! மழை வருதலைக் கண்டு மயில் தன் சிறகை அழகுற விரித்து ஆடும். இது மயிலின் இயல்பு. ஆகலின் அவ்வுண்மையை அறியாத பேகன் என்ற வள்ளல், அது குளிர் மிகுதியால் துன்புறுவதாக எண்ணித் தனது விலையுயர்ந்த போர்வையை அதன்மீது போர்த்துச் சென்றான்.

"தான் படர்தற்கேற்ற கொழுகொம்பின்றிக் காற்ருல் அலேப்புண்டு வருந்திய முல்லேக் கொடியைக் கண்ட பாரி வள்ளல், அது படர்தற்கென்று தன் தேரையே அங்கு விட்டுச் சென்ருன்.

"திருக்கோவலூர் நாட்டை ஆண்ட மலேயமான் திருமுடிக் காரி என்ற வள்ளல் ஒப்பற்ற தன் போர்க் குதிரையையும், தாளுண்ட நாட்டையும் இரப்பவர்க்கே ஈந்து மறைந்தான்.

"பொதியமலே நாட்டை ஆண்டுவந்த ஆய் என்ற வள்ளல் நீல நாகம் நல்கிய கலிங்கத்தை ஆலின் கீழ் அமர்ந்த சிவபெருமானுக்குக் கொடுத்துப் புகழ்பெற், ருன்.

"அடைதற்கரிய மலேயுச்சியிலிருந்து அரிதின் முயன்று பெற்ற கருநெல்லிக்கனி, உண்பாரை நெடுங் காலம் வாழ்விக்கும் என்பதை நன்கு அறிந்திருந்தும், தகடூரை ஆண்ட அதியமான் நெடுமானஞ்சி அத ளுத் தான் உண்ணுது, தமது புலமையால் தமிழ்த் தொண்டு செய்துவந்த ஒளவைப் பிராட்டியாருக்கு அளித்து அழியாப் புகழ் பெற்ருன்.

"தன்ளே, மதித்துவந்து முத்தமிழை வளர்த்த அறி ஞர் மகிழ்ந்து இல்லறம் நடத்துதற்கு வேண்டும் பொருள்களே நள்ளி என்ற வள்ளல் அள்ளிக்கொடுத் துப் புலவரால் போற்றப் பெற்ருன்.

"கொல்லிமலேப் பகுதியை ஆண்டுவந்த ஓரி என்ற வள்ளல் தன் மலேநாட்டு ஊர்களேக் கூத்தர்க்கு அளித்துக் களித்தான்.

"இந்த எழுவர்க்கும் பிறகு வந்த நல்லியக் கோடன், இவர்களின் கொடைகளைத் தான் ஒருவனே தாங்கி நிற்கின்றான்.

**நல்லியக்கோடன புகழ்**

"நல்லியக்கோடன் வலிய வீரன்; பகைவருடைய முகத்திலும் மார்பிலும் வெட்டிய வீர வாளை உடையவன்; சுரபுன்னையையும் அகிலையும் சந்தன மரத்தையும் நீர்த்துறையில் புனலாடும் மகளிர்க்குத் தெப்பமாகத் தந்துதவுகின்ற நீர் மோதும் மாவிலங்கையின் அரசர் தோன்றுதற்கு இடமாயுள்ள ஓவியர் குடியிற் பிறந்தவன். அப்பெருமான் அடிகளில் வீரக் கழல் கிடந்து அசையும்; அவன் கைகள் மழைபோலப் பரிசிலைப் பயன் கருதாது வழங்கும். அவன் செய்ந் நன்றி மறவாதவன்; தீய ஒழுக்கத்தை அறவே வெறுப்பவன்; கற்றவரையும் ஒழுக்கத்தால் விழுப்ப முற்றவரையுமே மதிப்பவன்; தன்னை நோக்கினார்க்கு இனிய முகமுடையவன்; தன்னை அடிபணிந்த பகைவரை வாழ்விப்பவன்; பரிசிலர் தகுதி அறிந்து, அவரவர்க்கு ஏற்றவாறு உதவும் கொடையாளி; கல்வியில்லாத பரிசிலர்க்கும் 'இல்லை' என்னாது ஈத்துவக்கும் இயல்பினன். அப்பெருமகன் எப்பொழுதும் முத்தமிழ்ப் புலவர் இடையே, பல விண்மீன்கட்கு இடையிலுள்ள முழுத்திங்கள் போலக் குளிர்ந்த அருளுணர்ச்சியுடன் வீற்றிருந்து பொழுதுபோக்குவான்.

**என்னைக் காத்த வள்ளல்**

"பாணர் தலைவ! நானும் என் சுற்றத்தாரும் நல்லியக்கோடன் நாட்டையும் செல்வத்தையும் வள்ளன்

மையையும் பாடிச் சென்றோம். அந்நிலையில் எங்கள் வறுமை சொல்லின் எல்லையைக் கடந்து நின்றது. எங்கள் வீடு பழுதுற்றிருந்தது; அடுக்களையின் இறப்புத் தடிகள் கட்டறுந்து வீழ்ந்தன; சுவரில் எழுந்த கறையான் வீட்டின் வரிச்சுகளை உண்டு வாழலாயிற்று. என் மனைவி வறுமையால் உடல் மெலிந்தாள்; நடை தள்ளாடினாள். அவள் குப்பையில் முளைத்த கீரையை நகத்தாற் கிள்ளி உப்பின்றிச் சமைத்து மற்றவர் பார்த்துவிடக் கூடாது என்றெண்ணி, வீட்டுக் கதவை யடைத்துவிட்டுப் பரிமாற, பெரிய சுற்றத்தாரோடு இருந்து உண்டோம். உணவு குறைவாகவும், உண்போர் மிகுதியாகவும் இருந்ததனால் பொல்லாத பசி எங்களை விட்டு நீங்காது. அக்கொடிய வறுமை இனி உண்டாகாதபடி வள்ளல் நல்லியக்கோடன் நிறைந்த செல்வத்தையும், மத நீரைச் சொரியும் யானைகளையும், பெரிய தேரையும் எங்கட்கு அளித்தான். நாங்கள் அவன் திருப்பெயரை வாழ்த்திக்கொண்டு வருகின்றோம்.

## (3) நல்லியக்கோடனது நாட்டுவளம்

### நெய்தல் வளம்

"நண்பனே! நல்லியக்கோடனது நாட்டு வளத்தைப்பற்றிச் சிறிது கூறுவேன், கேட்பாயாக: கடற்கரையில் உள்ள தாழை அன்னம் போன்ற மலரை வெளிப்படுத்தும்; செருந்தி பொன்னைப் போன்ற நிறமுள்ள மலரைத் தோற்றுவிக்கும்; முள்ளி நீலம் போலப் பூவை மலரச்செய்யும். இம்மலர்கள் நிறைந்த

கடற்கரை ஊர்களையும், குளங்களையும் நல்லியக்கோடனது நெய்தல் நிலத்திற் காணலாம். அங்கு எயிற் பட்டினம் என்றொரு சிறந்த நகரம் இருக்கின்றது.

" நீங்கள் அங்குச் செல்வீராயின் அந்நிலத்துக் குரிய நல்லியக்கோடனைப்பற்றிப் பாடுமின் ; மிக்க உபசரிப்பைப் பெறுவீர்கள். ஆற்றின் அலைகளால் அடித்துக் கொண்டுவரப்பட்ட மணமிக்க அகிற் கட்டைகள், உறங்குகின்ற பெரிய ஒட்டகம் போல அங்குக் குவிந்து கிடக்கும். மதிபோன்ற முகம் உடைய நுளைச்சி அந்த அகிற்கட்டைகளை அடுப்பில் வைத்து எரித்துச் சமைத்த மதுவினைப் பரதவர் உங் களுக்குத் தருவர். அதனோடு, உலர்ந்த குழல் மீன்களைச் சுட்டுத் தருவர்.

## முல்லை வளம்

" பின்னர் நீங்கள் முல்லை நிலத்திற்குச் செல்வீ ராயின் அங்குப் பல நற்காட்சிகளைக் காணலாம்: அவரை பவளம் போல மலர்ந்திருக்கும் ; மயிலின் கழுத்தைப் போன்ற நிறத்துடன் காயா மலர்கள் மலர்ந்திருக்கும்; காந்தள் கைவிரல்போலப் பூத்திருக் கும் ; எங்கும் முல்லைக்கொடிகள் படர்ந்திருக்கும். வெடிப்புக்களில் குதிக்கும் நீரையுடைய அருவிகளைக் கொண்ட மலையில் ஞாயிறு மறைந்த அந்திக் காலத்தே நீ வேலூரை அடையலாம். அங்குள்ள எயிற்றியர் நீயும் உனது சுற்றமும் உண்டு பசி தீரும் படி புளிங்கறி யிடப்பட்ட சோற்றைக் காட்டுப் பசு வின் சூட்டிறைச்சியுடன் தருவர்.

### மருத வளம்

"நல்லியக்கோடனது மருதநிலத்தில் காஞ்சி மரங்கள் மிக்குள்ளன. மாலை தொடுத்தாற்போல மலர்கள் மலர்ந்திருக்கும். அவற்றின் கிளைகளில் கிச்சிலிப் பறவை தங்கியிருக்கும். அது பொன்னிற வாயினையும் நீலமணிபோலும் நிறத்தினையும் உடையது. அப்பறவை நீரில் மூழ்கி மீன்களைப் பிடிக்கும். அப்பறவையின் நகங்களால் தாமரை இலைகள் கிழிக்கப்படும். அவ்விலைகட்கிடையே மலர்ந்துள்ள தாமரை மலரில் தேன் உண்ணுகின்ற கருநிற வண்டுகளின் ஒழுங்கு, திங்களைச் சேர்கின்ற கரும் பாம்பை ஒப்பத் தோன்றும். இச்சிறப்புக்களையுடைய மருத நிலத்தில் உள்ள ஊர்களில் ஆமூர் ஒன்றாகும். அஃது அரிய காவலைக்கொண்டது; அகன்ற வீடுகள் நிறைந்தது. அங்குள்ள உழவர் மகள் யானையின் துதிக்கைபோலப் பின்னித் தொங்கவிடப்பெற்ற கூந்தலை உடையவள்; வளையணிந்த முன்கையினை உடையவள். அவள் தன் மக்களை ஏவி உங்களைப் போகாதபடி தடுப்பாள்; தடுத்து, பூணுலக்கையாற் குத்திய அரிசியாலாக்கிய சோற்றை நண்டும் பீர்க்கங்காயும் கலந்த கறியுடன் உண்ணத் தருவாள். நீங்கள் அவற்றை உண்டு இளைப்பாறலாம்.

### வள்ளலது மூதூர்

"நீங்கள் இளைப்பாறிய பிறகு சிறிது தூரம் நடந்து செல்லின் நல்லியக்கோடனது மூதூரை அடையலாம். அரண்மனை யானைகளின் நாக்குகள் மேல் நோக்கி எரியும் நெருப்புச் சாய்ந்தாற் போன்ற

தோற்றத்தின; மருப்புக்கள், பேய்மகள் நிணத்தைத் தின்று சிரிக்கும்போது விளங்கித் தோன்றும் பற்களை ஒப்பன. அந்த யானைகளின் கால் நகங்கள், போர்க் களத்தில் வெட்டுண்ட தலைகளைத் தம் கால்களால் தள்ளுதலால் சிவப்பேறிக் காணப்படும். அக்கரிகளின் மதநீர் மூதூர்த் தெருக்களில் எழும் புழுதியை அடக்கும். அம்மூதூரில் வள்ளலது அரண்மனை இருக்கின்றது. அதன் வாயில், மேரு கண்விழித்துப் பார்த்தாற் போலத் தோன்றும். அதன் வழியாகச் சுற்றத்தோடு வரும் பொருநரும், அறிஞரும், அந்தணரும் அரண்மனையினுட் புகலாம்.

## சென்று, பாடிப் பயன் பெறுக !

"நீ வாயிலைக் கடந்து உட்செல்; நினது சீறியாழைக் கையில் எடு; எடுத்து, 'அரசன், ஆசிரியன், தாய், தந்தை, தமையன் என்னும் ஐங்குரவர்க்கும் கைகுவித்துப் பணிவு காட்டுபவனே! வீரர் தலைவனே! குடிகளுக்கு நிழல் செய்யும் செங்கோலனே! வறியவர்க்கும் தமிழ் வாணர்க்கும் வரையாதளிக்கும் வள்ளலே! நின் புகழைக் கேள்வியுற்று நின்பால் வந்தோம்' என்று கூறுவாயாக. நீ கூறி முடிப்பதற்குள் அவ்வள்ளல், மூங்கில் ஆடையை உரித்தாற் போன்ற மாசற்ற உடையினை உனக்குத் தந்து உடுக்கச் செய்வான்; பாம்பின் நஞ்சு ஏறி மயங்கினாற்போல மயக்கம் தரும் கள் தெளிவை அருந்தத் தருவான்; வீமசேனன் மடை நூலிற் கூறிய முறைப்படி சமைத்த அடிசிலைப் பொற் கலத்தில் இட்டுத் தான் எதிரில் இருந்து உண்ணச்

செய்வான்; பகைவர் நாட்டிற் கைக்கொண்ட பொருளைத் தன்னை விரும்பி வந்த உங்கட்கு வழங்குவான்; மிக்க வேலைப்பாடு அமைந்த தேரோடு, கரி, பரி, அணி வகைகள் முதலியவற்றை உங்கள் உள்ளம் உவப்ப அளித்துக் களிப்பான்; பின்னரே நீங்கள் அங்கிருந்து செல்ல அனுமதிப்பான். இத்தகைய உபசரிப்பினைச் செய்யும் வள்ளற் பெருமானிடம் உள்ளம் வைத்து இப்பொழுதே புறப்படுக!"

# 4. பெரும்பாண் ஆற்றுப்படை

## (1) வள்ளலை நோக்கிப் பாணன் அலைதல்

### முன்னுரை

பேரியாழ், செங்கோட்டியாழ் முதலிய பெரிய யாழ் வகைகளை இசைப்பவர் பெரும்பாணர் எனப்பட்டனர் என்று அறிஞர் கூறுவர். இத்தகைய பெரும் பாணன் ஒருவன் காஞ்சியை ஆண்ட தொண்டைமான் இளந்திரையனிடம் சென்று யாழ் வாசித்துப் பரிசில் பெற்று வந்த விவரத்தை வழியிற்கண்ட மற்றொரு பெரும் பாணனுக்குக் கூறி, அவனை அவ்வள்ளல்பால் ஆற்றுப்படுத்துவதாகக் **கடியலூர் உருத்திரங்கண்ணனூர்** பாடியது இப்பாடல். இது 500 வரிகளை உடையது. இப்பாடலால் தொண்டைநாட்டு நிலவளம், காஞ்சி முதலிய நகரங்களின் அக்கால நிலை, உள்நாட்டு வாணிகம், திணை நில மக்களின் வாழ்க்கை முறைகள் முதலியனவற்றை நன்கு தெளியலாம்.

பெரும்பாணன் ஒருவன் **செங்கோட்டு யாழ்** வாசிப்பதில் இணையற்றவன். அவன் சிறந்த இசைப் புலவன்; எனினும், கொடிய வறுமையால் வாடுகின்றவன். அவன் அவ்வறுமையைப் போக்க விழைந்து, இசைத் தமிழை ஆதரிக்கும் வள்ளலை நாடிச் செல்கின்றான். அவன் புறப்பட்ட காலம் முதுவேனிற் காலம். வெயிலின் கடுமை கூறுந் தரத்ததன்று. பாணன் அக் கொடிய வெயிலில் செல்லும் இடமறியாது வழி நடக்கின்றான். அவன் கையில் உள்ள செங்கோட்டியாழ் சிறந்த வேலைப்பாடு கொண்டது; பெண்கள் கையில்

அணியும் வளையலைப் போல நெகிழ வேண்டும் இடம் நெகிழப் பெற்றது ; இறுக வேண்டும் இடம்இறுகப் பெற்றது ; கரிய பெரிய தண்டினை யுடையது;அதன் நரம்புகள்இழுக்கப்பட்ட பொற் கம்பிகள்போன்றவை.

இத்தகைய யாழைப் பாணன் தன் இடத்தோள் மீது சார்த்திக்கொண்டு செல்கிறான் ; வெயிலால் அவன் தலையில் கொதிப்பு உண்டாகிறது ; கால்களில் கொப்புளங்கள் தோன்றுகின்றன. பழுமரம் தேடிச் செல்லும் பறவைபோல அவ்வேழைப் பாணன் 'என்னை ஆதரிக்கும் வள்ளல் எங்குளனோ !' என்று ஏங்கியவாறு வழிநடக்கிறான்.

**பாணன் எதிர்ப்படல்**

அப்பொழுது ஒரு வள்ளலிடம் பரிசில் பெற்றுப் பெருமகிழ்ச்சியுடன் மீண்டு தன் ஊர் நோக்கி வருகின்ற பாணன் ஒருவன் வறிய பாணனைச் சந்திக்கிறான் ; அவனுடன் பேசுகிறான். அப்பொழுது வறிய பாணன் தன் வறுமையை விளக்கித் தான் கற்ற கல்வியை வெறுத்துப் பேசுகின்றான். புதிய பாணன் அவனைப் பல கூறித் தேற்றித் தன்னை ஆதரித்த வள்ளலாகிய தொண்டைமான் இளந்திரையனிடம் அவனை ஆற்றுப்படுத்துகின்றான். அதனை அடுத்த காட்சியிற் காண்க.

## (2) பெரும்பாணனை ஆற்றுப்படுத்தல்

**எமது வள்ளல் இளந்திரையன்**

"பாணர் தலைவனே! யான் காஞ்சிமா நகரத்திலிருந்து வருகின்றேன். அங்கு அரசனாக இருப்பவன்

**இளந்திரையன்** என்பவன். அவன் சோழர் குடியிற் பிறந்தவன் ; முடியுடை மூவேந்தரினும் மிக்க மதிப்புடையவன். அவன் என்னைப் பாராட்டிப் பெருஞ்செல்வத்தையும், யானை குதிரைகளையும் எனக்கு வழங்கினான். நீயும் உன்னைச் சேர்ந்தவரும் அவ்வள்ளலை நினைப்பீராயின், உங்கள் வறுமை கதிரவனைக் கண்ட காரிருள் போல மறைந்துவிடும். நீயும் உன் சுற்றத்தாரும் அப்பெரியோனிடம் செல்லத்தக்க வழியையும் அதன் இயல்பையும் கூறுவேன், கேட்பாயாக:

**காட்டுக் காட்சி**

"இளந்திரையனது நகரில் வழிப்போக்கரை அலறும்படி வெட்டிப் பொருளைக் கவரும் தீயவர் இல்லை. அவனது காட்டில் இடி இடிப்பதில்லை ; கொடிய விட அரவுகளும் தீண்டா; புலி முதலிய விலங்குகளும் தீங்கு செய்யா. ஆதலின் நீங்கள் அஞ்சாது காட்டில் தங்கி இளைப்பாறிச் செல்லலாம்.

" காட்டில் பிரிந்து செல்லும் கிளை வழிகள் பல உண்டு. அவ்வழிகளில் உப்பை ஏற்றிய வண்டிகள் செல்லும். வண்டிக் கூரையின் முன்புறம் கோழிக் கூடுகள் தொங்கவிடப்பட்டிருக்கும். மரத்தினாற் செய்யப்பட்ட—யானையின் முழந்தாள் போன்ற—உறி துளையிட்டுக் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும். அவ்வுறிமீது வரிந்து கட்டப்பட்ட கட்குடங்கள் வைக்கப்பட்டிருக்கும். அவை, நாடக மகளிர் ஆடுகின்ற ஆடுகளத்தில் கொட்டப்படும் மத்தளத்தைப் போன்றிருக்கும்.

" உமணப் பெண் வண்டியின் முன்புறம் இருந்து ஒரு கையால் எருதுகளை அடித்து ஓட்டுவாள்; மற்றொரு கையில் பிள்ளையையும், அதற்குக் காவலாகப் பூவோடு கூடிய வேப்பிலையையும் வைத்திருப்பாள். உமணர் நல்ல உடற்கட்டு உடையவர்; தழையினால் தொடுக்கப்பட்ட மாலையை மார்பில் அணிந்திருப்பர். வண்டிகளிற் பூட்டப்பட்டிருக்கும் எருதுகள் இளைப் புற்றால், அவற்றிற்குப் பதிலாக வண்டியிழுக்க வல்ல வலிமை வாய்ந்த மாற்று எருதுகளை ஓட்டிச் செல்வர். நீங்கள் காட்டுப் பாதைகளில் இக்காட்சியைக் காணலாம்.

"அவ் வழிகளில் பிற நாடுகளிலிருந்து வந்து இங்கு வாணிகம் செய்பவரையும் நீங்கள் காணலாம். அவர்கள் மாணிக்கம், முத்து முதலிய விலையுயர்ந்த பொருள்களைப் பல இடங்களிலும் கொண்டு சென்று விற்பர். அவர்கள் ஆறலை கள்வரால் வழிகளில் தாக்கப்பட்டுப் பெற்ற தழும்புகளை மார்பிற் பெற்றவர்கள். அவர்கள் அரையிற் கட்டிய உடையில் உடைவாள் செருகியிருப்பர்; யானைத் தந்தம் கொண்டு செய்யப்பட்ட உறையில் வாளையிட்டு, அதனைத் துணியிற் கோத்துத் தோளில் தொங்க விட்டிருப்பர். அவர்கள் காலில் செருப்பு அணிந்திருப்பர். அவர்களுக்கு முன் செல்லும் கழுதைகள், ஒரே அளவினவாகிய மிளகு மூட்டைகளைச் சுமந்து செல்லும்.

**பாலை நிலக் காட்சி**

"இங்ஙனம் உப்பு முதலிய பொருள்களை ஏற்றிச் செல்லும் வண்டிகளும் கழுதைகளும் செல்

லும் வழிகள் கூடுகின்ற சந்தியில் சுங்கச்சாவடிகள் இருக்கும். அவற்றில் அரசனுல் அமர்த்தப் பட்ட அதிகாரிகள் இருந்து வணிகரிடமிருந்து சுங்கம் வசூலிப்பர். அச் சுங்கச் சாவடிகளுக்கு அப்பால் பாலைநில மக்களான எயினரின் குடிசைகள் இருக்கும். அவை ஈந்தின் ஓலையால் வேயப் பெற்றவை; முள்ளம் பன்றியின் முதுகுபோன்ற அமைப்புடையவை. குடிசையினுள் ஒரு புறத்தில் பிள்ளைபெற்ற எயிற்றி மான் தோல் மீது படுத்திருப்பாள். பிற எயிற்றியர் கடப்பாரைகொண்டு நிலத்தைக் கிளறி, எறும்பு சேமித்து வைத்த புல்லரிசியை எடுத்து வருவர்; பார்வைமான் கட்டப்பட்டிருக்கும் விளாமரத்தைக் கொண்ட முற்றத்தில் உள்ள நில உரலில் அப்புல்லரிசியை இடுவர்; அதனை வலிய உலக்கையாற் குத்துவர்; ஆழமுள்ள கிணற்று நீரை முகப்பர்; பழைய பானையில் நீரிட்டு முரிந்து போன அடுப்பிலே ஏற்றிப் புல்லரிசிச் சோற்றைத் தயாரிப்பர்; உப்புக் கண்டத்தை உடன்வைத்துக் கொண்டு புல்லரிசிச் சோற்றை உண்பர். நீவிர் அங்குச் செல்வீராயின், உங்கட்கு அவற்றைத் தேக்கமரத்தின் இலையில் வைத்து உவப்புடன் அளித்து மகிழ்விப்பர்.

## பன்றி - முயல் வேட்டை

"பாலை நிலத்தில் நீர் கிடைப்பதரிது. அதனுல் மழை நீரைத் தேக்கிவைக்கப் பாதை நெடுகப் பல குழிகள் தோண்டப்பட்டிருக்கும். அவற்றில் முது

வேனிற் காலத்தில் நீர் இராது. வேட்டுவர் அக்குழி களிற் பதுங்கியிருந்து, இரவில் நீர் அருந்த வரும் காட்டுப் பன்றிகளை வேட்டையாடுவர்; பகற்காலத்தே வேலியிடத்தே வலைகளை மாட்டி, வேட்டை நாய்களு டன் சென்று, புதர்களை அடித்து முயல்களை வலையிற் சிக்கச் செய்து வேட்டையாடுவர்.

## எயினர் கோட்டை

"நீங்கள் அக்காட்சிகளைப் பார்த்துக்கொண்டு அப் பாற் செல்லின், எயினர் கேட்டையை அடையலாம். அதன் மதிற் சுவர் உயர்ந்தது; ஊகம் புல்லால் வேயப் பட்டது. உட்புறம் முள் வேலியாற் சூழப்பெற்ற அகன்ற வீடுகள் இருக்கும். அவ்வீடுகளின் வாயில் களில் சங்கலியாற் கட்டப்பெற்ற நாய்கள் காவல் காக் கும். வீடுகளின் உட்கதவுகள் பருத்துத் திரண்ட மரங்களைக் கொண்டு தாழிடப்பெற்றிருக்கும். அவற் றினுள் பகைவரைக் குத்தியதால் கூர்மை மழுங்கிய வேல்களும் பரிசைகளும், விற்களும் அம்புகளும் வைக் கப்பட்டிருக்கும். தலைவாயில்களில் அம்புக்கட்டுகளும் பறையும் தொங்கவிடப்பட்டிருக்கும். எயினர் வேட்டை நாய்களைக் கொண்டு உடும்பு வேட்டையாடுவர். உடும் பின் முட்டை சங்குமணியைப் போல இருக்கும். உடும் பின் இறைச்சி பொரியல் செய்யப்படும். உடும்பின் பொரியல் சுவை மிக்கது. பாலை நிலத்தில் ஈந்தின் விதைபோன்ற சோறுதான் கிடைக்கும். நீங்கள் எயி னர் அரணில் இவ்வுணவினை உண்டு, பாலை நிலத் தைக் கடந்து குறிஞ்சி நிலத்தை அடையலாம்.

### குறிஞ்சி நிலக் காட்சி

" குறிஞ்சி நிலத்து வீரர் மறவுணர்ச்சி உடையவர்; வாட்போரில் வல்லவர். அந்நில மகளிர் மிக்க அஞ்சாமையுடையவர்; யானை எதிரே வந்தாலும், பாம்பு தம் மீது ஏறி ஊர்ந்து சென்றாலும், மேகம் இடித்தாலும் அஞ்சார். அந்நிலத் தலைவன் பகைவரது நாட்டகத்தே தன் துணைவருடன் சென்று, அவர்களுடைய ஆனிரைகளைக் கவர்ந்து வந்து, கள்ளுக்கு விலையாகக் கொடுப்பான். அவன் தன் வீட்டில் வடிக்கப்பட்ட கள்ளை உண்டு, ஊர்ப் பொது மன்றத்தில் உள்ள மரத்தடியில் கிடாயை அறுத்து, அதன் ஊனைச் சமைக்கச் செய்து உண்பான்; உண்ட பின்னர் மத்தளம் கொட்டத் தன் இடத்தோளை வலப்புறத்தே வளைத்து மகிழ்ச்சி தோன்ற ஆடுவான்.

## (3) முல்லை நிலக் காட்சி

### ஆயர் தலைவன்

" நீங்கள் குறிஞ்சி நிலத்தைக் கடந்து செல்லின், முல்லை நிலத்து ஊர்களைக் காணலாம். அங்குக் குறுகிய தடிகளை நிலத்தில் கால்களாக இறுக்கி அவற்றின்மீது வீடுகள் கட்டப்பட்டிருக்கும். அக்கால்களில் ஆட்டு மந்தைகள் நின்று தின்னும்படி தழைகள் கட்டப்பட்டிருக்கும். வீட்டுக் கதவுகள் கயிற்றால் வரிந்து கட்டப்பட்டவை. வரகு வைக்கோல் பரப்பப்பட்ட மெத்தை மீது கிடாயின் தோல் இடப்பட்டிருக்கும். அதன் மீது வீட்டு முதியவன் படுத்திருப்பான். முற்றத்தில் உள்ள முளைகளில் பசுக்களைக் கட்டும் கயிறு

கள் கிடக்கும். வேலியின் பக்கத்தில் வெள்ளாடும் செம்மறியாடும் படுத்திருக்கும்.

### ஆயமகளிர்

"பறவைகள் விழித்தெழும் விடியற்காலையில் இடைமகளிர் மத்துக்கள் ஆரவாரிக்கும்படி தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பர். அம்மகளிர் மோர்ப் பானைகளைத் தலைமீது சுமந்து சென்று குறிஞ்சி நிலத்தில் விற்பர்; கிடைத்த பொருளைக் கொண்டு உணவுப் பொருள்களை வாங்கி வந்து சமைத்து இல்லத்தினரை உண்பிப்பர். நெய் விற்றுவந்த பணத்தைக் கொண்டு பொன்னை வாங்கார்; தம் தொழிலைப் பெருக்கக் கருதிப் பால் எருமையையும் பசுவையும் வாங்குவர். நீங்கள் அவர்களிடம் செல்லின், அவர்கள் உங்கட்குத் தினையரிசிச் சோற்றைப் பாலுடன் தருவர்.

### ஆனிரை மேய்ப்பவர்

"நீங்கள் அவற்றை உண்டு அப்பாற் செல்லின், ஆனிரைகளை மேய்க்கும் ஆயரைக் காணலாம். செருப்பை அணிந்திருப்பதால் அவர்கள் பாதங்களில் தழும்பு ஏறி இருக்கும். கோடரியைப் பிடித்திருப்பதால் கை காய்த்திருக்கும். காவடிகளைச் சுமத்தலால் அவர்கள் தோள்கள் காய்த்திருக்கும். அவர்கள் மரப் பூக்களையும் கொடிப் பூக்களையும் பறித்து மாலையாகத் தொடுத்து அணிந்திருப்பர்; அரையில் மட்டும் ஒற்றை உடை உடுத்திருப்பர்; பாற்சோற்றை உண்பர்; பசுக்களைப் புல்வெளிகளில் மேயவிட்டுத் தாம் மரநிழலில் இருந்து குழல்களில் பாலைப் பண்ணை இனிமையாக இசைப்பர்; அது சலித்து விட்டால், உள்ளே துவார

முடைய குமிழமரக் கொம்பை மரல்கொடியின் நாரால் வளைத்துக் கட்டி, யாழ்போல் செய்து, யாழ் நரம்பு போன்ற அந்த நாரை விரலால் அசைத்துக் குறிஞ்சிப் பண்ணைப் பாடுவர். அப்பண் ஓசையைச் செவிமடுக்கும் வண்டுகள், தம் இன வண்டுகள் செய்யும் ஓசையென நினைத்து ஆயர்களைச் சூழ்ந்து இசை யின்ப வெள்ளத்தில் ஆழ்ந்து தம்மை மறக்கும்.

## பயிர் விளைக்கும் ஆயர்

" நீங்கள் இக் காட்சியைப் பார்த்துக் கொண்டே செல்லின், பயிர் விளைக்கும் ஆயர் வாழ்கின்ற ஊர் களைக் காண்பீர்கள். அங்கு வீடுகளின் முற்றத்தே யானைகள் நிற்பது போலக் காட்சியளிக்கும் குதிர் களைக் காணலாம். அவற்றில் ஆயர் பயிராக்கிய வரகு முதலிய தானிய வகைகள் சேமித்து வைக்கப்பட்டிருக் கும். கொட்டிற் சுவர்களில் வண்டி உருளைகளும் கலப் பைகளும் சார்த்தி வைக்கப்பட்டிருக்கும். வீட்டுக் கூரைகள் கரிய வரகு வைக்கோலால் வேயப்பட்டு மழைக் காலத்து மேகத்தைப் போலத் தோன்றும். நீங்கள் அங்குச் செல்லின் வரகுச் சோற்றையும், அவரை விதையிட்டுச் செய்த குழம்பையும் உண்ணப் பெறலாம்.

## மருத நிலக் காட்சி

"நீங்கள் அங்கு உண்டு மேலும் வழி நடப்பீராயின், வயல்கள் நிறைந்த மருத நிலத்து ஊர்களை அடை வீர்கள். உழவர் ஆழமாக உழுது விதைத்து உண் டாக்கிய பயிர்கள் தோட்டங்களில் விளைந்து காட்சி

யளிக்கும். உழவர் அப்பயிர்களை அறுவடை செய்யும் பொழுது, அவற்றிடை வாழ்ந்து வந்த காடைகள் உழவரின் ஆரவாரத்துக்கு அஞ்சித் தம் குஞ்சுகளுடன் முல்லை நிலத்திற் சென்று தங்கும்.

" வயல்களில் நண்டுகள் வாழும். கோரைப்புல்லைக் கொம்பால் குத்தி எடுக்கும் எருதுகள், நண்டு வளைகள் அழியும்படி வயல்களில் நின்று ஒன்ருேடு ஒன்று போரிடும். உழவர் அவ்வயல்களை நன்கு உழுது பதப்படுத்தி நாற்றுக்களை நடுவர். வயல் வேலை செய்பவருடைய மக்கள் சண்பகக் காயின் தாதைத் தம் மார்பிடத்தே பூசிக்கொள்வர்; களை பறிப்பவர் அப்புறப்படுத்திய நெய்தற்பூவைச் சூடிக்கொள்வர்; தவறின், முள்ளிப் பூவைப் பறித்து, தம் தலையில் சூடுவர்.

" வயல் வேலை செய்பவர் அவல் இடிப்பர். அவ்வோசைக்கு அஞ்சிக் கிளிகள் பறக்கும். நெல் அறுப்போர் கதிர் முற்றிய நெல்லின் தாள்களை அறுப்பர்; அறுத்துக் களத்தில் போர் அடுக்குவர்; போர்களின் அடியைப் பிடித்து விரித்துக் கடாக்களைக் கொண்டு மிதிக்கச் செய்வர்; வைக்கோலை நென்மணிகளிலிருந்து வேருகப் பிரிப்பர்; நென்மணிகளைத் தூவித் தனியாக்குவர்.

" இவ்வளமிக்க ஊர்களில் நாகரிகமான வீடுகள் காணப்படும். வீடுகளுக்குப் பக்கத்தில் பசுக்களைக் கட்டும் முளைகள் அடிக்கப்பட்டிருக்கும்; மற்ருெரு பக்கத்தில் நெற் குதிர்கள் காணப்படும். பிள்ளைகள் சிறிய தேர்களை உருட்டி விளையாடுவர்; பின்னர்ச் செவிலித் தாயரிடம் பாலை

அருந்தி, விளையாடிய களிப்புத் தீரத் துயில் கொள்வர். நீங்கள் அங்குச் செல்லின், நெற் சோற்றோடு பெட்டைக் கோழியின் பொரியலையும் பெற்று உண்ணலாம்.

" வயல்களில் கரும்பும் பயிராகும். வயல்களை அடுத்த இடங்களில் கரும்பாலைகள் இருக்கும். அங்குக் கருப்பஞ்சாற்றிலிருந்து கட்டியும் கற்கண்டும் செய்யப்படும். நீங்கள் அங்குச் செல்லின் கருப்பஞ் சாற்றைப் பருகலாம் ; கற்கண்டை உண்ணலாம்.

## மீன் பிடிப்போர் வாழிடம்

" நீங்கள் இவ்வயல்களைத் தாண்டி மேற்கொண்டு செல்லின் மருதநிலத்து நீர் நிலைகளில் மீன் பிடித்து வாழும் மக்கள் வாழ்கின்ற இடங்களைக் காண்பீர்கள். அவர்களின் இல்லங்கள் காஞ்சி, வஞ்சி, மூங்கில் ஆகிய மரங்களின் கொம்புகளைக் கொண்டு அமைக்கப் பட்டவை; தருப்பைப் புல் வேயப்பெற்ற கூரைகளை உடையவை. கூரை மீது சுரைக் கொடிகள் படர்ந்து காய்களைத் தோற்றுவித்து அழகிய காட்சியை நல்கும். வீட்டு முற்றத்தில் மீன் பிடிக்கும் வலைகள் கிடக்கும். அங்கு வாழ்பவர் குளங்களில் உலவி இருல், கயல் மீன் முதலியவற்றை வலை வீசிப் பிடிப்பர் ; குற்றுத கொழியல் அரிசியைக் களியாகக் கிண்டுவர் ; அதனைப் பெரிய தட்டுகளில் இட்டு ஆற வைப்பர் ; நெல் முளையை இடித்து அக்கூழுடன் சேர்ப்பர் ; இரண் டையும் இரண்டு இரவும் இரண்டு பகலும் அறியாமல் வைத்து இனிமை பிறக்கச் செய்வர்; பின்னர் முற்றிய அக் கலவை நறிய கள்ளாகும். அவர்கள் அதனை

மீன் சூட்டோடு உண்டு களிப்பர் ; நீங்கள் செல்லின் உங்கட்கும் அவற்றை உவப்புடன் ஈவர்.

"அவற்றை உண்டு மேற்செல்லின், பாணர் தூண்டில் போட்டு மீன் பிடிக்கும் காட்சியைக் காண லாம். தூண்டிலில் கோக்கப்படும் இரையை இட்டு வைக்க ஒரு தோற்பை பாணனிடம் இருக்கும். அவன் மீனைத் தப்பாமற் பிடிக்கும் திறமை உடையவன். மூங்கில் தடியில் கயிறு கட்டப்பட்டிருக்கும். அதன் நுனியில் தூண்டில் கட்டப்பட்டிருக்கும். பாணன் அத்தூண்டிலில் இரையை மாட்டி நீரினுள் விடுவான். அதனை உண்மையான இரையென்று நம்பி அகப் படும் மீன்களும் உண்டு. அது தம் உயிருக்கு உலை வைக்கும் இரை என்பதை உணர்ந்து தப்பிப் போவனவும் உண்டு. அவற்றுள் ஒன்றாகிய வாளை மீன் தப்பிச் செல்லும் வேகத்தில் நீர் நிலையின் பக்கத்தே நிற்கும் பிரம்பின் நிழலைக் கண்டு தூண்டி லென நினைத்து அஞ்சும். அந்நீர் நிலையில் தாமரை, குவளை முதலிய மலர்கள் மலர்ந்து கண்ணுக்கினிய காட்சியை நல்கும். அவற்றுள் தெய்வங்கட்கு விடப் பட்ட தாமரை மலர்களைத் தவிரப் பிற மலர்களைக் கொய்து உங்கட்குத் தருவர். நீங்கள் சூடிக்கொள்ள லாம்.

### பார்ப்பார் இல்லங்கள்

"அந்நீர் நிலைகட்கு அப்பால் பார்ப்பார் இல்லங் களைக் காணலாம். ஒவ்வோர் இல்லத்தின் முன்புற முள்ள பந்தற்கால்களில் பசுக் கன்றுகள் கட்டப்பட் டிருக்கும். சாணியால் மெழுகப்பட்ட இல்லங்களில்

தெய்வங்களின் உருவங்கள் காணப்படும். அருந்ததி போன்ற கற்பும் நல்லொழுக்கமும் உடைய பார்ப்பன மகளிர் சுவை மிக்க உணவைச் சமைப்பர்; 'இராசான்னம்' என்னும் சோற்றினைச் சமைப்பர். மாதுளங் காய்களைச் சிறு துண்டுகளாக அரிந்து மிளகுத் தூளைத் தூவிக் கறிவேப்பிலை கூட்டி நெய்யில் வெதுப்பிய பொரியலைச் செய்வர்; மாங்காய் ஊறுகாய் வைத்திருப்பர். நீங்கள் அங்குச் செல்லின், இவற்றைப் பெற்று உண்ணலாம். நீராடும் துறைகளில் பெண்கள் விட்டுச் சென்ற கற்கள் பதித்த மகரக் குழையினை நீல நிறமுள்ள சிச்சிலிப் பறவை எடுத்துக்கொண்டு அந்தணர் வேள்விச் சாலையில் நட்ட யூபத்தின்மேற் சென்று தங்கும். அது, சோனகர் பாய்மரத்தின் மேல் ஏற்றிய அன்ன விளக்கைப் போலவும், விடிவெள்ளி போலவும் சுடர் விட்டு ஒளிரும்.

## துறைமுகம்

"அங்கிருந்து அப்பாற் செல்லின், கடற்கரை நகரம் ஒன்றைக் காண்பீர்கள். அங்குள்ள துறைமுகத்தில் மேற்றிசை நாடுகளிலிருந்து குதிரைகளையும், வடதிசைப் பண்டங்களையும் கொண்டு வந்த கப்பல்கள் நிறைந்திருக்கும். கரை ஓரத் தெருக்களில் பரதவர் வளமனைகளும், காவல் நிறைந்த பண்டசாலைகளும் இருக்கும். வீடுகளில் விளைபொருள்கள் நிறைந்து கிடக்கும். உயர்ந்த மாடங்களில் விலை உயர்ந்த அணிவகைகளை அணிந்தவரும், மயில் போன்ற சாயலை உடையவருமாகிய நங்கையர் உலாவுவர்; காற் சிலம்புகள் ஒலிக்கப் பந்தாடி

மகிழ்வர் ; கைவளையல்கள் அசையும்படி கழங்கு விளையாடுவர்.

**கள்ளுக் கடை**

" கடற்கரையின் மற்றொருபால் கள்ளுக் கடை ஒன்று இருக்கும். அங்குப் பச்சை நிறமுள்ள கொடிகள் ஆடிக்கொண்டிருக்கும். கடையின் முற்றத்தில் தெய்வத்திற்குத் தூவின பூக்கள் காணப்படும். அங்குக் கள் சமைக்கும் மகளிர் வட்டிலைப் பலகாலும் கழுவுவதால் சிந்தின நீர் தேங்கிச் சேருக இருக்கும். தாய்ப்பன்றி தன் குட்டிகளுடன் கிடந்து அச்சேற்றைக் கலக்கும். ஒருபால் ஆண் பன்றி வளர்க்கப் படும். நீங்கள் அங்குத் தங்குவீராயின் பன்றி இறைச்சியுடன் கள்ளையும் பெறலாம்.

**கலங்கரை விளக்கம்**

" துறைமுகத்தில் மிக்க உயரமானதும்,வைக்கோற் கற்றை முதலியவற்றால் வேயப்படாததுமான உயர்ந்த மாடம் உண்டு. அங்குக் கடலிற்றிசை தெரியாது மயக்குறும் கலங்களைக் 'கரை இங்கு இருக்கிறது. வருக' எனப் பரிந்தழைக்கும் விளக்கம் வைக்கப் பட்டுள்ளது. அதனைக் கடந்து செல்லின், தென்னங் கீற்றால் வேய்ந்த கூரையையும், முற்றத்தில் மஞ்சட் செடிகளையும் கொண்ட வீடுகளைக் காணலாம். நீங்கள் அவ்வீடுகளில் தங்கின், இளநீர், வாழைப்பழம், பனை நுங்கு, முற்றின வள்ளி முதலிய கிழங்குகள் முதலியவற்றைப் பெற்று உண்ணலாம்.

**வளமிகுந்த ஊர்கள்**

" நீங்கள் செல்வ வளம் கொழிக்கும் இத்துறைமுக நகரத்தை விட்டு அப்பாற் செல்லின், பல ஊர்களைக்

காண்பீர்கள். அங்கு வானளாவிய மாடங்கள் இருக்கும். அவற்றைச் சுற்றிக் குளிர்ந்த நிழல்தரும் மரங்கள் காட்சியளிக்கும். அவ்வூர்களைக் கடந்து மேலும் செல்வீராயின், காந்தள் வளர்கின்ற மலையில் யானை கிடந்தாற்போலப் பாம்பணையில் திருமால் பள்ளி கொண்டுள்ள திருவெஃகாவை அடையலாம்.

**திருவெஃகா.**

" திருவெஃகாவில் நெருக்கமாக வளர்ந்த இளமரச் சோலைகள் உண்டு. அச்சோலைகளில் உள்ள காஞ்சி மரத்திற் படர்ந்திருக்கும் குருக்கத்திக் கொடியின் பூக்கள், மரத்தடியில் இருக்கும் நீர் நிறைந்த குழிகளில் விழுந்து கிடக்கும். அக் காட்சி, அப்ப வாணிகர் சுட்ட அப்பம் பாலிற் கிடத்தற் போலத் தோன்றும். நீருள்ள அப்பொழில்களில் மகளிர் நீர் விளையாடுவர். அவர்கள் நெற்றி இளம்பிறை போன்றது. அதன் உச்சியில் ' மகரவாய் ' என்னும் தலைக்கோலம் இருத்தல், இளம்பிறையைக் கரும் பாம்பு பற்றினாற் போலக் காணப்படும். நீங்களும் அச் சோலைக் குளங்களில் நீராடலாம். பிறகு நீராடும் துறைகளில் தங்கி இளைப்பாறலாம். பின்னர் உங்கள் இனிய யாழை வாசித்துத் திருவெஃகாவில் உள்ள கடவுளை வாழ்த்தி அவ்விடத்திலிருந்து செல்லுங்கள்.

**காஞ்சி மாநகர்**

"திருவெஃகா * என்னும் தலத்தைத் தாண்டி அப்பாற் செல்லின், காஞ்சி மாநகரை அடைவீர்கள்.

* திருவெஃகா என்னும் கோவில் உள்ள இடம் இப்போது சிறிய காஞ்சிபுரம் என்று கூறப்படுகிறது.

அது பழைமை மிக்க ஊர். அங்குச் சோலைகள் உண்டு. அவற்றில் உள்ள சூல்கொண்ட மந்திகள், பரிக்கோலைக் கையில் தாங்கிய யானைப்பாகர் சோர்ந்திருக்கும் சமயம் பார்த்து யானைக்கு நெய்யுடன் கலந்து வைக்கப்பட்ட அரிசியைத் திருடிச் செல்லும். தேர் ஓடும் அகன்ற தெருக்கள் குழிந்திருக்கும். அம் மாநகர் பரிசிலர்க்கு அடையாத வாயிலை உடையது. செங்கற்களால் கட்டப்பட்ட மதில்கள் காவற்காடு சூழ்ந்த பக்கங்களை உடையன. காஞ்சி மூதூர் உலக நகரங்களுட் சிறந்தது; பல்வேறு சமயத்தவர் தொழும்படி எடுக்கப்படும் விழாக்களாற் சிறந்தது.

### இளந்திரையன் சிறப்பு

"தருமன் முதலிய ஐவர் கடும்போர் புரிந்து நூற்றுவரை யழித்தனர். இளந்திரையன் பாண்டவர் போல அளவற்ற படைவன்மை உடையவன்; தன் மீது வந்த பகைவரை வென்று, அடைக்கலமென்று வந்தவரை ஆதரிப்பவன். அப்பெரியோன் காஞ்சி மூதூரில் இனிது வீற்றிருக்கின்றான். மலையிலிருந்து இறங்குகின்ற அருவி அம்மலைப் பொருள்களை வாரிக் கொண்டுவந்து கடலில் சேர்ப்பது போலத் திறைப் பொருள்களுடன் வந்த பல நாட்டு வேந்தர் அவனது தலைவாயிலிற் காத்திருப்பர்.

"இளந்திரையன் மயக்கம் இல்லாத அறிவுடையவன். அவன் மிக்க அருளுணர்ச்சி உடையவன்; வறுமையால் நலிந்தோர்க்கும் வறுமையுற்றுத் தன்னை இரந்தோர்க்கும் விரும்பியவற்றைக் கொடுப்பான்; புலவர்க்கு அணிகளை வழங்குவான்; கொடுமையற்ற

தன் அமைச்சருடன் கொலுவீற்றிருப்பான். பாணர் தலைவனே, நீ அப்பேரரசனைப் பார்த்து, 'பகைவராகிய யானைகளுக்குச் சிங்கம் போன்றவனே! பகைவருடைய மதில்களை அழிப்பவனே! பகைவருடைய முடிக்கலம் முதலியவற்றைக் கொண்டு வீரமுடி புனையும் வெற்றியுடையவனே! தொண்டைக் கொடியைச் சூடிய மரபில் பிறந்தவனே! வீரர்க்கு வீரத்தைக் கொடுப்பவனே! கொடியவர்க்குக் கொடியவனே! போரிற் புகழ் பெற்றவனே! நின் புகழிற் சிலவற்றைக் கூறிப் புகழ்ந்து வந்தேன்; பெரும, நீ நெடிது வாழ்க!' என்று சொல்லி நினது யாழை இனிமையுற வாசி. இளந்திரையன், 'நிலையற்ற இவ்வுலகில் நிலை பெறுவது புகழ் ஒன்றே' எனக் கருதியிருப்பவன்; ஆதலின் பிறர்க்கு வழங்கி இன்புறுதலையே தொழிலாக உடையவன். அவன் நின்னை விரும்பி வரவேற்பான்; உனது அழுக்கேறிய கிழிந்த ஆடையை அகற்றச் செய்து, பாலாவியை ஒத்து விளங்கும் நூலால் செய்த பட்டாடைகளை உடுத்தத் தருவான்; மடைத்தொழில் வல்லோன் ஆக்கிய இறைச்சியையும், சோற்றையும், இன்சுவை உணவுப் பொருள்களையும் வெள்ளிப் பாத்திரங்களில் இட்டு உண்ணச் செய்வான்; கார் மேகத்தில் மின்னல் தோன்றினாற் போல விறலி கூந்தலிற் சூடும்படி பொன்மாலையையும், பொற்றாமரைப் பூவையும் வழங்குவான்; வெண்ணிறக் குதிரைகள் பூட்டப் பெற்ற தேரைத் தருவான்; இவ்வாறு மேலும் பல பரிசில்களைக் கொடுப்பான். ஆதலின், பாணர் தலைவனே! நீ விரைந்து அப் பெருவள்ளலிடம் சென்று பயன் பெறுவாயாக!"

# 5. முல்லைப் பாட்டு

## (1) முதியவள் அரசமாதேவியைத் தேற்றல்

### முன்னுரை

தலைவன், தலைவியைப் பிரிந்து சென்ற பிறகு அவன் வரும் வரையில் தலைவி ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த்துவது முல்லை எனப்படும். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பகைவரை வெல்லப் போருக்குச் சென்ற பிறகு அவன் மனைவி இருந்த நிலையைக் கூறுதலால் இப்பாட்டு முல்லைப் பாட்டு எனப்படுகிறது. இப்பாடல் 103 அடிகளை உடையது. இதனைப் பாடியவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்.

இப்பாட்டில் முதியபெண்டிர் சகுனம் பார்க்கும் வழக்கமும், பாசறையின் அமைப்பும், கார்காலத்தில் காட்டு வழிகளில் தோன்றும் காட்சிகளும், பிறவும் நன்கு குறிக்கப்பட்டுள்ளன.

### தலைவியின் பிரிவாற்றுமை

பாண்டியன் நெடுஞ்செழியன் தான் மேற்கொண்ட போரை முடித்துக்கொண்டு கார்காலத் தொடக்கத்தில் வருவதாகத் தன் அரசமாதேவியிடம் கூறி விடை பெற்றுச் சென்றான். அவன் குறித்த கார்காலம் வரும் வரை தலைவி அரிதின் ஆற்றியிருந்

தாள். கார்காலத் தொடக்கம் தோன்றியது. இராச மாதேவி கணவன் சொன்னபடி வரவில்லையே எனக் கவலை கொள்கிருள். அவள் கண்கள் முத்துப் போலக் கண்ணீரை உதிர்க்கின்றன. அவ்வரச மாதேவி தன் நெகிழ்ந்த வளையல்களைத் திருத்து கிருள்; அம்பு தைக்கப் பெற்ற மயில் போல நடு நடுங்குகிருள்; தன் அணிகள் நெகிழப் பெறுகிருள்.

## முதியவள் தேற்றல்

அரசமாதேவியைக் கண்ணை இமைகள் காப்பது போலக் காத்து வருகின்ற முதியவள் ஒருத்தி கீழ் வருமாறு பல இனிய மொழிகளால் அவளைத் தேற்று கின்ருள்: "படைத் தலைவர் ஊர்ப்புறத்தில் உள்ள பாக்கத்தில் நற்சொல் கேட்பதற்காக முதிய பெண்டிரைப் போக்கினுர். அவர்கள் நெல்லையும் முல்லை மலரையும் நாழியிற் கொண்டு சென்று, தெய்வத்தை வணங்கி நற்சொல் கேட்க நின்ருர்கள். அப்பொழுது குளிரால் நடுங்கிய ஓர் இடைமகள் தன் கைகளைத் தோளிற் கட்டியபடி, வெளிவந்தாள்; தாம்பில் கட்டப் பட்டு நின்ற கன்றுகளை நோக்கினுள். அவை பால் உண்ணுமையால் சுழன்று வருந்தின. ஆய்மகள் அக் கன்றுகளை நோக்கி, 'உங்கள் தாயர் வயிருர மேய்ந்து இப்பொழுதே வருவர்' என்று கூறினுள். முதிய பெண்டிர் அந் நற்சொல்லைக் கேட்டு இங்கு வந்து கூறினர். ஆதலால், நின் கணவர் போரில் வெற்றி பெற்று இப்பொழுதே வருவர். நின் கவலையை ஒழிப்பாயாக!"

### தலைவி ஆற்றியிருத்தல்

மாவலியிடம் மூன்றடி மண்கேட்டு அதனை அளக்கப் பேருருக் கொண்ட திருமால் போல வானத்திலிருந்து தரைவரை மழை பெய்கிறது. பாண்டியன் அரண்மனைப் பள்ளியறையில் பொற் பாவை ஏந்தி நின்ற தகளில் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. ஏழடுக்கு மாளிகையின் மூட்டு வாய்களிலிருந்து சொரிகின்ற நீர்த்தாரை ஓசை ஆரவாரிக்கிறது. 'தலைவர் வருவதாகச் சொல்லிச் சென்ற கார்ப் பருவம் இதுதான் போலும்! முது பெண்டு கூறியாங்கு அவர் விரைவில் வருவார்' என அரசமாதேவி தனக்குள் கூறிக்கொண்டு தன் பஞ்சணை மெத்தையிற் படுத்திருக்கிருள்.

## (2) பாசறையில் பாண்டியன்

### பாசறை அமைப்பு

பாண்டியனுடைய படைவீரர் பகைப்புலத்தை அடுத்த காட்டில் தங்குகின்றனர்; காட்டாறு சூழ்ந்த ஓரிடத்தில் பிடவம் முதலிய புதர்களை வெட்டுகின்ற னர்; பகைப் புலத்தில் காவல் காத்து நின்ற வேட் டுவரின் அரண்களை அழிக்கின்றனர்; தம் பாசறைக்கு அரணாக நாற்புறங்களிலும் முள்வேலி இடுகின்றனர்; அதன் நடுவே பரந்த பாடி வீட்டை அமைக்கின்றனர்; பாசறையில் யானை வீரர், குதிரை வீரர், தேர் வீரர், காலாட் படையினர் ஆகியோர் இருக்கத்தக்க இடங் களை அமைக்கின்றனர். பாசறையின் நடுநாயகமாக அரசன் இருக்கப் பெரிய கோயில் அமைக்கப்படு

கின்றது. வீரர் கால்களைக் கூடமாக நடுகின்றனர்; அவற்றில் கயிற்றை வளைத்துக் கட்டுகின்றனர்; வலிய நீண்ட விற்களை ஊன்றுகின்றனர்; அவற்றின் மீது துணிகளை இட்டு வைக்கின்றனர். அத் தோற்றம், முக்கோல் அந்தணன் முக்கோல்மீது தனது காவி யாடையை இட்டுவைக்குந் தன்மையை ஒத்திருக்கிறது. பின்னர் அவ்வீரர் எறிகோல்களை ஊன்றுகின்றனர்; பரிசைகளை வரிசையாக வைக்கின்றனர்; பல நிறங்களைக் கொண்ட துணிகளைக் குத்துக் கால்களில் வைத்துக் கூடாரமாக அமைக்கின்றனர். அஃது அரசனுக்கு அமைக்கப்பட்ட கூடாரமாகும். அதன் வாயிலில் சட்டையிட்ட யவனர் புலியைச் சங்கிலியிற் கட்டி வைத்திருக்கும் காட்சியை ஓவியமாக எழுதுகின்றனர்.

## பாசறையில் பாண்டியன்

பாண்டியன் தனக்கென்றமைந்த கூடாரத்தில் திரைச் சீலை தொங்கவிடப்பட்ட உள்ளறையில் உள்ள படுக்கையில் ஒரு கையை வைத்தும் மற்றொரு கையை முடியுடன் சேர்த்தியும் இருக்கிறான்; முதல் நாட் போரில் யானையை வேலால் எறிந்து இறந்த வீரரை நினைக்கிறான்; அம்பு தைத்த துன்பத்தால் செவி சாய்த்துப் புல் உண்ணாமல் நிற்கும் பரிகளை நினைக்கின்றான்; 'இப்படை இவ்வளவு தளர்ச்சியுற்றிருப்பதால், இதனைக் கொண்டு நாம் நாளை வெற்றி காண்பது எங்ஙனம்?' எனத் தளர்ச்சி அடைகிறான்.

அவ்வமயம் அங்குக் காலத்தின் அளவை அளந்து சொல்லுவோர் மன்னனைப் பணிந்து

வாழ்த்தி, நாழிகை வட்டிலிற் சென்ற நாழிகை இத்துணை எனக் கூறுகின்றனர். அப்பொழுது தூய வெள்ளை யாடையை உடுத்த அழகிகள் விளக்கைக் கொளுத்துகின்றனர்.

## பாசறைக் காட்சி

பாசறையில் நான்கு தெருக்கள் கூடும் ஒவ்வொரு சந்தியிலும் ஒரு யானை காவலாக நிறுத்தப் பட்டுள்ளது. அது கரும்பையும், நெற்கதிரோடு கலந்து கட்டிய இலையையும், அதிமதுரத் தழையையும் உண்ணவில்லை; அவற்றால் தனது நெற்றியைத் துடைக்கிறது; அவற்றைத் துதிக்கையில் ஏந்தித் துதிக்கையைத் தன் கொம்பின்மீது வைத்த வண்ணம் நிற்கின்றது. யானைப் பாகன் யானைப் பேச்சுக்களைச் சொல்லிப் பிளவுபட்ட பரிக்கோலால் கவளத்தை உண்ணும்படி குத்துகிறான். இடுப்பில் வாள் அணிந்த பெண் வேலையாட்கள் நெய் நிறைந்த திரிக் குழையில் நீண்ட திரியைக் கொண்டு செவ்வையாக அமைத்த விளக்குகளை ஏற்றுகின்றனர்; விளக்குகள் அவியும் பொழுது தம் கையில் உள்ள பந்தத்தைக் கொண்டு அவற்றைக் கொளுத்துகின்றனர்.

சட்டையும் தலைப்பாகையும் அணிந்த மெய் காப்பாளர் அரசனது இருப்பைச் சுற்றி வருகின்றனர். சட்டையிட்ட ஊமர் அரசன் பள்ளியறையைக் காவல் செய்கின்றனர். அரசனோ, மறுநாள் எவ்வாறு போர் செய்யலாம் என்பதைப் பற்றி எண்ணிய வண்ணம் துயில் கொள்ளாதிருக்கிறான்.

## (3) பாண்டியன் மீட்சி

### பாண்டியன் வெற்றி

இரவு ஒருவாறு கழிந்து பொழுது புலர்கிறது. அரசன் போர்க் கோலம் கொள்கிறான்; படைகள் அணி வகுத்து நிற்கின்றன; பகைவர் கைகலக்கின்றனர். போர் கடுமையாக நடைபெறுகிறது. பாண்டியன் வாட்போர் புரிகிறான்; இறுதியில் வெற்றி பெறுகிறான்; தான் மேற்கொண்ட செயல் நன்முறையில் முடிந்ததை எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைகிறான்! உடனே அவனுக்குத் தன் கோப்பெருந்தேவியின் நினைவு வருகின்றது; தன் படைகளுடன் ஊர் நோக்கித் திரும்புகிறான்.

### வழியில் நற்காட்சி

பாண்டியன் குதிரைகள் பூட்டப்பெற்ற தேரில் வாகை மாலையுடன் வருகின்றான். அவன் வரும் வழியில் காயா கரிய மலர்களைப் பூத்து நிற்கிறது; கொன்றை பொன்னிற மலர்களைப் பூத்து நிற்கிறது; வெண்காந்தள் உள்ளங் கையைப் போல மலர்ந்துள்ளது; முறுக்கேறிய கொம்புள்ள ஆண்மான் பெண் மானுடன் துள்ளி விளையாடுகிறது; தோன்றிப் பூ இரத்தம் போலப் பூத்திருக்கிறது. வெற்றிக்கு அறிகுறியாகிய கொம்பும் சங்கும் முழங்குகின்றன. அரசனது தேரிற் பூட்டப் பெற்ற குதிரைகள் அரசமாதேவியின் அழகிய காதுகள் நிரம்பும்படி ஆரவாரிக்கின்றன. தலைவன் வருகிறான் என்பதை உணர்ந்த மாதேவியின் முகம் அன்றலர்ந்துள்ள செந்தாமரை போல மகிழ்ச்சிப் பெருக்கால் மலர்கின்றது.

# 6. மதுரைக் காஞ்சி

## (1) பாண்டியன் போர்ச் சிறப்பு

### முன்னுரை

மதுரை அரசனுக்குக் கூறிய காஞ்சி என்பது, 'மதுரைக் காஞ்சி' என்பதன் பொருளாகும். காஞ்சி என்பது வீடு பேறு காரணமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் உணர்த்துவது எனப் பொருள் படும். மதுரைக் காஞ்சி, பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்த மாங்குடி மருதனார் என்ற புலவரால் பாடப் பட்டது. இதன்கண் பாண்டியர் சிறப்பு, நெடுஞ் செழியனுடைய போர்ச் சிறப்பு, அவனால் ஆளப்பட்ட பாண்டி நாட்டுச் சிறப்பு, மதுரைமா நகரச் சிறப்பு, வீடு பேறடைய அவன் மேற்கொள்ளத்தக்கவை என்பன தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. இது 782 அடிகள் உடைய பாடலாகும். பாண்டியன் நெடுஞ் செழியனை நோக்கிப் புலவர் மாங்குடி மருதனார் கூறிய செய்திகள் கீழே தரப்படும்:

### செங்கோல் வேந்தன்

"இந்நிலவுலகம் நீராரும் கடலை எல்லையாகவுடையது; தேன் கூடுகள் தொங்கும் உச்சிகளைக் கொண்ட மலைகளைப் பெற்றது. இந்நிலவுலகில் உள்ள நாடுகளில் பாண்டிய நாடு ஒன்று. இங்கு நெடுஞ்செழியனாகிய நீ தண்ணளி சார்ந்து செங்கோல் செலுத்துகின்றனை; அதனால் நினது நாட்டில் ஞாயிறும் திங்களும் களங்கமின்றி விளங்குகின்றன. மக்கள் பசியும் பிணியும் இன்றி வாழ்கின்றனர். உன் முன்னோரும்

நெறிபிறழாத அமைச்சரைக் கொண்டு நாடாண்டனர். நீ அவர்தம் மரபில் வந்துள்ளமை பாராட்டத் தக்கது. சிறந்த போர்ப்படையுடைய இராவணனைத் தமிழகத்திலிருந்து அகலச் செய்த பேரறிஞனை அகத்தியற்குப் பிறகு நீ சான்றோனாக இருக்கும் சிறப்புடையை.

## சிறந்த மரபில் வந்தவன்

"உன் முன்னோர் பலர் சிறந்த போர் வீரராக இருந்தனர். அவருள் வடிம்பு அலம்ப நின்ற பாண்டியன் என்பவன் ஒருவன். அவன் சினம் மிக்க போர்க் களிறுகளை உடையவன்; பகைவர்மீது அச்சமின்றிப் பாயும் குதிரைகளை உடையவன்; காற்றைப்போற் பறக்கும் தேர்களை உடையவன் ; வாள் - ஈட்டி - வில் ஏந்திய வீரரை உடையவன். அப்பெரு வீரன் இப் பலதிறப் படைகளைக் கொண்டு, தன்னையொத்த சேர சோழராகிய இரு பெரு வேந்தரை வென்றான் ; குறுநில மன்னர் பலரை வென்றான். அப்பெரு வீரனைப் போல நீ விளங்குதல் எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. நீ, பகைவர் நெருங்குதற்கரிய காவற் கட்டையும், உயர்ந்த கோபுர வாயில்களையும், நீண்ட மதிலையும் அம்புகளை உமிழும் அரணையும் பொருட்படுத்தாமற் சென்று பகைவர் நாட்டைக் கவரும் வீரம் மிக்கவன்.

## குட்டநாடு வென்றவன்

"மலை நாட்டின் ஒருபகுதி குட்டநாடு எனப்படும். அங்குள்ள கடற்கரை மணற்குன்றுகளை உடையது.

அந்நாட்டுக் கடற்கரையில் பரதவர் மகளிர் நின்று குரவை ஆடுவர். ஊர்களில் விழாக்கள் கொண்டாடப் பெறும். குட்ட நாட்டார் இசைப் புலவர்களை நன்கு ஆதரிப்பவர்கள்; அவர்களுக்குக் கன்றுடன் பிடிகளை யும் கொம்புள்ள களிறுகளையும் அளிப்பர்; பொற் றாமரைப் பூவைச் சூட்டி விலையுயர்ந்த அணிகலன்களை யும் வழங்குவர். அவர்கள் வாழ்கின்ற குட்டநாட்டை வென்ற வீரனே!

## எழுவரை வென்ற வீரன்

“முதுவெள்ளிலை என்பது செல்வம் மிகுந்த ஊர். அஃது ஒரு குறுநில மன்னனைச் சேர்ந்தது. அவனது நாட்டில் வான்பொய்ப்பினும் தான்பொய்யா வள முடைய ஆறு நன்னீரை உதவி விளைச்சலை உண்டாக் கும்; அங்கு முற்றி விளைந்த நெற்கதிர்கள் காற்றில் அசைந்து ஒலி செய்யும்; அறுவடை செய்பவர் ஆர வாரிப்பர். அங்குத் தங்கும் பறவைகள் இரைச்சலிடும். அந்நாட்டைச் சேர்ந்த கடற் பகுதியில் சுறக்கள் மிகுதியாக வுண்டு. கடற்கரையில் தாழைகள் உண்டு. அத்தாழைகளை வேலியாகக் கொண்ட குளிர்ந்த இள மரச்சோலையில் வந்து வீசும் துவலையின் ஓசையும், படகில் மீன் பிடிக்கச் சென்றவர் மீண்டு வந்து இறங் கும் ஓசையும், கழியிடத்துள்ள உப்புப் பாத்திகளில் உப்பு விற்கும் அளவரின் ஒலியும், பல தொழில் களைச் செய்பவரின் ஆர்ப்பும் கடற்கரையில் கலந்து ஒலித்துக் கொண்டிருக்கும்.

“இத்தகைய நாடுகளை ஆளும் குறுநிலமன்னர் ஐவரும், நெடுநில மன்னர் இருவரும் நின்னை எளியன்

என்று தவருக மதித்துப் போருக்கெழுந்தனர். நீயோ கூற்றுவனை ஒப்பச் சீற்றங்கொண்டு அவ்வெழுவரையும் தாக்கித் துரத்திச் சென்று இறுதியில் தலையாலங்கானம் என்னும் இடத்தில் முற்றிலும் முறியடித்து அழியாப் புகழ்பெற்றனை.

**பேரரசன்**

" கொற்கை நகரக் கோமானே! புறங்கொடுத்தார் மேற் செல்லாத படையொடு முருகப்பெருமான் பகை மேற் செல்வது போல நீ நின் சிறந்த படையுடன் வீரமிக்க பகைவர்மேற் செல்வாய் ; சென்று அவர்களை வென்று, நின் ஏவல் கேட்குமாறு செய்வாய் ; நின்னுடன் நட்புக் கொண்டவர் குடியை உயர்த்துவாய் ; நட்டார்க்கு நன்மையும், பகைத்தார்க்குத் தீமையும் செய்தல் பாண்டியர் இயல்பு என்பதை நின் செயல்களால் மெய்ப்பிப்பாய்.

**பாழடைந்த பகைவர் நாடுகள்**

" நின் பகைவர் நாடு மலையரணைக் கொண்டதாயினும் நீ அஞ்சாது செல்வாய் ; மலைகளில் உள்ள காடுகளைக் கடந்து, பகைவருடைய உள்நாடுகளிற் புகுந்து அவர்தம் அரண்களைக் கைக் கொள்வாய். நீ பகைவர்மீது சென்றபோது நான் கண்ட காட்சி என் கண்களை விட்டு அகலவில்லை. போருக்கென எழுந்த நின் படையினது ஆரவாரம் விண்ணில் ஒலித்தது. பரிகள் சென்ற வேகத்தில் தூசி மேலெழுந்தது ; சங்கும் கொம்பும் இரைச்சலிட்டன. இங்ஙனம் சென்ற நின்படை பகைவர் நாட்டில் செய்த

செயல்கள் பல. வீரர் பகைவர்மீது அம்புமாரி பெய்தனர்; காவற் காட்டைத் தீயிட்டு அழித்தனர்; பகைவர் கோட்டை மதில்களைக் கைக் கொண்டனர்; மருதமரங்கள் எரிவாய்ப் பட்டன. 'நாடு' என்று பெயர் பெற்றிருந்த இடம் 'காடு' எனப் பெயர் பெற லாயிற்று. பசுக் கூட்டம் தங்கியிருந்த இடம் புலிக் கூட்டம் தங்கும் இடமாக மாறியது; ஊர்களாக இருந்தவை பாழ்பட்ட இடங்களாயின. அந்நாட்டு மங்கையர் நாட்டின் அழிவினுல் துணங்கைக் கூத்தை மறந்தனர்; குரவைக் கூத்தையும் மறந்தனர். சான்ருேர் இருந்த அம்பலங்களில் பேய்மகளிர் இடங் கொண்டனர்; ஒவ்வோர் கோட்டை வாயிலிலும் காவலர்க்குப் பதிலாக மனத்துயரம் மிக்க மகளிர் நின்று அழுதனர். பசியால் வருந்திய குடிகளைக் காக்க அயல்நாடுகளில் இருந்த அவர்தம் உறவினர் வந்து சேர்ந்தனர். பெரிய மாளிகைகளில் வெந்து வீழ்ந்த குதிரில் கூகை குடியிருக்கலாயிற்று. நாடு நாடாயிருந்த பொழுது செங்கழுநீர் நெருங்கி வளரப் பெற்ற பொய்கைகளில், நாடு காடான பிறகு, யானை மறையத் தக்க உயரமுடைய வாட்கோரையும் சண்பகக் கோரையும் வளரலாயின. எருதுகள் உழுது பண்படுத்திய வயல்களில் பெண் பன்றிகளோடு ஆண் பன்றிகள் ஓடித் திரிந்தன. நின் சொற் கேளாத பகைவர் நாடுகள் இவ்வாறு பாழ்பட்டன.

"இங்ஙனம் பாழடைந்த நாடுகளைச் செவ்வைப் படுத்த நீ அங்குத் தங்குவாய்; பெரிதும் முயன்று அவ்வந் நாட்டு மக்கட்கு இனிய வாழ்வினை அளிக்கப் பல முயற்சிகள் செய்வாய். ஒரு பொய் கூறித் தேவர்

உலகத்தை அமுதத்துடன் பெறலாமாயினும், நீ அதனை விரும்பாய்; எத்தகைய பெருஞ்செல்வம் வருவதாயினும், பிறர் கூறும் பழியோடு வருமெனின், நீ அதனை விரும்புவதில்லை. நீ பிறர்க்குக் கொடுத்த லால் வரும் புகழ் ஒன்றையே விரும்பும் இயல் புடையை. மக்களால் தொழப்படும் பிறை நாடோறும் வளர்தல் போல உன் வெற்றித் திருவீதியில் உன் எதிர்கால மரபினரது வெற்றியும் வழிவழிச் சிறப்ப தாகுக! நின் பகைவரது ஆக்கம் தேய்பிறை போல நாடோறும் மெலிவதாகுக! சேய்மையிற் சென்று விளக்கமுறும் நினது புகழ் கெடாது நிலை பெறுவ தாகுக!

## (2) பாண்டிய நாட்டுச் சிறப்பு

### குறிஞ்சி நிலச் சிறப்பு

"வையையும் பொருநையும் பாயப் பெற்ற பாண்டிய நாடு குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய் தல் என்னும் ஐவகை நிலப் பகுதிகளையும் பெற் றுள்ளது. குறிஞ்சி நிலத்தில் ஐவன நெல்லும், தோரை நெல்லும் வளர்ந்திருக்கும். அந் நிலத்தில் ஒரு பால் தினைக் கொல்லைகளிற் கிளியை ஓட்டும் ஓசையும், ஒருபால் அவரையைத் தின்னும் காட்டுப்பசுவை ஓட் டும் ஓசையும்,மற்றொருபால் குறவன் ஆண்பன்றியைப் பொறிக்கிடங்கில் வீழ்த்திக் கொல்வதால் உண்டாகும் ஒலியும், பிறதொருபால் வேங்கை மலரைப் பறிக்கும் குறமகளிர் 'புலி, புலி' என்னும் ஆரவாரமும், விலங்கு கள் ஒன்றை ஒன்று தாக்கும்பொழுது உண்டாகும் பேரொலியும் கலந்து மலையிடத்து எதிரொலி செய்யும்.

## பாலையின் பண்பு

" அருவிகள் அற்ற பாலை நிலத்தில் ஊகம் புல் வைக்கோல் போற் காய்ந்திருக்கும். மணல் வெளி களில் சூருவளிக் காற்றடிப்பதால் மணற் குன்றுகள் திடீரெனத் தோன்றும். பாலை நிலத்தில் ஆறலை கள்வர் திரிவர். வணிகர்க்கும் வழிப் போக்கர்க்கும் அக் கள்வரால் தீங்கு நேராதபடி காக்க அரசன் வீரர்களை அந் நிலத்திற்கு அனுப்புதல் வழக்கம். அவ் வீரர்கள் அந் நிலத்தில் இலையால் வேய்ந்த குடில்களில் இருப்பர்; மான் தோலாகிய படுக்கை யிற் படுப்பர்; வில்லையும் அம்பையும் கொண்டு பாலை நிலத்து வழிகளில் திரிவர்.

## முல்லை நிலத்து நிலைமை

" பாண்டிய நாட்டு முல்லை நிலத்தில் வெள்ளிய முசுட்டைப் பூவும், முல்லைப் பூவும் பாறைகள் மீது உதிர்ந்து பரந்து கிடக்கும்; வரகும் எள்ளின் காயும் முற்றியிருக்கும். முல்லை நில மக்கள் ஒருபால் தினையை அறுவடை செய்வர். பள்ளங்களில் நீர் நிற்கும்; அந்நீரில் நெய்தல் பூத்திருக்கும்.

## மருதத்தின் மாண்பு

" மழை நீர் ஒன்று சேர்ந்து வெள்ளமாக மருத நிலத்திற் பரக்கும்; ஒருபால் கவலைக் கிழங்குகள் அகழ்ந்த குழிகளிற் பாய்ந்து ஓசை செய்யும்; யானைகள் அஞ்சும்படி பெய்யும் மழை நீர் ஆற்றை நிரப்பும்; ஆற்றிடைக் குறை யில் ஏறும்படி வெள்ளம் பரந்து பாயும். வெள்ள

நீர் குளங்களில் தேக்கி வைக்கப்படும். அந்நீர் பாய்தலால் யானை மறையுமளவு நெல்பயிர் ஓங்கி வளரும். குளங்களிலும் மடுக்களிலும் வண்டுகள் விரும்பியுண்ணும் தேனையுடைய தாமரைப்பூ, நீலப்பூ, ஆம்பற்பூ முதலியன மலர்ந்து அழகுபொலிய விளங்கும். வலைஞர் சம்பங்கோழிகள் உறக்கம் நீங்கி எழும்படியாக வள்ளைக் கொடிகளைத் தள்ளி, மீன்களைப் பிடித்து வந்து விலை கூறுவர். ஒருபால் கரும்பாலைகள் ஓசையிடும்; மற்றொருபால் களைபறிக்கும் ஓசை எழும்; வேறொருபால் கள்ளுண்ட களமரது ஆரவாரம் கேட்கும்; பிறிதொருபால் நெல்லறுப்போர் ஆரவாரம் எழும்; மேகந் தங்கும் உச்சியையுடைய திருப்பரங்குன்றத்தில் விழாக் கொண்டாடும் ஓசையும் கேட்கும். மகளிரும் மைந்தரும் வையைப் புதுப் புனலில் நீராடும் ஓசை எழும். பறவைகள் ஒலியும் பாணரின் பாட்டொலியும் முன் சொல்லப்பட்ட பலவகை ஒலிகளும் மருத நிலத்தில் நிறைந்திருக்கும்.

## நெய்தலின் நிலைமை

"நெய்தல் நிலத்தில் மக்கள் மீன் பிடித்து விற்பர்; முத்தெடுப்பர்; கடல் தந்த பலவகைப் பண்டங்களையும் விலை கூறுவர். யவனர் முதலிய அயல் நாட்டவர் குதிரை முதலியவற்றைப் பாண்டிய நாட்டுத் துறைமுக நகரங்களில் இறக்கி, அவற்றுக்குப் பதிலாக வெள்ளுப்பு, தீம்புளி, கருவாடு முதலிய பல பண்டங்களைத் தம் கப்பல்களில் ஏற்றிச் செல்வர்.

"பாண்டி மன்னனே! இத்தகைய ஐவகை நிலங்களையும் பெற்ற நினது நாட்டில், தொழில்களுட்

சிறந்தவையான உழவு - வாணிகம் என்னும் இரண்டி னுல் கிடைத்த செல்வத்தால் புகழ் மருவிய குடிகள் வாழ்கின்றனர். பெரும! அவர்கள் வாழ, நீ வாழ் வாயாக! நீ வாழ, அவர்கள் வாழ்வார்களாக!"

## (3) மதுரை மாநகரச் சிறப்பு

### வையையாறு

நான்மாடக்கூடல் என்னும் மறுபெயர் பெற்ற மதுரை பாண்டியர் கோநகரமாகும். அது நிலமக ளின் முகத்தைப் போலப் பொலிவு பெற்றிருக்கும். அப் பெரு நகரத்தை வையையாறு அழகு செய்கின்றது. அவ்வாற்றங்கரையில் உள்ள வானளாவி உயர்ந்து நெருங்கிய மரக்கிளைகளில் மந்திகள் தாவித் தாவி விளையாடும்; மயில்கள் அகவும். ஆங்காங்கு மணற் குன்றுகள் காணப்படும். நீராடும் கரைகளில் மரங் கள் உதிர்த்த மலர்கள் வையையாற்றில் மிதந்து செல்லும். அந்த ஆற்றின் துறைதோறும் பாணர் குடியிருப்புக் காணப்படும்.

### அகழி - மதில் - வாயில்

நகரத்தைச் சூழ்ந்த அகழி ஆழமுடையது. கோட்டை மதில்கள் பேரரசராலும் தாக்க முடி யாதவை; பகையரசர் புறங்காட்டி ஓடுதற்கு ஏது வானவை; சுரங்க வழியுடையவை; வானுற ஓங்கி வளம்பெற நிமிர்ந்தவை. கோட்டை வாயில் நெய் பூசுதலால் கருமை எய்திய நெடிய நிலைகளையும், திண் ணிய கதவினையும் உடையது. அதன்மீது கட்டப்

பட்டுள்ள மாடங்கள் முகில்கள் உலாவும் மலைபோல உயர்ந்திருக்கும். மக்களும் விலங்குகளும் இடையறுது போதலும் வருதலும் செய்தலின், கோட்டை வாயில் இடையறுது நீரோட்டமுடைய வையை யாற்றை ஒத்திருக்கும்.

## கோட்டைக்குள் நகர அமைப்பு

கோட்டைக்குள் அகன்ற தெருக்கள் இருக்கும். தெருக்களின் இரு புறங்களிலும் சாளரங்கள் பல அமைந்த வீடுகள் உயர்ந்து தோன்றும். தெரு வையையாற்றையும், இருபுறத்து வீடுகள் வையை யாற்றின் கரைகளையும் ஒத்திருக்கும். கடைத் தெருவில் பலமொழிகளைப் பேசும் மக்களின் பேச்சொலி எழும். நகரத்தில் விழாவைப் பறையறைந்து தெரிவிக்கும் ஓசை காற்றுல் அலைப்புண்ட கடல் ஒலிபோல் முழங்கும். கோவில்களிலிருந்து பலவகை இன்னியங்கள் ஒலி எழும். அவ்வொலியைக் கேட்ட மக்கள் தெருக்களிற் கூடி ஆரவாரம் செய்து மகிழ்வர். விழாக்களுக்காகக் கட்டப்பட்ட கொடிகளும், படைகள் பெற்ற வெற்றியை அறிவித்தற்கென்று கட்டப்பட்ட வெற்றிக் கொடிகளும், கடைகளில் கட்டப்பட்ட அடையாளக் கொடிகளும் கட்டடங்களின் உச்சியில் அசைந்து கொண்டிருக்கும்.

## நகரத்தில் நால்வகைப் படைகள்

காற்றுல் நிலை தளர்ந்து சுழலும் கப்பல்போல அரசனது யானைப் படை சினம் மிகுந்து சுழன்று குத்துக்கோற்காரரைக் கொன்று, பாகரைத் தூக்கி

எறியும் ; காலிற் சங்கிலியைப் பிணித்திருக்கும் கட்டுத் தறியை முறிக்கும்; மதம் பெருக நிற்கும். காற்றைப் பிளந்து ஞாயிற்றை அடைய விரும்பிப் பறக்கும் அன்னச் சேவலை ஒத்த வெண்ணிக்குதிரைகள் பூட்டப் பெற்ற தேர்ப் படை வலி மிக்கது. குதிரைப் படை விரைவான செலவினை உடையது; வட்டமாகவும் நேராகவும் விரைந்து செல்லவல்லது. காலாட் படை வில் - வாள் - ஈட்டி வீரர்களைக் கொண்டது.

இந்நால்வகைப் படைகளும் நகர வீதிகளிற் செல்லும் பொழுது, இனிய உணவுப் பண்டங்களை விற்பவரும், பூவினைத் தட்டுகளில் ஏந்தி விற்ப வரும், சுண்ணம் விற்பவரும், வெற்றிலை-பாக்கு – சுண்ணும்பு இவற்றை விற்பவரும் ஒதுங்கி யிருப்பர் ; படைகள் அகன்ற பின்னர்த் தெருக்களிற் போந்து பண்டங்களை விலைகூறுவர். மேகங்கள் கடல் நீரை முகக்கினும் ஆறுகள் கடலிற் கலப்பதால் கடல் நீரில் கூடுதல் - குறைதல் ஏற்படுவ தில்லை. அதுபோலப் பண்டங்கள் செலவாக ஆகப் புதிய பண்டங்கள் வந்து சேர்ந்தவண்ணம் இருப்ப தால், கடைத்தெருவில் பண்டங்களுக்குக் குறை வில்லை.

## செல்வரும் மகளிரும்

செல்வர் மாலையில் பூத்தொழிலுடைய பட்டாடை களை உடுப்பர் ; அரையில் உடைவாளைச் செருகி யிருப்பர்; தோளில் மேலாடைகளைத் தரித்திருப்பர் : வேப்ப மாலையும் மாணிக்க மாலையும் அணிவர் ; மாலை யில் குதிரைகள் பூட்டிய தேரில் காலாட்கள் சூழ்ந்து

வரத் தெருக்களிற் செல்வர். பூத்தொழில் அமைந்த கைவளையல்களையும் பிற பொன்னணிகளையும் சிலம்பையும் அணிந்த மகளிர் மாடங்கள்தோறும் நிலா முற்றத்தில் நின்று விழாக் காண்பர். மாடங்களிற் கட்டியுள்ள கொடிகள் அவர்கள் முகங்களை மறைக்கும்; காற்றடிக்கும் பொழுது அக்கொடிகள் அசைந்து இடம் தருவதால், அம்மகளிர் முகங்கள் மேகங்கட்கு இடையில் தோன்றும் திங்களைப்போலக் காணப்படும்.

## மாலைக்கால வழிபாடு

சிவபெருமான் முதலாகவுள்ள கடவுளர்க்குப் பலி கொடுத்தற்காக அந்திக் காலத்திற்குச் சிறிது முன்பு தொடங்கிய விழாவில் பல்லியங்கள் ஒலிக்கும். பௌத்த சமயத்தைச் சார்ந்த பேரிளம் பெண்டிர் தாமரைப் பூவைப் பிடித்தாற்போலச் சிறுபிள்ளைகளை எடுத்துக்கொண்டு, தம் கணவருடன் வழிபாட்டுக்கு வேண்டும் மலர்களையும் தூபங்களையும் ஏந்திக் கொண்டு பௌத்தப் பள்ளிகட்குச் செல்வர். வேதங்களை ஓதி வேள்வி முதலியவற்றைச் செய்து வீட்டின்பத்தை இவ்வுலகத்திலேயே அடைகின்ற பிரமவித்துக்கள் இருக்கின்ற மடங்களில் சிலர் அறநெறி கேட்பர். மற்றுஞ் சிலர் முக்காலமும் மூவுலகச் செய்திகளும் உணர்கின்ற சமண முனிவர் உறையும் அமணப் பள்ளிகளில் அறவுரை கேட்பர்.

## அறங்கூறவையம் முதலியன

மேற் சொல்லப்பட்ட கோவில்கட்கும் பள்ளிகட்கும் அப்பால் துலாக்கோல் போல நடுவு நிலையுடைய

அறத்தைக் கூறும் அறங்கூறவையம் தோன்றும். காவிதிப்பட்டம் பெற்றுத் தலைப்பாகை தாங்கி அரசனை அறநெறியிலிருந்து வழுவாமற் காத்துவரும் அறிவுடை அமைச்சர் இருக்கைகள் இருக்கக் காணலாம். அவற்றுக்கப்பால் வானளாவியனவும், பிற நாடுகளிலிருந்து வந்து வாணிகத்தால் செல்வம் திரட்டிய வணிகர் வாழ்வனவும் ஆகிய வளமனைகள் தோன்றும். புரோகிதர், ஒற்றர், தூதுவர், சேனைத் தலைவர் முதலியோர் வாழிடங்களும் அடுத்தடுத்துக் காணப்படும்.

### அந்திக் கடை

சங்கைக் கொண்டு வளையல் முதலியவற்றைச் செய்பவரும், மணிகளைத் துளையிடுபவரும், பொற்கொல்லரும், பொன் வாணிகரும், ஆடை விற்பவரும், மலர்களையும் சாந்தினையும் விற்பவரும், நெய்தற்றொழில் செய்பவரும், ஓவியக்காரரும், பிறரும் கூடி அந்திக் கடையில் வாணிகம் செய்வர். அவர்களால் எழுப்பப்படும் ஆரவாரம், சேரனது அவையில் அறிஞர் கூடித் தருக்கங்களைக் கூறும் ஆரவாரம்போல இருக்கும்.

### அறக்கூழ்ச் சாலை

பாண்டியன் கோநகரில் அறக்கூழ்ச்சாலை உண்டு. அதனில் பலா, வாழை, முந்திரிகைப் பழங்களையும், பாகற்காய், வாழைக்காய், வழுதுணங்காய் முதலிய காய்களையும், இலைக்கறிகளையும், இறைச்சி கலந்த சோற்றையும்,கிழங்கு வகைகளையும், பால் முதலியவற்

றையும் பரிமாறுவோர் கொண்டுவந்து வறியவர்க்கு வழங்குவர்.

### இரவு நிகழ்ச்சிகள்

திருமால் பிறந்த ஓணநாளில் விழா நடைபெறும். போரிற் சிறந்த மறவர் கள்ளுண்டு ஒருவரோடு ஒருவர் போரிட்டு நெற்றியில் வடுப்பெற்றுத் தோன்றுவர். போர்ப்பயிற்சி பெறும் யானை பாகரை விட்டு ஓடுதலால் பரிக்கோற்காரர் அதனை விரட்டிப் பிடிப்பர். குழந்தையைப் பெற்ற செல்வமகளிர் தெய்வத்தின் அருளால் துன்பமற்றுக் குளத்து நீரில் நீராடுவர். அவ்வமயம் முதற் சூல் கொண்ட மகளிர் தாமும் எவ்விதத் துன்பமும் இன்றி மக்களைப் பெற வேண்டும் என்று கடவுளை வேண்டுவர்; பின்னர்ப் பூசைக்கு வேண்டும் பலவகைப் பொருள்களைச் சேர்ப்பர்; சுற்றத்தினரை வரவழைப்பர்; தேவராட்டி தெய்வமேறப்பெற்று நற்சொல் கூறுவள். அப்பொழுது யாழிற் செவ்வழிப்பண் வாசிக்கப்படும்; பல வாத்தியங்கள் ஒலி செய்யும்; சூல்கொண்ட மகளிர் மயில்போல மெத்தென நடந்து பாற்சோறு முதலியவற்றை உண்பர். மாரிக்காலத்துப் பூத்த குறிஞ்சிப் பூவைத் தலையிற் சூடிய மகளிர் கடப்ப மாலையைச் சூடுகின்ற முருகனை உள்ளத்தில் நிறுத்தி வழிபடுவர்; பிறகு ஒருவரோடு ஒருவர் கைகோத்து மன்றுகள் தோறும் குரவைக் கூத்தாடுவர். இவை இரவில் முதற்சாம நிகழ்ச்சிகள் ஆகும். நள்ளிரவில் நகரில் தெய்வங்கள் உலாவும்; சங்கு முதலிய வாத்தியங்கள் ஒலியின்றிக் கிடக்கும். மடப்பத்தையும் களிப்பையும்

பல்வேறு அணிகலன்களையும் உடைய மகளிர் இனிதே துயில்வர். அப்பங்களைச் சுடும் அப்ப வாணிகர் கண்ணயர்வர். விழாவிற் கூத்தாடும் கூத்தர் கூத்தை முடித்த பிறகு உறங்குவர்.

நகரத்தார் அனைவரும் கண்ணுறங்கும் நடுயாமத்தில் நகரக்காவலர் கண்ணுறங்கார். அவர் புலி போலும் வீரமுடையர்; அஞ்சா நெஞ்சினர்; கள்வரின் தந்திரங்களை நன்குணர்ந்தவர்; எய்யும் குறி தப்பாத அம்பினர்; மழையால் தெருவில் நீர்ப்பெருக்கம் மிகினும், காரிருள் கவிந்திருப்பினும் காவலில் தப்பாத கடமை உணர்ச்சி உடையவர். அவர்கள் கரிய நிறத்தினர்; கரிய உடையினர்; வாளேந்திய கையினர்; மெல்லிய நூலேணி சுற்றிய அரையினர்; காற்றினும் கடிதிற் செல்லும் கள்வரையும் கட்டிப் பிடிக்கும் ஆற்றல் உடையவர். இத்தகைய சிறந்த வீரர்களால் காக்கப்படும் மதுரைமா நகரில் கள்வர் பயம் ஏற்படுதல் அரிதாகும்.

**காலை நிகழ்ச்சிகள்**

வேதத்தை முற்ற உணர்ந்த அந்தணர் வைகறையில் துதிகளைப் பாடுவர். பாகர் யானைகட்குச் சோற்றுக் கவளம் ஊட்டுவர். தேரிற் பூட்டப் பெறும் குதிரைகள் பந்தியில் நின்று புல்லைக் கடிக்கும். பண்டங்களை விற்பவர் தம் கடைகளை மெழுகுவர். கள் விற்பவர் கள் விலை கூறித் திரிவர். உறுதியான வீட்டுக் கதவுகள் மூடுவதாலும் திறப்பதாலும் ஓசை செய்யும். காலையிற் கள்ளுண்டு மயங்கியவர் மது மயக்கத்தால் குழந்தைகள்போல மழலை பேசுவர். அர்சனை

நின்று ஏத்துவோர் நின்று வாழ்த்துவர். பள்ளி யெழுச்சி பாடுவோராகிய வைதாளிகர் அரசன் எழு தற்குரிய பாடல்களைப் பாடுவர். நாழிகைக் கணக்கர் நேரத்தைக் கூறக் காலை முரசம் ஒலிசெய்யும். கோழிச் சேவல் விடியற்காலத்தை அறிவிக்கக் கூவும். ஆண் பறவைகள் தத்தம் பெடைகளுடன் கூடி இனிய குரல் எழுப்பும்.* கூட்டில் அடைத்து வளர்க்கப்படும் கரடி, புலி முதலிய விலங்குகள் முழக்கமிடும். பிடி யோடு கூடிய களிறு பிளிறும். பகைப்புலங்களி லிருந்து கொண்டுவரப்பட்ட பசுத்திரளும், தோற்ற வேந்தர் திறையாகக் கொண்டுவந்த அணிகளும், பிற வும் அரண்மனைக்குக் கொண்டுசெல்லப்படும்.

## மன்னவன் செய்வன

மதுரை அரண்மனையில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகின்ற பாண்டியன் வைகறையில் எழுவான்; பணி மகளிர் மதுவைப் பொன் வட்டில்களில் வார்த்துக் கொடுப்பர். அரசன் அதனை உண்டு களிப்பான். அவனுடைய அரசமாதேவி சிறந்த கற்புடையவள்; மணிகள் அழுத்திய அணிகளைப் பூண்டவள்; மாந் தளிர்போன்ற மேனியள்; மகரக் குழை பொருந்திய காதினள்; மலர்ந்த செந்தாமரைபோன்ற முகத்தி னள். அப்பேரழகி உபசரிப்ப, மன்னன் எழுவான்; எழுந்து கடன்களை முடிப்பான். பிறகு அவன் மார்பில் மாலை தரிப்பான்; கையில் வீர வளையை அணிவான்; விரலிற் கணையாழியைப் பூண்பான்; கஞ்சியிட்டுச்

* 1800 ஆண்டுகளுக்கு முன் மதுரையில் உயிர்க் காட்சி சாலை இருந்தது என்பதை இக் குறிப்பினால் அறியலாம்.

5

சலவை செய்யப்பெற்ற துகிலே உடுப்பான்; அதன் மீது அணியவேண்டும் அணிகளை அழகுற அணிந்து நாளோலக்க மண்டபத்தில் வீற்றிருப்பான்.

அவ்வளவில் ஏனுதி முதலிய சிறப்புப் பட்டங்களைப்பெற்ற படைத்தலைவர் வந்து வேந்தனது வெற்றித் திறத்தை வாழ்த்துவர். பின்னர் அரசன் போரில் தம் ஆற்றல் காட்டிப் பொருது வெற்றி பெற்ற வீரர்களை வரவழைத்து, அவர்கட்குத் தனது உளமார்ந்த வாழ்த்துதலைக் கூறி, அவரவர் தகுதிக் கேற்பப் பரிசில் நல்கி அவர்களை மகிழ்விப்பான்.

இவ்வாறு, பாண்டிய நாட்டையும், மதுரை நகரத்தையும், அந்நகரத்து மக்கள் தொழில்களையும், மன்னனது செயல்களையும் வருணித்த புலவர், மன்னனை நோக்கிப் பின்வருமாறு வாழ்த்துகிருர். அவர் அவனுக்குக் கூற எண்ணிய அறிவுரை இவ்வாழ்த்தில் அமைந்திருக்கின்றது.

## செய்ய வேண்டுவன

" பெருமானே ! புகழ்படைத்து மறைந்த மன்னர் பலராவர். அவர்கள் யாழ் வாசித்தாற் போலப் பாடும் இனிய குரலையுடைய விறலியர் அணியும்படி அணிகளை நாடோறும் வழங்கினர் ; கொழுத்த இறைச்சியையும், சோற்றையும், கள்ளையும், யானைகளையும், பகைவேந்தர்பால் கவர்ந்த பொருள்களையும் பாணர்க்கு வழங்கினர் ; விடியற் போதில் வந்து பாடும் சூதர்க்குத் தேரையும் குதிரையையும் உதவினர் ; பகைவர் நாடுகளை அழித்தனர் ; நண்பர் நாடுகளைக்

காத்தனர். 'இங்ஙனம் போரிலும் கொடையிலும் சிறந்திருந்த அவர்கள் அறவழி தேடாது மாண்டனர்.

" அரசே! நீ அங்ஙனம் இருந்து மறைதல் ஆகாதென்னும் நோக்கத்தால் இதனைக் கூறுவேன், கேட்பாயாக: இவ்வாழ்விற் பெரியதாயுள்ள பொருள் ஒன்று உண்டு. அதனைக் கடவுள் பக்தி மிகுந்த பெரியோர் சொல்லக் கேட்பாயாக. நினக்கென வகுக்கப்பட்ட ஆயுட்காலம் முடியச் சிறப்புற்றிருந்து வாழ்வாயாக! ஐம்பொறி இன்பத்தைப் பெரிதெனக் கருதாது, பேரின்பத்தைக் கருதி இறை வழிபாட்டிற் கவனத்தை மிகுதியாகச் செல்ல விடுவாயாக! உலக மயக்கம் நின்னைவிட்டுச் சிறிது சிறிதாக அகல்வதாகுக!"

# 7. நெடுநல் வாடை

## (1) குளிர்கால நிலைமை

**முன்னுரை**

பகைமேற் சென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் கோப்பெருந்தேவிக்கு அவ் வருத்தம் தீரும்படி, 'அவன் பகையை வென்று விரைவில் வருவானாக', என்று கொற்றவையைப் பரவும் ஒருத்தி கூறியதாகப் பாண்டியனை நக்கீரனார் பாடிய பாட்டு இது. இது 188 அடிகளைக்கொண்ட ஆசிரியப்பா. தலைவனைப் பிரிந்திருந்து வருந்தும் தலைவிக்கு வாடைக்காலத்தின் ஒருபொழுது ஒரு யுகம் போலத் தோன்றி நெடிதாகிய வாடையாய், அரசன் வெற்றிக்குக் காரணமான நல்லதாகிய வாடையாயினமையால், இப்பாடல் நெடுநல் வாடை எனப் பெயர் பெற்றது. இதில் குளிர்கால நிலைமையும், தலைவியின் பிரிவாற்றாத நிலையும், அரசனது பாசறை நிலையும் விரித்துரைக்கப்படுகின்றன.

**மழை பெய்ய, நடைபெறுவன**

பெய்ய வேண்டும் காலத்துத் தவறாது பெய்யும் முகில்கள் உலகம் குளிரும்படி மழையைப் பொழிகின்றன. ஆனிரைகளை அடித்து ஓட்டும் கோலைக் கையிற் கொண்ட இடையர் மழைநீர் வெள்ளத்தை வெறுக்கின்றனர்; தம் மந்தைகளை மேட்டு நிலத்தில் மேயும்படி விடுகின்றனர். அவர்கள் கழுத்தில் அணிந்த

காந்தள் மலர் மாலைகள் மழைத்துளிகள் படுதலால் அழகு கெட்டுள்ளன. அவர்கள் குளிரால் உடல் நடுங்குகின்றனர்; அவர்களின் பற்கள் பறை கொட்டுகின்றன. ஆடு மாடுகள் மேயாது நிற்கின் றன. குரங்குகள் குளிரால் நடுங்குகின்றன. காற்று மிகுதியாக வீசுதலால் பறவைகள் மரங்களிலிருந்து நிலத்தில் வீழ்கின்றன. பசுக்கள் தம் கன்றுகட்குப் பால் கொடாது உதைத்துத் தள்ளுகின்றன. முசுட்டை வெண்ணிற மலர்களைப் பூக்கின்றது. விரைந்து பாயும் வெள்ள நீருக்கு எதிரே கெண்டை கள் நீந்திச் செல்கின்றன. பீர்க்குப் பொன்னிறப் பூக்களைப் பூக்கின்றது.

## மழை ஓய்ந்த பிறகு

மழை நிற்கின்றது. கொக்குகளும் நாரைகளும் வெண்மணலிலிருந்து மீன்களை உண்ணுகின்றன. வானத்தில் எழுகின்ற வெண்ணிற முகில்கள் நீர்த் துளிகளைச் சிதறுகின்றன. வயல்களில் தண்ணீருக்கு மேல் உயர்ந்து வளர்ந்த நெற்பயிர்கள் ஈன்ற கதிர் கள் முற்றியிருக்கின்றன. கமுகின் காய்கள் முற்றிக் காணப்படுகின்றன. மலர்ச் சோலையில் உள்ள மரங் கள் கிளைகளிலும் இலைகளிலும் பூக்களிலும் தங்கியுள்ள மழை நீரைச் சொரிகின்றன. உயர்ந்த மாடங்களும் செல்வமும் நிறைந்த மூதூர்களில் உள்ள தெருக்கள் வெள்ளத்தால் ஆற்றுக்காட்சியை அளிக்கின்றன. கள்ளைக் குடித்துக் களித்த கீழ்மக்கள் மழைக்கு அஞ்சாராய்த் தெருக்களில் திரிகின்றனர். மாடப் புறுக்கள் வானம் இருண்டிருத்தலால் இரவு-

பகல் அறியாது மயங்குகின்றன. ஆண்புரு தனது பேட்டுடன் வெளிச் சென்று இரைதேடி உண்ணுது பலகைமீது கால்கள் கடுக்க நின்றுகொண்டிக்கிறது.

**மகளிர் செயல்கள்**

மூதூரில் உள்ள வீடுகளில் பணிப்பெண்கள் சாந்து அரைக்கும் அம்மியில் கஸ்தூரி முதலியவற்றை அரைக்கின்றனர். குளிர் மிகுதியால் கூந்தலில் மாலே வைத்து முடியாத மகளிர், அதனிடத்துச் சில மலர் களே வைத்து முடிக்க விரும்புகின்றனர்; சந்தனக் கட்டையை எரித்து, அவ்வெரியில் அகிற் கட்டையை யும் செவ்வரக்கையும் இட்டுப் புகைக்கின்றனர். அவர்தம் படுக்கையறையில் உள்ள சாளரங்களில் தென்றற் காற்று இனிமையாக வீசும். ஆயின் அவை குளிர்காலத்தில் அடைக்கப்பட்டிருக்கின்றன. வாடைக்காற்று சிறிய திவலேகளே எங்கும் பரப்பு கின்றது. இளேயவரும் முதியவரும் தீச்சட்டியில் உள்ள நெருப்பிற் குளிர் காய்கின்றனர். யாழின் நரம்புகள் குளிரில் 'சில்' லென்று இருக்கின்றன. அதனுல் பாடுமகளிர் அவற்றைத் தம் மார்பில் தடவிச் சூடுண்டாக்குகின்றனர். இங்ஙனம் மழைக்காலம் குளிர்காலமாக மாறுகின்றது.

## (2) அரண்மனேக் காட்சி

**அரசற்கு மாளிகை அமைத்தல்**

பாண்டியனுக்கு அரண்மனே கட்டத் தீர்மானிக் கப்பட்டது. வேலே தொடங்க நல்லோரை குறிக்கப் பட்டது. அவ்வோரையில் சிற்ப நூலோர் நூலே நேரே பிடித்துத் திசைகளே அறிந்து, அத்திசைகட்

குரிய கடவுளரை வணங்குகின்றனர்; பிறகு வேந்தற்கு வேண்டும் மனைகளையும் மண்டபங்களையும் வாயில்களையும் அமைக்கின்றனர்; அவற்றைச் சுற்றி மதிலை எழுப்புகின்றனர்; மதிலின் வாயிற் கதவுகள் இரும்பினால் ஆனவை. நிலையைத் தாங்கும் சுவரின் பகுதியின் நடுவில் இலக்குமியும் இருபுறங்களிலும் செங்கழுநீர்ப் பூவும் சுதைகொண்டு செய்யப் படுகின்றன. நிலையின்மீது நெய் பூசப்பெற்றுச் சிறு வெண்கடுகு அப்பப்பட்டிருக்கிறது. வாயில் மலையை இடையே திறந்தாற்போன்ற அகலமும் உயரமும் உடையது. அதனுள் யானைப்படை வெற்றிக்கொடியுடன் தாராளமாகச் செல்லலாம்.

## அந்தப்புரம்

மழைநீர் வந்து விழும்படி நிலா முற்றத்தில் அமைக்கப்பட்டுள்ள குழாய், மீனின் அங்காந்த வாயைப்போல இருக்கின்றது. அக்குழாயிலிருந்து விழுகின்ற நீர் அருவிபோல ஓசை செய்கின்றது. அந் நீருக்கருகில் மயில்கள் கொம்பு வாத்தியத்தைப் போல ஆரவாரிக்கின்றன. அரண்மனை அந்தப்புரத்தில் உள்ள தூண்கள் கருமையும் திரட்சியும் பளபளப்பும் உடையவை. சுவர்கள் உயர்ந்தவை; செம்பினாற் செய்தாற்போன்ற பல வேலைப்பாடுகள் கொண்டவை. சுவர்கள்மீது செஞ்சாந்தினால் மலர்க்கொடிகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருக்கின்றன. தகளிகளில் திரிகள் எரிகின்றன. அரசியின் அந்தப்புரத்தில் உள்ள விளக்கில் நெய் வற்றி ஒளி மழுங்குமாயின், பணிப் பெண்கள் நெய்யூற்றி யவனர் இயற்றிய

பாவை விளக்குகளை ஏற்றுவர். அங்குப் பாண்டியனைத் தவிர வேறு ஆடவர் - பணிமக்களாயினும்-உட்செல்லலாகாது.

**அரசியின் கட்டில்**

அரசமாதேவியின் பள்ளியறையில் அவள் பள்ளி கொள்ளும் கட்டில் இருக்கிறது. அது வட்டவடிவான அமைப்புடையது; நாற்பதாண்டுகள் நிறைந்து போர்க்களத்தில் இறந்த களிற்றின் தானாக வீழ்ந்த தந்தத்தைக்கொண்டு செய்யப்பட்டது; மூட்டுவாய் தெரியாமல் கைதேர்ந்த கம்மியரால் பொருத்தி அமைக்கப்பட்டது; மிகச் சிறிய நுண்ணிய உளி கொண்டு இடையிடையே இலைகள் செதுக்கப் பெற்றது; சிங்கம் முதலியவற்றை வேட்டையாடுகின்ற வடிவமாகச் செய்யப்பெற்ற மெல்லிய தகடுகள் அடிக்கப்பெற்றது. நூலிற் கோக்கப்பெற்ற முத்துமாலைகள் கட்டிலைச் சூழ்ந்து தொங்கும்படி கட்டப்பட்டுள்ளன. நடுவில் உள்ள வெளி புலிநிற நாடாவினுல் பின்னப்பட்டுள்ளது. கட்டிலின் கால்கள் திரண்டு ஓரிடத்திற் சிறுத்தும் ஓரிடத்திற் பருத்தும் தோன்றும்படி அமைக்கப்பட்டுள்ளன. கட்டில்மீது அன்னத்தின் தூவி பரப்பப்பட்டுள்ளது. அதன்மீது கஞ்சி தோய்க்கப்பெற்ற வெள்ளைத் துகில் விரிக்கப்பட்டுள்ளது. அத்துகில்மீது செங்கழுநீர் முதலிய மலர்களின் இதழ்கள் பரப்பப்பட்டுள்ளன.

## (3) கட்டில்மீது அரசமாதேவி

**அரசமாதேவியின் கவலை**

அரசமாதேவி கட்டில்மீது படுத்திருக்கின்ருள்; தன் கணவனது பிரிவினை நினைந்து துன்புறுகிருள்;

தன் ஆடை அணிகளை வெறுக்கின்றாள்; அவள் கையில் பொன் வளையல்கள் இல்லை; வலம்புரிச் சங்காற் செய்யப்பட்ட வளையல்களே இருக்கின்றன. அவள் பூத்தொழிலுடைய பட்டாடைகளையே உடுத்துதல் வழக்கம்; ஆயின், கணவன் பிரிவால் நூலாற் செய்யப்பட்ட மாசேறிய உடையை உடுத்திருக்கிறாள். அவள் கூந்தல் சீவி முடிக்கப் பெறுமையால் விரிந்து நெற்றியிற் படும்படி கிடந்தது. இங்ஙனம் அரசி குளிர்காலத்து நடுயாமத்தில் உறக்கமின்றிக் கிடக்கின்றாள்.

அவளது கவலையைப் போக்கத் தோழியர் முனைந்து, 'அம்மா, உன் தலைவர் இப்பொழுது வருவார். நீ கவலைப்பட வேண்டுவதில்லை' எனப் பல ஆறுதல் மொழிகளைக் கூறுகின்றனர். அரசமாதேவி அம்மொழிகளால் தேறவில்லை. அவள் தன் கட்டிலின் மேற்புறத்தில் தீட்டப்பட்டுள்ள திங்களின் பக்கத்தில் இருக்கும் உரோகிணியைப் பார்க்கின்றாள்; 'இதுபோல நானும் என் கணவரைவிட்டுப் பிரியாதிருக்க முடியாதா!' என்று எண்ணிப் பெருமூச்சு விடுகிறாள். அவ்வளவில் அவள் கண்களிலிருந்து நீர்த் துளிகள் வெளிப்படுகின்றன. அரசி அத்துளிகளை மோதிரமணிந்த தன் சிவந்த விரலால் எடுத்து எறிகின்றாள். மாந்தளிர் போன்ற மேனியும், தாமரை மலர்போன்ற முகமும் உடைய பணிப்பெண்கள், அரசமாதேவிக்கு உறக்கம் வருவதற்காக, செம்பஞ்சு ஊட்டப்படாத அவள் அடிகளை மெல்ல வருடுகின்றனர்.

**கொற்றவையை வழிபடுபவள் கூற்று**

அவ்வமயம் கொற்றவையை வழிபடும் ஒருத்தி அரசமாதேவி கேட்ப, கொற்றவையைப் பார்த்து, பின் வருமாறு கூறுகின்றாள்: "அம்மா! சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண் மாள், பொருநன் என்ற எழுவருடன் பொரவேண்டி அரசன் சென்றுள்ளான். அவன் இப்பொழுது மாற்றூரின் பாசறையிடத்துள்ளான். நம் வீரர்கள் பகைவர் யானைகளை வெட்டி வீழ்த்தினர்; பகைவரின் வாளால் தாக்குண்டு புண்பட்டுக் கிடக்கின்றனர். பாண்டியன் அவர்களைக் கண்டு ஆறுதல் கூறித் திரிவதால் இரவில் தூங்கவில்லை. வாடைக்காற்று வீசுந்தோறும் விளக்குகள் தெற்குப்பக்கம் தலையைத் திருப்பி எரிகின்றன. வேப்பமாலை உச்சியிற் கட்டப்பெற்ற வேலையுடைய படைத்தலைவன் அரசற்கு முன் நடந்து சென்று போரிற் புண்பட்ட வீரரைக் காட்டுகின்றான். வேந்தன் அவ்வீரர்தம் அகம் மலரும்படி அன்புரை கூறுகின்றான். ஆங்காங்கே கட்டப்பட்டு நிற்கின்ற குதிரைகள் தம்மீது விழும் மழைத்துளிகளைத் தம் உடலசைத்து உதறுகின்றன. அரசனது இடத்தோளிலிருந்து மேலாடை நழுவி விழுகின்றது. அவன் அதனைத் தன் இடப்பக்கத்தே அணைக்கின்றான். அரசன் இங்ஙனம் பாசறையிற் செல்லும்பொழுது அவனுடன் கொண்டு செல்லப்படுகின்ற வெண்கொற்றக் குடை அரசன்மீது மழைத்துளி படாமற் காக்கின்றது. இங்ஙனம் பாசறையிலிருந்து போர் புரியும் தொழில் அரசனுக்கு வெற்றியளிப்பதாகுக! அரசமாதேவியின் துன்பம் நீங்குவதாகுக!"

# 8. குறிஞ்சிப் பாட்டு

## (1) செவிலிக்குத் தோழி கூறுதல்

**முன்னுரை**

இப்பாட்டு அகப்பொருள் பற்றியது. தலைவியின் காதலைத் தோழி செவிலித் தாய்க்குக் கூறுவது போல இது பாடப்பட்டுள்ளது. இது ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ்ச் சுவையை அறிவுறுத்தக் **கபிலர்** பாடியதாம். இப்பாட்டு 261 அடிகளை உடையது. குறிஞ்சி என்பது காதலர் கொள்ளும் கூட்டுறவு. அதனைக் கூறுவதால் இப்பாடல் குறிஞ்சிப் பாட்டு எனப் பெயர் பெற்றது.

**தலைவியின் மனநோய்**

"தாயே, வாழ்வாயாக! நான் கூறுவதை விரும்பிக் கேள்: எனது தோழியாகிய தலைவி தாங்கற்கரிய ஓர் எண்ணத்தை மறைத்து வைத்திருக்கிறாள். அவ் வெண்ணத்தாற்றான் அவளது உடல் நாடோறும் மெலிந்து வருகின்றது; அவள் அணிந்துள்ள கை வளையல்கள் கழலுகின்றன. அவளது நோய் மனநோய் ஆதலின், மருந்தினால் மாற்றற் கரியதாகும். உனக்குச் சொல்லுதலும் எளிதன்று. ஆதலின் இதுகாறும் நான் என் உள்ளத்தில் அதனை அடக்கி வைத்திருந்தேன். தலைவியின் அழகு கெட்டது; அவளுடைய தோள்கள் மெலிந்தன. அவளது மெலி

வுக்கு உரிய உண்மைக் காரணத்தை அறிய முடியாத நீ கட்டினுலும் கழங்கினுலும் அறிந்து குறி சொல்லு வாரைக் கேட்டனே. அவர் அது தெய்வத்தால் நேர்ந்த வருத்தம் எனக் கூறினர்; கூறவே, நீ பல நிற மலர் களும் சந்தனமும் தூபங்களும் பிறவும் கொடுத்துப் பல தெய்வங்களை வழிபட்டனே; வழிபட்டும் அந்நோய் தணியாமை கண்டு நீ வருத்த முற்றனே.

## தலைவி விளக்கம்

"நான் ஒரு நாள் தலைவியை நோக்கி, 'அம்மே, நின் உடலை மெலியச் செய்யும் நோய் யாது?' என உள்ளம் உருகிக் கேட்டேன். அவள் என்னைப் பார்த்து, 'தோழி! 'முத்தாலும் மணியாலும் பொன் ஞலும் செய்யப்பட்ட அரிய அணிகள் தொலைந்து போயினும் பின்னர்க் கிடைக்கப்பெறும். ஆயின், குணங்களின் அமைதியும் மேம்பாடும் ஒழுக்கமும் கெடின் அக்கேட்டை நீக்கி முன்போலப் புகழை நிறுத்துதல் அருந்தவ முனிவர்க்கும் முடிவதன்று,' எனப் பண்டை நூல்களை உணர்ந்த பெரியோர் கூறு வர். தலைவரும் யானும் உள்ளம் ஒத்துக் காதல் மணம் செய்து கொண்டோம் என்பதை நாம் இரு வரும் அன்னைக்கு அறிவிப்பதால் பழிஒன்றும் வாராது. எனது காதல் மணத்தை அறிந்த பிறகும் நம்மவர் அதற்கு மாறுபட நடப்பாராயின், நம் உயிர்போகும் வரையில் இவ்வருத்தத்தைப் பொறுத்திருப்பின், நமக்கு மறுமையிலேனும் இக் காதலர் உறவு கிட்டும்,' என்று உள்ளம் உருகி உரைத்தாள்.

**எமது துணிபு**

"நினக்கும் தலைவியின் வருத்தத்துக்கும் இடையே நான் அகப்பட்டு விழிக்கின்றேன்; பகையரசர் இருவரைச் சமாதானம் செய்விக்கும் சான்றோரைப் போல நான் துன்பப்படுகிறேன். இரண்டு குடிகளும் ஒத்துள்ளன; இருவர் குணங்களும் ஒன்றுபட்டுள்ளன; இரு திறத்தும் சுற்றத்தார்க்குக் குறைவில்லை, எனவே, இது தக்க உறவுதான் என்று நாங்கள் துணிந்தோம். இவ்வுறவு எப்படி உண்டாயிற்று என்பதை விளங்க வுரைக்கின்றேன், கேட்பாயாக:

## (2) கூட்டுறவு ஏற்பட்ட முறைமை

**தினைப்புனத்தில் நாங்கள்**

"'தினை உண்ண வரும் கிளிகளை ஓட்டிப் பொழுது படுவதற்குள் வீடு சேருங்கள்,' என்று நீ எங்களைப் புனத்திற்கு அனுப்பினாய் அல்லவா? நாங்கள் நின் சொற்படி தினைப்புனம் சென்றோம். அங்கு ஒரு மரத்தின் உச்சியில் பிரம்புகொண்டு பின்னப்பட்ட பரண் அமைக்கப்பட்டுள்ளது. நாங்கள் அதனில் ஏறி இருந்து, கிளிகள் வருங்கால், கவணும் தட்டையும் பிறவுமாகிய கிளியோட்டும் கருவிகளைக் கொண்டு கிளிகளை ஓட்டினோம். கடலிடத்தே நீரை உண்ட மேகங்கள் முழக்கமிட்டு முருகப் பெருமானது கை வேலைப் போல மின்னி மலையிடத்து மழையைப் பொழிந்தன.. மலை உச்சியிலிருந்து மழைநீர் பளிங்கைக் கரைத்து ஊற்றினாற் போலக் கீழ்நோக்கிக் குதித்து வந்தது.

## மலர் கொய்தல்

"நாங்கள் அப்பளிங்கு நீரில் விளையாடினோம்; எங்கட்கு விருப்பத்தைத் தந்த பாடல்களைப் பாடினோம்; எங்கள் முதுகிற் படிந்திருந்த கூந்தலைப் பிழிந்து நீரைப் போக்கினோம். நீராட்டத்தால் எங்கள் விழிகள் சிவந்தன. பிறகு நாங்கள் மலைச்சாரலுக்குச் சென்றோம். அங்குப் பெரிய இதழ்களையுடைய சிவந்த காந்தட்பூ, ஆம்பற்பூ, அனிச்சப்பூ, குளத்திற் பூத்த செங்கழுநீர்ப்பூ, குறிஞ்சிப்பூ, வெட்சிப்பூ, செங்கோடு வேரிப்பூ, தேமாம்பூ, செம்மணிப்பூ, விரிந்த கொத்தினையுடைய பெரிய மூங்கிற்பூ, வில்லப்பூ, நெருப்பை ஒத்த எறுழம்பூ, மராமரப்பூ, கூவிரப்பூ, வடவனப்பூ, வாகைப்பூ, வெட்பாலைப்பூ, பஞ்சாய்க் கோரை, வெண்காக்கணம் பூ, கருவிளம்பூ, பயனிப்பூ, வானிப்பூ, குரவம்பூ, பச்சிலைப்பூ, மகிழம்பூ, காயாம்பூ, ஆவிரம்பூ, சிறு மூங்கிற்பூ, சூரைப்பூ, சிறுபூளை, குன்றிப்பூ, மருதம்பூ, கோங்கம்பூ, மஞ்சாடிப்பூ, தேனுறும் பாதிரிப்பூ, செருந்திப்பூ, புனிவிப்பூ, சண்பகப்பூ, நாறுகரந்தை, காட்டு மல்லிகைப்பூ, மாம்பூ, தில்லைப்பூ, பாலைப்பூ, கல்லிலே படர்ந்த முல்லைப்பூ, கஞ்சங்குல்லைப்பூ, பிடவம்பூ, செங்கருங்காலிப் பூ, வள்ளிப்பூ, நெய்தற்பூ, செம்முல்லைப்பூ, தாமரைப்பூ, ஞாழற்பூ, மௌவற்பூ, கொகுடிப்பூ, பவழக்கால் மல்லிகைப்பூ, சாதிப்பூ, கருந்தாமக் கொடிப்பூ, வெண்கோடற்பூ, தாழம்பூ, சுரபுன்னைப்பூ, காஞ்சிப்பூ, கருங்குவளைப்பூ, ஓமைப்பூ, மரவம்பூ, தணக்கம்பூ, இண்டம்பூ, இலவம்பூ, கொன்றைப்பூ, அடும்பம்பூ, ஆத்திப்பூ, அவரைப்பூ,

பகன்றைப்பூ, பலாசம்பூ, அசோகமபூ, வஞ்சிப்பூ, பிச்சிப்பூ, கருநொச்சிப்பூ, தும்பைப்பூ, துழாய்ப்பூ, விளக்குப் போன்ற தோன்றிப்பூ, நந்தியாவட்டப்பூ, புன்னைகப்பூ, பருத்திப்பூ, பீர்க்கம்பூ, குருக்கத்திப்பூ, சந்தனப்பூ, அகிற்பூ, புன்னைப்பூ, நாரத்தம்பூ, நாகப்பூ, இருவாட்சிப்பூ, கரிய பெரிய குருந்தப்பூ, வேங்கைப்பூ, மலையெருக்கம்பூ முதலிய பலவகை மலர்கள் மலர்ந்து விழிகட்கு விருந்தளித்தன. நாங்கள் அவற்றை எல்லாம் ஆவலோடு பறித்தோம்; மழையால் தூய்மை செய்யப்பட்ட பெரிய பாறைமீது அவற்றைக் குவித்தோம்.

**பின் நிகழ்ந்த செயல்கள்**

"அவ்வமயம் தினைப்புனத்திற்குள் பறவைகள் வந்தன. நாங்கள் அவற்றை விரட்டினோம்; தழைகளைக் கொய்து உடையாக்கி அரையிலே உடுத்திக் கொண்டோம்; மெல்லிய மலர்களை எங்கள் கரிய கூந்தலில் அழகு பெறவைத்துக் கொண்டோம்; பிறகு அசோக மர நிழலிற் சென்று தங்கினோம்.

**தலைவன் தோற்றம்**

"அங்கு அழகன் ஒருவன் தோன்றினான். அவன் கைகளில் வில்லும் அம்பும் இருந்தன. அவன் அகிற்புகை ஊட்டி அகில் நெய் தடவி முடிந்த கரிய கொண்டை உடையவன்; மலையிலும் மரக் கிளையிலும் தரையிலும் சுனையிலும் பூத்த பல நிற மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகளையும் தாழம் பூவையும் தனது முடியில் அணிந்திருந்தான். சந்தனம் பூசப்பெற்ற அவனது மார்பில் பல வடங்கள்

ஒளி செய்தன. காதில் செருகப் பெற்ற அசோகந் தளிர் அழகு செய்தது. அவன் கட்டியிருந்த ஆடை மீது கச்சு விளங்கியது. அவன் இங்ஙனம் தோன்றிய காட்சி முருகன் காட்சியை ஒத்திருந்தது. அவனுடன் பல வேட்டைநாய்கள் வந்தன. அவற்றின் பற்கள் மூங்கில் அரும்புபோல வெண்மையாக இருந்தன. அந்நாய்கள் எங்களை வளைத்துக்கொண்டன.

## தலைவன் உரையாடல்

"நாங்கள் அந்நாய்களுக்கு அஞ்சி வேறு இடத்திற்குச் சென்றோம். அவன் எங்கள் அச்சத்தைப் போக்க விழைந்து, எங்கள் பின் வந்து பல இனிய சொற்களைப் புகன்றான். 'இளையீர், என் கணைக்குத் தப்பிவந்த யானையை நீங்கள் கண்டதுண்டா?' என்று இனிய குரலிற் கேட்டான். நாங்கள் விடை கூறவில்லை. அப்பெருந்தகையாளன் நகைமுகத்துடன் எங்களைப் பார்த்து, 'மெல்லியலீர், தப்பி வந்த யானையைக் காட்டீராயினும், என்னுடன் ஒரு சொல் பேசுதல் உங்கள் பெருந்தன்மைக்குப் பழுதாமோ?' என்று கேட்டான்; ஓய்வின்றிக் குரைத்துக்கொண்டிருந்த தன் வேட்டை நாய்களை அடக்கி, எங்கள் பதிலை எதிர் பார்த்த வண்ணம் நின்றான்.

## மதம்பிடித்த யானை

"அவ்வமயம் யானையின் பிளிறொலி எங்களைத் திடுக்கிடச் செய்தது. தன் குடிசையில் இருந்த குறமகன், தன் மனைவி தந்த கள்ளைப் பருகித் தினைப் புனக் காவலை மறந்தான். அவ்வமயம் மதயானை

ஒன்று அத்தினைப் புனத்திற் புகுந்து புனத்தை அழித்தது. குறவன் அதுகண்டு சினந்தான்; வில்லை வளைத்து அம்பை எய்தான்; தட்டையைத் தட்டி ஓசை எழுப்பினான்; வாயை மடித்துச் சீழ்க்கை அடித்தான். இவ்வாறு முயன்று யானையைப் புனத்தினின்றும் வெளியே விரட்டினான். வெளிவந்த மதயானை மட்டிலாச் சீற்றங்கொண்டது; பல மரங்களை முறித்து இடியேறு போல முழக்கமிட்டது; தன் துதிக்கையை நிலத்தில் அடித்து ஓடி வந்தது. அந்த யானையின் முழக்கமே எங்களைத் திடுக்கிடச் செய்தது.

**யானையை வென்ற வீரன்**

"நாங்கள் ஓசை வந்த திசையை நோக்கினோம்; பருத்த யானை ஒன்று எங்களை நோக்கி ஓடிவருதலைக் கண்டோம்; உடல் நடுங்கினோம்; உயிரைப் பாதுகாக்கும் ஓரிடத்தைப் பெறவேண்டி, நாணினைக் கைவிட்டு, எங்கள் எதிரில் புன்முறுவலோடு நின்ற வீரனைச் சார்ந்தோம். வீரன் எங்களைப் பார்த்து, 'அஞ்சற்க' எனக் கூறித் தன் வில்லை நன்றாய் வளைத்து நாணேற்றி யானையின் முகத்தில் அம்பைச் செலுத்தினான். அவ்வம்பு யானையின் மத்தகத்தில் தைத்தது. தைத்த இடத்திலிருந்து குருதி பெருகிற்று. அதனால் துன்புற்ற யானை அங்கு நிற்க முடியாது, புறங் காட்டி ஓடிற்று. நாங்கள் எங்கள் பார்வையால் அக் குரிசிலுக்கு நன்றியைத் தெரிவித்து ஆற்றுக்குச் சென்றோம்.

**ஆற்றிலும் ஆபத்து**

"ஆற்றுத் தண்ணீர் தெளிந்திருந்தது. நாங்கள் அதனிற் குதித்து நீராடினோம்; முருகவேளை

நினைந்து மலையில்உறையும்தெய்வமகளிர் கைகோத்து ஆடுவதுபோல நாங்கள் கைகோத்துக்கொண்டு நீரில் விளையாடினோம். இடிந்தகரையில் உள்ள வாழை மரம் நீரால் இழுக்கப்பட்டாற்போல நீரோட்டம் எங்களை இழுத்துச் சென்றது. நாங்கள் அச்சத்தால் இரைச்சலிட்டோம். அது கேட்டு அங்கு வந்த—எங்களை முன்பு யானையிடத்திருந்து காத்த—வீரன் ஆற்றோட்டத்தை மதியாது நீரிற் குதித்தான்; தலைவியையும் என்னையும் கொண்டுவந்து கரை சேர்த்தான். அப்பெரியோன் தலைவியை உளமுருகப் பார்த்து, 'நின்னை மணக்க விரும்புகின்றேன்; நின்னை ஒரு போதும் கைவிடேன்' எனக் கூறி, அவளது நெற்றியைத் துடைத்தான்; 'நின் அருள் வேண்டும்' என்று கூறுவான் போல என்னை நோக்கிச் சிரித்தான்.

## தலைவனது நாட்டுச் சிறப்பு

"தலைவனது நாடு மலை நாடு; பாறைகள் யாண்டும் நிறைந்து காணப்படும்; அவற்றின் மீது மிளகுப் பழங்களும், மாம்பழங்களும், பலாப் பழங்களும் உதிர்ந்துகிடக்கும். இவற்றின் முற்றிய சாறு பாறைகளில் உள்ள பள்ளங்களில் தேங்கிக் கிடக்கும். அதனை நீரென மயங்கி மயில்கள் குடித்து நிலை தவறும்; விழாக் காலத்தில் ஊர் நடுவே கயிற்றில் ஏறி ஆடுகின்ற மகளிர் தளருவது போலத் தளர்ச்சியுறும். இத்தகைய மலை நாட்டையுடைய தலைவன் நம் தலைவியைத் தன் உயிரெனக் கொண்டான். தலைவியும் அவனையே தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நாயகனைக் கொண்டாள்.

## முதல்நாள் சந்திப்பு

"நான் முன் சொன்னபடி தலைவன் தலைவியைச் சந்தித்த முதல் நாள், அவன் முருகப் பெருமானைக் கைதொழுது, 'நின்னைப் பிரியேன்; நீ என் மனைக் கிழத்தி' என்று கூறி, தெளிந்த அருவி நீரைக் குடித்துச் சூளுறவு செய்தான். அவன் அன்று பகல் முழுவதும் எங்களுடன் இருந்து இன்புறப் பேசிப் பொழுது போக்கினான் கதிரவன் மேற்றிசையில் மறைந்தான். அப்பொழுது மான் கூட்டங்கள் மரங் களின் அடியிற் கூடின. பசுக்கள் கன்றுகளை அழைத் துக்கொண்டு மன்றுகளிற் புகுந்தன. கொம்பு போல் வளைந்த வாயுடைய அன்றில் உயர்ந்த பனையின் உள் மடலில் இருந்து தன் பேட்டை அழைத்தது. பாம்பு வெளிச்சத்தில் மேய்வதற்காகத் தன் மாணிக்கத்தைக் கக்கியது. ஆனிரை மேய்த்தவர் இனிய குழல் ஊதி னர். ஆம்பல் இதழ்கள் முறுக்கு அவிழ்ந்தன. பார்ப் பார் அந்திக்காலத்துச் சடங்குகளைச் செய்தனர். மங் கல மகளிர் விளக்கை ஏற்றி அந்திக்கால வேலைகளைச் செய்தனர். காட்டு மக்கள் பரணிலிருந்து தீக்கடை கோலால் நெருப்பை உண்டாக்கினர். மேகம் மலை யிடத்தைச் சூழ்ந்து கறுத்தது. காட்டு விலங்குகள் ஓசையிட்டன. பறவைகள் மரங்களிலிருந்து ஒலித் தன. இருள் சூழத் தலைப்பட்டது.

"அப்பொழுது தலைவன் தலையைப் பார்த்து 'நின் னைப் பலர் அறிய விரைவில் மணம் புரிவேன், கலங்கா திரு' என்று கூறிக் கன்றுடன் வரும் பசுவைப் போல எங்களைத் தொடர்ந்து வந்து நமது ஊர் நீர்த்

துறையிடத்து எங்களைவிட்டுப் பிரிந்தான். அப்பெருந் தகையை மணக்கவேண்டுமென்பதே தலைவியின் உள்ளக்கிடக்கை. அன்னையே, திருமணம் இதுவரை கைகூடப் பெருமையால், தலைவி கண்கலங்கி நிற்கின்றாள். அவளது மெலிவிற்கு இதுவே காரணம்"

# 9. பட்டினப் பாலை

## முன்னுரை

காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிப் பாலைத் திணையில் அமைந்ததாதலின் இப்பாட்டுப் பட்டினப் பாலை எனப் பெயர் பெற்றது. இது வேற்று நாட்டுக்குச் செல்லத் தொடங்கிய தலைவன் தனது நெஞ்சை நோக்கி, 'தலைவியைப் பிரிந்து வாரேன்' என்று தனது செலவை நிறுத்திக் கூறும் கூற்றுகக் கரிகாற் சோழனைக் **கடியலூர் உருத்திரங் கண்ணனுர்** பாடியது. இப்பாட்டு 301 அடிகளை உடையது. இப்பாடலைக் கேட்டு உவந்த கரிகாற் சோழன் உருத்திரங்கண்ணனுருக்குப் பதினறு இலட்சம் பொன் பரிசாக அளித்தனன் என்று நூல்கள் கூறும்.

## காவிரியாற்று வளம்

காவிரியாறு மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றிக் கடலிற் பாயும். வெள்ளி என்னும் விண்மீன் தான் நிற்பதற்குரிய வட திசையில் இல்லாது, தென் திசையிற் சேரினும் வானம் பொய்ப்பினும் பொன் கொழிக்கும் காவிரியில் நீர் வற்ருது. இத்தகைய வளமுடைய காவிரி பாயப் பெற்ற நாடு சோழ நாடு.

## மருத நில வளம்

மருத நிலத்தில் ஊர்கள் நெருக்கமாக இருக்கும். வயல்கள் மிக்க விளைச்சலை நல்கும். கருப்பஞ்சாறு

காய்ச்சும் கொட்டில்களில் எழுந்த இனிய புகை படுவ தால் வயலில் உள்ள நெய்தற்பூ வாடும். எருமைக் கன்றுகள் செந்நெற் கதிர்களை வயிறார உண்டு, நெற் குதிர்களின் நிழலில் உறங்கும். செழித்த வயல்களில் குலைத் தெங்கும், குலை வாழையும், காய்க்கமுகும், மஞ்சளும், பல்வேறு மரங்களும், குலைகளையுடைய பனை யும் நெருங்கி வளரும். ஊர்களில் உள்ள மனைகளின் முற்றத்தில் நெல் உலரவைக்கப்பட்டிருக்கும். அதனைக் கோழிகள் தின்னுதபடி சிறு பெண்கள் காவலாக இருப் பர்; நெல்லைத் தின்னும் கோழிகளைத் தம்முடைய மகரக் குழைகளால் எறிந்து ஓட்டுவர். கால்களில் தண்டை அணிந்த சிறுவர் உருளைகளை யுடைய சிறு தேர்களை முற்றத்தே உருட்டி விளையாடுவர். முன்னர்ப் பெண்கள் எறிந்த மகரக் குழைகள் அத் தேர் உருளை களின் போக்கைத் தடுக்கும்.

### நெய்தல் நிலத்தில்

சோழ நாட்டைச் சேர்ந்த பல ஊர்களிலும் சென்று உமணர் உப்பை விற்ற விலைக்கு நெல்லைப் பெறுவர்; அதனைப் படகுகளில் ஏற்றிக்கொண்டு தத்தம் நெய்தல் நில ஊர்கட்குச் செல்வர். தோப்புக் களை அடுத்துப் பூஞ்சோலைகள் இருக்கும். அப்பூஞ் சோலைகளில் பொய்கைகள் இருக்கும். அப் பொய்கை களில் மணம் நிறைந்த பன்னிற மலர்கள் மலர்ந் திருக்கும்.

### நகரத்தில்

இத்தகைய வளமிக்க சோழ நாட்டின் தலைநகரம் காவிரிப்பூம்பட்டினமாகும். அப்பெருநகரின் மதில்

திண்ணியது; புலி அடையாளம் தீட்டப் பெற்ற வலிய கதவுகளைக் கொண்டது. நகரத்தில் உணவுச் சாலைகள் பல உண்டு. அவற்றில் வடிக்கப்படும் கஞ்சி ஆற்று வெள்ளம் போலப் பெருகி ஓடும். அதனைப் பருகச் செல்லும் எருதுகள் தம்முள் போரிடலால், அது மண் கலந்து சேருய்விடும்; தரை காய்ந்த பிறகு அதன் மீது தேர்கள் ஓடுதலால் புழுதியாகி மேலெழும்; எழுந்து, பலவகை ஓவியங்கள் தீட்டப் பெற்ற வெண் சுவருடைய கோயில்கள் மீது படிந்து, அவற்றை மாசுபடுத்தும். நகரத்தில் அமணப் பள்ளிகள் உண்டு. அவை ஒவ்வொன்றிலும் குளமுண்டு. சடைமுடி யுடைய முனிவர் இளமரக்காவில் தங்கியிருப்பர். அவர்கள் நெருப்பில் நெய் பெய்து ஓமம் செய்வர். அங்குள்ள குயில்கள் ஓமப் புகையைக் கண்டு மேகம் என மருண்டு காளி கோட்டத்தில் உள்ள புருக் களோடு பழமரப் பொந்துகளில் தங்கும்.

## பரதவர் செயல்கள்

பட்டினப்பாக்கத்தில் உள்ள பரதவர் இருல் மீனின் இறைச்சியையும் வயல் ஆமையின் இறைச்சியையும் சமைத்து உண்பர்; வறண்ட அடம்பின் பூவையும் ஆம்பற் பூவையும் பறித்துச் சூடுவர்; பொதுவிடத்தே மிகப் பலராகக் கூடுவர்; ஆட்டுக் கடாக்களையும் கவுதாரி களையும் போரிடச் செய்து பொழுது போக்குவர்; பின்னர் மற்போரும், கருவிப் போரும் புரிவர். அதன் பிறகு கவண்கல் வீசி விளையாடுவர். அக்கல்லெறிக்கு அஞ்சிக் குட்டிகளை ஈன்ற பன்றிகளும் கோழிகளும் திசைகெட்டு ஓடும். பரதவர் முழுநிலா இரவில் மீன்

பிடிக்கச் செல்லார்; தழை உடை யணிந்த தம் மகளிரோடு மணல் முற்றத்தே கூடுவர்; அவ்விடத்தில் சினைச் சுறுவின் கொம்பை நடுவர்; அதனிடத்து ஏறிய தெய்வத்தை வழிபடுவர்; அதன்மீது வெண்டாளிப் பூவால் கட்டிய மாலையை அணிவர்; தாழம் பூவைச் சூடுவர்; பனையிலிருந்து இறக்கிய கள்ளையும், நெல்லாற் சமைத்த கள்ளையும் குடித்துக் களித்து விளையாடுவர். பிறகு அவர்கள் கடற்கரையில் கூடிக் காவிரி கடலொடு கலக்கும் இடத்தில் நீராடுவர்; நீராடியபின் கடல் நீர் உப்பு நீங்கும் பொருட்டு ஆற்று நீரில் குளிப்பர்; நண்டுகளைப் பிடித்தாட்டுவர்; பரவி வருகின்ற அலைகளைக் காலால் மிதிப்பர்; மணலினுல் பாவைகள் செய்வர்; உயர்ந்த மாடங்களிலிருந்து செல்வமகளிர் பாடும் பாடல்களைக் கேட்டு மகிழ்வர். இரவில் உயர்ந்த மாடங்களில் விளக்குகள் எரியும். வைகறையில் கட்டுமரங்களிற் செல்லும் பரதவர் அவ் விளக்குகளை அறிவர். காலையில் கடைத் தெருவில் பலரும் வழிபடும் தெய்வங்களுக்குப் பாடுமகளிர் பக்திச் சுவையுடைய பாடல்களைப் பாடுவர் அக் கோவில்களில் புல்லாங்குழல், யாழ், முரசு முதலிய இன்னிசைக் கருவிகள் ஒலிக்கும்; விழாக்கள் சிறப்புற நடைபெறும்.

### பண்டகசாலை

பரதவர் வாழும் அகன்ற தெருவில் காவலைக் கொண்ட பண்டசாலை உள்ளது. உள்நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பண்டங்கள் சுங்கம் மதிப்பிடப்பட்டு, புலி முத்திரை இடப்பட்டு, கப்பல்

களில் ஏற்றும்பொருட்டுப் பண்டசாலை முற்றத்தே அடுக்கிக் கிடக்கும். கப்பல்களில் இருந்து இறக்கப் பட்ட பண்டங்கள் புலிப் பொறி இடப்பெற்றுச் சுங்கம் மதிப்பிடப் பண்டசாலை முற்றத்தின் ஒரு பக்கத்தே குவிந்து கிடக்கும். சுங்கம் கொள்பவர் சிறுபொழுதும் ஓய்வின்றி நாடோறும் சுங்கம் கொள்வர். நாய்களும் ஆட்டுக் கடாக்களும் பண்டசாலை முற்றத்தில் கிடக் கும் மூட்டைகளின் மீது ஏறிக் குதிக்கும்.

**மகளிர் விழாக் காணல்**

உயர்ந்த மாடங்கள் பல ஏணிப் படியை உடை யனவாய் இருக்கும். வானளாவிய மாடங்களில் வாழ்ந்த மகளிர் சிவந்த அடியினர்; பவள நிறத்தினர்; மெல்லிய உடையினர்; கிளி மொழியினர்; மயிலின் சாயலர். அவர்கள் தென்றற் காற்று வீசும் சாளரங் களின் எதிரே நின்று கடைத் தெருவை நோக்குவர்; அப்போது கடைத் தெருவில் சிலர் பாடுவர்; சிலர் புல்லாங்குழல் ஊதுவர்; சிலர் யாழ் வாசிப்பர்; சிலர் முழவு கொட்டுவர்; சிலர் முரசொலிப்பர். அந் நிலையில் முருகக் கடவுள் முதலிய தெய்வங்கட்கு விழா கொண்டாடப்படும். அப்பொழுது மேற்சொல் லப்பட்ட மாடங்களில் உலாவும் மகளிர் தம் கைகளைக் குவித்து வணங்குவர்.

**கடைத்தெருவில் பலவகைக் கொடிகள்**

வீட்டில் உலவும் தெய்வங்கள் மகிழும்படி வாயில் களில் கொடிகள் நாட்டப்பட்டிருக்கும். கடைத்தெரு வில் இரண்டு வரிசைகளிலும் எடுத்த கொடிகள் கரும் பின் பூக்களைப்போல விளங்கும். கூலவகைகளை நிரப்

பித் தாழிடப் பெற்ற அரைகளில் கொடிகள் கட்டப் பட்டிருக்கும். பல நூல்களை நன்கு கற்ற ஆசிரியர் கள் பிறரை வாதுக்கழைக்கக் கொடிகள் கட்டியிருப்பர். துறைமுகத்தே நிற்கும் பலவகைக் கப்பல்கள் மீது கொடிகள் கட்டப்பட்டிருக்கும். 'இஃது இன்ன கடை' என்பதை மக்களுக் குணர்த்த ஒவ்வொரு கடையிலும் ஒவ்வொரு வகைக் கொடி கட்டப்பட்டிருக்கும். இவ் வாறு தெருக்களில் எண்ணிறந்த கொடிகள் கட்டப் பட்டிருத்தலால் ஞாயிற்றின் ஒளிக்கதிர்கள் தெருவிற் பெரிதும் படுவதில்லை என்னலாம்.

## கடைத்தெருவில் பலநாட்டுப் பண்டங்கள்

மலைநாட்டு மிளகும் பொன்னும், பொதிய மலை யிற் பிறந்த சந்தனமும் அகிலும், தென் கடலில் பிறந்த முத்தும், கீழ் கடலில் பிறந்த பவளமும், கங்கை யாற்றுப் பாய்ச்சலால் விளைந்த பொருள்களும், காழக (பர்மா) நாட்டுப் பொருள்களும், சீனம் முதலிய இடங் களிலிருந்து வந்த பனிநீர் முதலியனவும், காவிரியாற் றுப் பாய்ச்சலால் விளைந்த பொருள்களும், இலங்கைப் பொருள்களும், பிறவும் புகார் நகரத்துக் கடைத்தெரு வில் மிகுதியாகக் குவிந்து கிடக்கும். வெளிநாடுகளி லிருந்து வந்த பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் நகரில் குடியிருப்பர்.

## வேளாளர் இயல்பு

வேளாளர் அருள் ஒழுக்கம் நிறைந்தவர். அவர் கள் உபதேசத்தால் வலைஞர் முற்றத்தில் மீன்கள் பாய்ந்து திரியும். ஊன் விற்பவர் குடிசையில் ஆடு

முதலியன திரண்டு இருக்கும். வேளாளர் களவு செய்பவரை அத்தொழிலினின்று நீக்குவர் ; அந்தணரது புகழை நிலை நிறுத்துவர். பலர்க்குத் தானம் அளித்தல் வேளாளர் இயல்பு.

**வணிகர் இயல்பு**

வணிகர் நுகத்தில் தைத்த பகலாணியைப் போல நடுநிலை பிறழாத நெஞ்சினர் ; மிகச் சிறிய அளவு இலாபம் வைத்துப் பொருள்களை விற்பவர்; தாம் கொடுக்கும் பொருளுக்கு ஏற்பவர் சரக்கையும் கொள்வர்; அவ்வாறே தாம் வாங்கும் பொருளுக்குக் குறையாத மதிப்புடைய பொருளையே கொடுக்கும் இயல்பினர்.

**கரிகாலன் வீரம்**

வலிய புலி கூட்டில் அடைபட்டு வளர்ந்தாற் போலக் கரிகாலன் பகைவரது சிறையிலிருந்து வளர்ந்தான்; சிறையிலிருந்து வெளியேற விரும்பி, காவலரை வாளால் துணித்து, அவ்விடத்தினின்றும் அகன்றான். தனது அரசுரிமையை முறைப்படி பெற்றான். பின்னர் அவன் தனது நாட்டை உருவாக்க நாற்படைகளுடனும் சென்றான். பகைவர் நாடுகளைக் கைப்பற்றினான்; அவனால் கைப்பற்றப்பட்ட ஊர்களில் கூகைகள் இருந்து குழறின; மதில்கள் அழிந்தன. எத்துணை அரசர்கள் எதிர்த்து வரினும் தான் ஒருவனாய் நின்று வெல்ல வல்லவன் என்று பெருமிதம் கொண்டிருந்த பாண்டியனை வென்றான். அவன் நினைத்தவற்றை நினைத்தவாறே முடிக்கவல்லவன். அருவா

நாட்டார், குட்டநாட்டார், வடநாட்டார், இருங்கோ வேளிர் முதலியவர்களைத் தனக்குக் கீழ்ப்படுத்தினன். கரிகாலன் காடுகெடுத்து நாடாக்கியவன்; ஆங்காங்குக் குளங்களை அகழ்வித்தவன்; உறையூரில் கோயில்களை யும் குடிகளையும் நிலைபெறச் செய்தவன். இங்ஙனம் பல நாடுகளை வளப்படுத்தியதனால் அவன் கரிகால் வளவன் எனப் பெயர் பெற்றான்.

## புகாரில் அம்பலம்

புகாரில் அம்பலம் ஒன்று உண்டு. அதனில் அருள் தறி நிறுத்தப்பட்டுள்ளது. சிறை செய்யப்பட்ட பகைவர் நாட்டு மகளிர் துறையில் நீராடி அம்பலத்தை மெழுகுவர்; விளக்கை ஏற்றிவைப்பர். அங்குப் பல நாட்டாரும் சென்று வணங்குவர்.

## தலைவன் செய்த முடிவு

“நெஞ்சமே, என் காதலி இங்கே தனித்து இருப்ப, நான் மேற்சொல்லப்பட்ட பல சிறப்புகளை உடைய காவிரிப்பூம்பட்டினத்தையே பரிசிலாகப் பெறுவேனாயினும்,திருமாவளவனுடைய செங்கோலைப் போல் குளிர்ந்த தோள்களை உடைய தலைவியைப் பிரிந்து, அவ்வரசன் பகைவர் மேல் செலுத்தும் வேலைக் காட்டிலும் மிக்க வெப்பத்தை உடைய காளத் தைக் கடந்து வாரேன்” என்று கூறித் தலைவன் தலைவியைப் பிரிய மனமில்லாது தங்கினான்.

# 10. மலைபடு கடாம்

## (1) கூத்தரின் யாத்திரை

### முன்னுரை

மலைபடுகடாம் – இது கூத்தர் ஆற்றுப்படை என்றும் கூறப்படும். வட ஆற்காடு மாவட்டத்துச் செங்கம் என்னும் ஊரை அடுத்துள்ள மலைப்பகுதியில் வாழ்ந்த நன்னன் என்ற வள்ளலிடத்துப் பரிசுபெற்று மீண்டு வந்த கூத்தன் ஒருவன், மற்றொரு கூத்தனை அவ்வள்ளல்பால் ஆற்றுப்படுத்தியாக இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கவுசிகனார் பாடியது இப்பாடல். இது 583 அடிகளை உடையது.

இப்பாடலில் பலவகை இசைக்கருவிகளின் பெயர்கள், யாழின் வருணனை, மலைச்சாரலின் வளம், ஐவகை நிலமக்களும் வழிப்போக்கரை விருந்தூட்டி உபசரிக்கும் இயல்பு ஆகியனவும், நன்னனது ஊரின் சிறப்பும், அவன் பரிசிலரை உபசரிக்கும் திறமும், பிறவும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

### வாத்திய வகைகள்

கூத்தர் சிலர் பலவகை இசைக் கருவிகளை, அவை இடுதற்குரிய உறைகளில் இட்டுச் சுருக்கிட்டு பலாக்காய்க் கொத்துக்கள் போலத் தோன்றும்படி தம் தோள்கள்மீது சுமந்து செல்லுகின்றனர். அங்ஙனம் அவர்கள் சுமந்து சென்ற கருவிகள் யாவை?

மத்தளம், வெண்கலத்தால் இயன்ற தாளம், மயில் இறகும் தழையும் கட்டப்பட்ட கொம்பு, யானையின் துதிக்கை போன்ற நெடுவங்கியம், குறிய தூம்பு, இனிய குழல், மத்திம மாகிய ஓசையை எழுப்பும் கரடிகை, எல்லரி, ஒருகண்மாக்கிணை, சிறுபறை முதலியன கூத்தர் தூக்கிச் செல்லுகின்ற இசைக் கருவிகளாகும்.

### மலைப் பாதை

கூத்தர் செல்லுகின்ற மலைப்பாதையில் முட் செடிகள் படர்ந்திருக்கின்றன ; அழுத்தமாகிய பாறைகள் வழிநெடுகக் கிடக்கின்றன. நடந்து செல்லுதற்கு அருமையான அம்மலைப் பாதையில் அரசராணையால் காவல் வீரர்கள் இருக்கின்றனர். அவர் தம் மனைவி மக்களுடன் அங்கு உறைகின்றனர். வழிச் செல்வார்க்கு எவ்வகைத் துன்பமும் நேராமல் பாது காப்பது அவர்தம் தொழிலாகும். செல்லுதற்கரிய அப்பாதையில் கூத்தர் அஞ்சாது செல்லுகின்றனர். வழியில் உள்ள பெரிய மர நிழலில் கூத்தர் தலைவர் தம் பரிவாரங்களுடன் தங்கி இளைப்பாறுகின்றார். அவருடன் வந்த கூத்தரும் கூத்தியரும் ஓய்வு பெறுகின்றனர்.

## (2) பரிசில் பெற்ற கூத்தன் ஆற்றுப்படுத்தல்

### புதிய கூத்தன் பேச்சு

கூத்தர் தலைவன் மேற்சொன்னவாறு இளைப்பாறுகையில் புதிய கூத்தன் ஒருவன் தன் பரிவாரத்துடன்

அவ்வழியே வருகின்றான். அவன் **நன்னன்** என்னும் வள்ளலிடத்தில் பரிசில் பெற்று மீண்டு வருபவன். அவன் கூத்தர் தலைவனையும், அவனைச் சூழ இருக்கின்ற ஆட்களையும் அன்புடன் நோக்கி நன்னன் சிறப்பையும், அவன் நாட்டிற்குச் செல்லவேண்டும் வழியையும், நன்னனது மலைநாட்டுச் செழுமையையும் கூறி அவர்களை அவ்வள்ளலிடத்துச் செல்லுமாறு தூண்டுகின்றான்.

## நன்னன் சிறப்பு

" சூதர், மாதகர், பாணர், கூத்தர் முதலியவர்க்குப் பலவகைப் பரிசில்களை அளிக்கும் இயல்புடையவன் நன்னன். அவன் அவையில் புலவர் எப்பொழுதும் குழுமியிருப்பர். அவர்கள் தாம் தாம் கற்றவற்றை எடுத்து விளக்கிப் பரிசில் பெறும் விருப்பத்தையுடையவர். அன்றியும் புலவர்கள் போல நடித்துத் தாம் எண்ணியதை விளக்கிக் கூற இயலாது துன்புறும் புலவர்களின் உள்ளக் கருத்துக்களை விளங்கக் கூறி, அப்புலவரது மானத்தைக் காக்கும் இயல்பினருமாவர். நன்னன் அப்பெருமக்களது பேரறிவினை வியந்து பாராட்டிச் சிறக்கச் சன்மானம் அளிப்பவன்.

## முன்னோர் சிறப்பு

" நன்னனுடைய முன்னோர் போருக்கஞ்சாத தீரர். பகைவர் நாடு சேய்மைத்து ஆயினும், அவ்விடத்தே சென்று, முன்னணி வீரராகிய காலாட் படையினரைக் கொன்று, யானைப் படைமேற் சென்று வேற்போர் புரிவர் ; அங்ஙனம் போர் புரிந்து வெற்றி பெற்ற வீரர்கட்குப் பரிசில்கள் பல வழங்குவர். அவ்வீர அரச

மரபில் வந்த நன்னன், பகைவர் பலரை வென்றவன். அவன் ஆலமுண்ட இறைவன் குடிகொண்டுள்ள **நவிரம்** என்னும் மலையிடத்து இருப்பவன். அவனது கோட்டையைச் சுற்றிலும் ஆழ்ந்த அகழி உண்டு. அவ்வகழியில் இரைதேடி உலாவும் முதலைகள் உண்டு. அவனது கோட்டை மதில் வானைத் தீண்டும் உயரம் உடையது.

## வழிக் காட்சிகள்

" நன்னனது நாட்டை அடைய வேண்டுமாயின் நீங்கள் பல இடங்களைக் கடக்க வேண்டும். அவ்விடங்களின் அருமையைக் கூறுவேன், கேட்பீராக! கொல்லை நிலத்தில் முசுண்டை, கார்த்திகை நட்சத்திரம் போல வெண்மையாக மலர்ந்திருக்கும். வயல்களில் முளைத்த எள்ளுப்பயிர்கள் நீலமணிபோல விளங்கும். தினைக்கதிர்கள் விளையாட்டாகப் பொருகின்ற யானைக் கன்றுகளையும் இணைந்த கைகளையும் ஒத்துக் காணப்படும். அரிவாளின் வாயையொத்த காய்கள் அவரைக் கொடிகளிற் காணப்படும். பாதையில் எருமை கிடந்தாற் போன்ற பாறைகள் காட்சியளிக்கும். வாதம் செய்பவனது இணைத்த கைவிரல்களைப்போல வரகின் இரட்டித்த கதிர்கள் முற்றி இருக்கும். காட்டில் உள்ள தோரை நெல் முற்றி அவல் இடிக்கும் பருவத்தை அடைந்திருக்கும். மண்வெட்டியால் கொத்தப்பெற்ற தோட்டங்களில் விதைத்த வெண்சிறு கடுகு நெருக்கமாக வளர்ந்திருக்கும். இஞ்சிக் கிழங்கு, கருணைக் கிழங்கு முதலியன செழுமையாக விளைந்திருக்கும். மலைகளைச் சூழ

நெருங்கி வளர்ந்திருக்கும் வாழைகளின் கொத்திகள் யானையைக் கொத்தும் வேல்களைப் போல மலைப்பக் கங்களைக் கொத்தும். நெல் முற்றிய பெரிய மூங்கில் கள் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருக்கும். காற் றின் அசைவால் நாவல் மரம் கரிய பழங்களைப் பாறை யில் உதிர்க்கும். மாமரங்களில் பழங்கள் தொங்கும். பலாப் பழங்கள் வெடித்து விதைகளைச் சிந்தும். பலா வின் கீழிடங்களிலும் மேலிடங்களிலும் கூத்தருடைய மத்தளம் போன்ற காய்கள் தொங்கியிருக்கும். கரும்பின் தண்டு பாத்தி தெரியாதபடி திரண்டிருக்கும். மலைப்பக்கத்தே ஆந்தைகள் மாறி மாறி அலறும்.

" மலைப் பக்க மெங்கும் மணம் செய்த மனைபோல் நறு நாற்றம் கமழும். அங்கு வாழும் கானவர் தேனை யும் கிழங்கையும் பன்றி இறைச்சியையும் மான் முதலிய வற்றின் இறைச்சிகளையும் உண்டு களிப்பர். நீவிர், அவர்களுடன் தங்குவீராயின், அவ்வினிய உணவுப் பொருளைப் பெறுவீர்;மறுநாள் காலை எழுந்து அசோக மரத்தினுடைய வழியிற் செல்லுவீராக. மலைப்பக்கத் துச் சீறூர்களிற் சென்று, 'நன்னது கூத்தர்கள் யாம்' என்று கூறுவீராக. மலைநாட்டு மக்கள் நும்மை வர வேற்று நெய்யில் பொரித்த இறைச்சியுடன் தினைச் சோற்றை உண்ணும்படி தருவர்.

**நன்னனது மலைநாடு**

" மலைமீதுள்ள நன்னனது நாடு மிக்க செழிப்புடை யது. உடும்பின் இறைச்சியுடன் மடமானின் தசை யும் கலந்து அந்நாட்டவர் உண்பர் ; மூங்கிற் குழாய்க் குள் இருந்து முற்றிய தேறல் செய்த கள்தெளிவைப்

பருகுவர் ; பிறகு நெல்லால் சமைத்த கள்ளையும் உண்டு களிப்பர். நீங்கள் இவையனைத்தையும் அம் மலை நாட்டிற் காணலாம். அம் மலைநாட்டுக் குறவர் மகள் பலாக்கொட்டையின் மாவை மோருடன் கலந்து மூங்கிலரிசியைத் துழாவிக் களி ஆக்குவாள்.

" நீவிர் அந்நாட்டைவிட்டு மேலும் செல்வீராக. மிகுதியாகப் பலரும் போகாத வழியில் உள்ள வெடிப் புக்களில் பாம்புகள் பதுங்கிக் கிடக்கும். அவ்வழிச் செல்லாது வலப்பக்கத்தே உள்ள வழியிற் செல்வீ ராக. அப்பாதையில் தினைப்புனங்கள் நெருங்கியிருக் கும். அங்குள்ள உயர்ந்த பறவைகள் தினைக்கதிரைக் கவர்ந்து செல்லாமல் குறவர் பரணில் ஏறியிருந்து பாதுகாப்பர். அவர்கள் யானைகளை நோக்கிவிடும் கவண்கற்கள் கூற்றுவனைப் போல உயிர் போக்கும் இயல்புடையன. நீங்கள் அவற்றுக்குத் தப்பிச் செல்ல வேண்டும். வழியில் காட்டாறு காணப்படும். அதன் ஓரமாகச் செல்லும்பொழுது மரங்களிற் சுற்றிக் கிடக் கும் கொடிகளைப் பிடித்துக் கால் வழுக்காதபடி கவ னித்துச் செல்வீராக. ஆழ்ந்த குளங்களுக் கருகே நிலத்தை மறைத்துப் பாசியிருக்கும். நீங்கள் அதனைக் கவனித்து வழி நடத்தல் வேண்டும்.

### நவிரமலையருகில் காட்டுவளம்

"இத்தகைய காட்டு வழியைக் கடந்து, காவலைக் கொண்ட நவிர மலையை அடைகின்ற பொழுது காணப்படும் மலைவளம் கண்ணுக்கினிய விருந்தளிப்ப தாகும். அங்குக் காட்டு மயில்கள் தோகைவிரித்து ஆடி ஆடி இளைத்து நிற்கும். நெடிய மூங்கிலின் கவடுகளில்

கடுவன்கள் பாயும். நீண்டுயர்ந்த மலைச்சரிவுகளில் தேன்கூடுகள் காணப்படும். கானவர் யானைக்கும் எட்டாத பரணிலிருந்து எய்த அம்பு தன் மார்பில் பாயப்பெற்ற பன்றி வீழ்ந்து கிடக்கும். கானவர் அதை வாட்டித் தோலை உரித்துத்தின்று சுனை நீரைக் குடித்து இளைப்பாறுவர். நீங்கள் அவ்விடத்தே சென்று, மலைக் குகைகளில் தங்கி இராக் காலத்தைக் கழிப்பீராக; மீண்டும் விடியற்காலையில் எழுந்து காட்டுவழியே செல்வீராக. வழியில் பறவைக் கூட்டம் தங்கத் தக்க ஆலமரங்கள் நிறைந்திருக்கும். அவற்றுக் கப்பால் நிழல்மரங்கள் நெருங்கிய குறுங்காடு இருக்கும். அதற்கருகில் ஒரு பாறை மீது தங்கி உங்கள் இசைக் கருவிகளை ஒலிப்பீர்களாக. உடனே, மலைநாட்டைக் காக்கும் கானவர் உங்களிடம் ஓடி வருவர்; உண்ணற்கினிய பழங்களையும், சூடற்கினிய பூக்களையும் தருவர்; பிறகு போதற்கு அருமையான வழியில் உங்கட்கு முன்னே வழிகாட்டிச் செல்வர். அவர்கள் உதவியால் குறியவும் நெடியவுமாகிய மலைகளை முறையே கடந்து செல்லுவீராக.

### பலவகை ஆரவாரம்

"அம் மலைப்பாதையில் குரங்குகள் பலாப்பழத்தைத் தோண்டுதலால் அப்பக்கம் முழுவதும் தேன் மணம் கமழும். கானவர் யானையைப் பிடிக்க முயல்வதால் மலைப்பக்கத்தில் ஆரவாரம் எழும். முட்பன்றியால் கொல்லப்பட்டவர் பொருட்டு மற்றவர் அழும் ஆரவாரம் ஒருபால் எழும். தம் கணவர் மார்பில் புலி பாய்ந்து உண்டாக்கிய புண்ணின் நோயை அவர்

உணராமலிருத்தற்காக கொடிச்சியர் பாடும் பாடல் ஒலி ஒருபக்கம் முழங்கிக் கொண்டிருக்கும். வேங்கைப் பூவைச் சூடுவதற்கு மகளிர் 'புலி புலி' என்று செய்யும் ஆரவாரம் ஒருபால் கேட்கும். புலியைக் கண்டு அல றும் பிடியின் ஓசை ஒருபால் எழும். மற்ருெரு பால் தேனெடுப்போர் ஆரவாரம் கேட்கும். விடியற் காலத்தில் கள்ளினை உண்ட குறவர் மான்தோல் போர்த்த பறை ஒலிக்க, உச்சி மலையில் தம் பெண்டி ருடன் கூடிக் குரவையாடுவர். மலைச்சரிவில் பாய்ந்து வரும் அருவிகள் இடைவிடாது ஓசையை உண்டாக் கும். தட்டையைப் புடைத்துத் தினைப்புனம் தோறும் கிளிகளை ஓட்டும் மகளிர் ஓசை ஒருபால் எழும். எரு மைக் கடாக்கள் காட்டு மல்லிகையும் குறிஞ்சி மலரும் வாடும்படி ஒன்ருேடொன்று பொருது செய்யும் ஆர வாரம் ஒருபால் கேட்கும். ஒருபால் கரும்பாலையின் ஓசை எழும். தினையைக் கொத்தும் மகளிரது வள் ளைப்பாட்டு ஓசையும், பன்றி கிழங்குகளை அகழாமல் காப்பவன் கொட்டும் பறையோசையும் மலைப்பக்கத்தே அடிக்கடி கேட்கும். நீங்கள் இவ்வோசைகளைக் கேட்டுச் சென்று மலைநாட்டு ஊர்களில் தங்குவீர்கள். அங்குக் காண்பதற்கினியவற்றைக் கண்குளிரக் கண்டும், கேட்கத் தகுவனவற்றைக் காது குளிரக் கேட்டும், உண்பதற்கினிய பல உணவுப் பொருள் களை விரும்பி உண்டும் மகிழ்வீராக; பிறகு விறலிய ரும் நீவிரும் மலைவாழ் தெய்வங்களைத் தொழுது வழி நடப்பீராக.

## மீண்டும் வழிநடத்தல்

"மேலும் செல்ல, மலை உச்சியிற் படிந்த மேகங்கள் சிறு துளிகளைத் தூவாநிற்கும். அத்துளிகளால் உங்கள் இசைக் கருவிகள் நனையாதபடி மலைக் குகைகளில் தங்கிச் செல்வீராக. வழியில் நன்னனது யானைப் படையைக் கொண்ட அரண்கள் உண்டு. யானைகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து பொருதாற்போல நெருங்கின குன்றுகளிடத்து செழுமையுற்ற பல காடுகள் உண்டு. அக்காடுகளில் நன்னனுல் பாராட்டப் பெற்ற வீரர்களின் நடுகற்கள் உண்டு. நீவிர் அவற்றை வழிபட்டுச் செல்வீராக. செல்லும் பொழுது காட்டில் புலி பாய்ந்து கொன்ற பெண்மானை நினைந்து கலைமான் ஓசையிடும். வில்லின் ஓசைக்கு அஞ்சிய ஆண்மான் காட்டிற்குள் விரைந்தோடும். காட்டில் பசுக்களின் இனிய பாலை ஆயர் கொண்டுவந்து கலங்களில் சொரிவர். ஆயர்பாடிக்கு நீவிர் செல்வீராயின், பாற்சோற்றையும் பாலையும் பெறுவீர். காட்டில் அரசன் ஆணையால் நாடுகாவல் புரியும் வேடர்கள் உங்கட்குக் கள்ளையும் கிழங்குகளையும் உதவுவர். அவர் காட்டிய வழியே நீவிர் செல்வீராக. காட்டின் ஒரு பகுதியில் அவரை விதையையும் மூங்கிலரிசியையும் புளியுடன் கலந்து ஆக்கிய குழைந்த புளியின் கூழை உணவாகப் பெறுவீர்; அதனேடு இறைச்சி கலந்த நெற்சோற்றையும் தினைமாவையும் பெறுவீர்.

## நன்னனது மருதவள நாடு

"நன்னனது மருதவள நாட்டில் காஞ்சி மரங்களும், நீர் நிறைந்த ஆறுகளும், விளை நிலங்களும், பொழில்

களும் மிக்குள்ளன. ஆங்காங்கு ஊர்கள் காணப்படும். அவ்வவ்வூர்களுள் ஒரு நாள் தங்கிச் செல்லினும் பல நாள் இருப்பினும் நீங்கள் நல்ல உணவைப் பெறுவீர்கள். நெய்தல் நில மகளிர் தம் ஆடவர் கொண்டு வந்த வாளைமீன் தசையில், தூண்டிலில் பிடித்த வராலின் தசையைக் கலந்து சமைத்துக் கள் தெளிவுடன் விடியற் காலத்தில் நெல் அடிக்கும் களங்கள்தோறும் நல்குவர். இறைச்சி கலந்த சோறும் உங்களுக்கு அங்குக் கிடைக்கும். நீவிர் அதனை உண்டு, மருதப் பண்ணை வாசித்து இளைப்பாறிப் போவீராக. * சேயாற்றங் கரையை வழியாகக் கொண்டு செல்லுங்கள்.

## நன்னனது மூதூர்

"நன்னனது மூதூர் வண்டுகள் ஒலிக்கும் குளிர்ந்த பொழில்களையுடையது; உயர்ந்த மதிலினையுடையது; கடல்போல் ஒலிக்கும் மக்கள் கூட்டம் நிரம்பப் பெற்ற அங்காடித் தெருவினையுடையது; பெரிய மாடங்களைக் கொண்ட தெருக்களையும், பல குறுக்குத் தெருக்களையும் கொண்டது; பின்னிய பல வழிகளையுடைய கோட்டைக் கோபுரவாயிலில் வாளையுடைய மறவர் வேலைச் சார்த்தி வைத்துக் காவல் புரிவர். நீவிர் அக் கோபுரவாயிலைக் கடந்து உட் செல்வீராக. கோட்டைக்குள் இருக்கும் அம்பலங்களில் பிற நாட்டுக் கூத்தர் தங்கியிருப்பர். அவர்கள் உங்களைக் கண்டு அன்போடு வரவேற்பர், நீங்கள் அங்குத் தங்கியிருங்கள்.

* வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள செய்யாறு.

## அரசனது தலைவாயிற் சிறப்பு

"அரசனது தலைவாயிலில் உள்ள மராமரத்தில் காட்டுப் பசுவின் குழவியும், யானைக் கன்றும், கரடியின் குட்டியும், கீரியும், ஆண் உடும்பும், மலையிடத்தே ஆடும் மயிலும், சேவலும், பலாப் பழங்களும், நீல மாம்பழங்களும், மணம் பொருந்திய நறைக் கொடியும், நூறைக் கிழங்கும், கருப்பூரமும், மாணிக்கமும், யானைக் கொம்புகளும், மிளகுக் கொத்தும், தேன் கூடு களும், காந்தள், முல்லை, திலகம் முதலிய பூக்களும், மூங்கில் குழாயில் ஊற்றிய கள் தெளிவும், எருமைத் தயிரும் நெருங்கியிருக்கும். இவை எல்லாம் அவனது மலை நாட்டுப் பண்டங்களாகும். நீங்கள் அவ் வாயிலைக் கடந்து உட்செல்வீராக. அங்கு முழவும் புல்லாங்குழலும் ஒலிப்ப, விறலியர் முறைப்படி கடவுளை வாழ்த்துவர். பிறகு நீங்கள் நன்னனைப் பார்த்து, 'மிக்க புகழுடைய நினது முன்னோர் தம் புகழ் நிறுத்தி மறைந்தனர். நீயும் அவர்களைப் பின் பற்றிக் கொடையிற் சிறந்து விளங்குகின்றனை' என்று பாராட்டிக் கூறுங்கள். உடனே அவன் தன் மனையின் முற்றத்தே உங்களை அழைத்துச் செல்லு வான்; கொலு மண்டபத்திலிருந்து, உங்களை இனிய முகத்துடன் நோக்கி, இழைபோன இடம் அறியாத நுண்ணிய நூலால் செய்த ஆடைகளை உடுக்கும்படி வழங்குவான்; நெல்லரிசிச் சோற்றையும், பெண் நாய் வேட்டையாடிக் கொண்டுவந்த கொழுப்புடைய இறைச்சியையும் உண்ணக் கொடுப்பான். பின்னர் அவன் பல்வேறு பொருள்களையும் நீங்கள் விரும்பிய

வாறு தருவான்; இறுதியில் கூத்தர் தலைவனாகிய நீ பொற்றாமரை மலர் சூடவும், விறலி பொன் அணிகள் அணியவும் செய்து, உங்கள் உள்ளம் சிறக்கும்படி வழிகூட்டி அனுப்புவான். நீங்கள் அப் பெருமானது புகழைப் பாடிக் கொண்டு உங்கள் ஊருக்குத் திரும்புவீர்களாக!"

எங்கள் வெளியீடுகளில்
இதுவும் ஒன்று

